நவம்பர் 2017
மாதாந்த குடும்ப சஞ்சிகை

# ஒளி அரசி

மங்கையரின் தோழி
ஒளி 04 இதழ் 11
பக்கங்கள் : 104 (76 + 8 + XII + VIII)

அரசியலோ ஆபாசமோ கலக்காத அற்புத படைப்பு



## வரலாறு காணாத புத்தக வெளியீடு

புரட்சியும் புத்தகப்புரட்சியும்





காந்தப் பார்வை வேண்டுமா?

தனித்துவம் பேணுவது எப்படி?

FREE!

- O/L வழிகாட்டி
- சுயதொழில் கையேடு
- தரம் 4 திருத்தற்சேவை

வலியுடன் எழுதுகிறேன் வாசிப்பீர்களா? → 70



'தமிழ்' மாமணி

பெயர்கள் > 15
பரிசுகள் > 205,000/=

சேலையும் வேலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


திட்டமிடுவோம்

ஆசிரியர் தலைப்பு

அறிவோம் ஆயிரம்

மனோவசிய இரகசியங்கள்

கதைமூலம் ஆங்கிலம் கற்போம்

வரலாற்று ஆளுமை

அழகே அழகு

இல்லறம் இனித்திட

உண்மைச்சம்பவம்

மனதில் பட்டதும் சுட்டதும்

இலக்கிய நயம்

நீதிக்கதை

இம்மாத மங்கை

கவிதைபாடும் மனங்கள்

குட்டீஸ் குதூகலம்

சிறுகதை, தொடர்கதை

பிரம்மஞானி கேள்விபதில்

வாழ்க்கைப்பாடம்

வாழும் வரை போராடு

உளவியல் கேள்வி பதில்

அனுபவம் பேசுகிறது

நட்சத்திர இல்லத்தரசி








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# வறுமை வந்தால் வசதி வந்தால்

''வறுமை வந்தால் வாடாதே! வசதி வந்தால் ஆடாதே!'' என்ற நன்மொழிக்கு இணங்க சராசரியான விவசாய குடும்ப தலைவர் ஒருவருக்கு வறுமையும் வசதியும் மாறிமாறி வருவது வழமையே. இதன்போது தானங்களில் சிறந்த தானமான ''நிதானம்'' தவறாமல் வறுமையின் போது சரியான அளவான முறையான கடன் பெறுகையையும் குறைப்பையும் கையாளவேண்டும். இதேபோல் வசதியின் போது வறுமை வரும் என எண்ணி முறையாக சேமிக்கும் பழக்கத்தையும் பின்பற்றவேண்டும். குறிப்பாக சமுகத்தில் வெளி நாட்டு மோகம் அதிகமாக உள்ளதால் அவர்களின் பிள்ளைகளை பார்த்து நமது பிள்ளைகளும் சிலவிடயங்களில் அடம்பிடிப்பர். இதன்போது அம்மா நிதானம் தவறாமல் தமது கஷ்டத்தை சுமுகமாக பிள்ளைக்கு தெளிவுபடுத்தும் கலையை பின்பற்ற வேண்டும்.

**அடுத்து ஜப்பானிய முகாமைத்துவ படிமுறைகளில் 3 வது படிமுறை தொடர்பான விளக்கத்தினை பார்ப்போம்.**

## 3S தினமும் சுத்தம் செய்

**மாறினால் மட்டுமே முன்னேற்றம்.**

1. ஒவ்வொரு பொருளையும் சுத்தம் செய்யும் முறையையும் காலஇடைவேளையையும் தீர்மானிக்கவும்.
2. அவ்வாறே ஒவ்வொரு இடத்தையும் சுத்தம்செய்யும் முறையையும் காலஇடைவேளையையும் தெளிவாக்கவும்.
3. சுத்தம் செய்யும் கால அட்டவணையை தயார் செய்யவும்.
4. சுத்தம் செய்வதற்கான எல்லா ஆவணங்களும் எளிதில் கிடைக்குமாறு உறுதிசெய்யவும்.
5. வெளிப்பட்ட குறைபாடுகளையும் பிழைகளையும் உடனே திருத்தவும்.
6. பிழைகளின் மூலகாரணங்களைக் கண்டுபிடித்து சரிசெய்யவும்.
7. அழுக்கு மற்றும் தூசி படிவதன் மூலகாரணங்களை நீக்கவும்.

**எனவே வாருங்கள் இம்மாதம் குறைந்தது 6 விடையங்களையாவது திட்டமிடுவோம்**

______________ ______________________________

______________ ______________________________

______________ ______________________________

______________ ______________________________


______________ ______________________________

______________ ______________________________

**16 உலக சகிப்பு நாள்**

**17 அனைத்துலக மாணவர் நாள்**

**25 பெண்களுக்கு எதிரான அனைத்துலக வன்முறை ஒழிப்பு நாள்**



**ஆர்.ஜனதன் BBA**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவுகள் மெய்ப்பட

# உண்மைகள் இன்னும் உணரப்படவில்லை

மாஸ்மீடியா சேவிஸ் நிறுவனத்தின் ஆசிரியர் பீடத்தினால் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.

**ஆசிரிய பீடம் :**
தொலைபேசி : 0114320695
துரித அழைப்பு : 0718628369
தொலைநகல் : 0112506610
E-mail : oliarazi33@gmail.com
Viber - 0779046836

**கடித தொடர்புகளுக்கு :**
ஆசிரியர், 'ஒளிஅரசி'
இல. 70,
டேவிட்சன் றோட்,
கொழும்பு - 04.
அல்லது இல. 55,
பருத்தித்துறை வீதி,
நெல்லியடி.

வடிவமைப்பு
எஸ்.மகாவிஷ்ணு
எம்.ஜீவநீதன்

ஒளிஅரசி சந்தா படிவம் கையேட்டில் இணைக்கப்பட்டுள்ளது.

அன்பான வாசக நெஞ்சங்கள் அனைவருக்கும் அன்புடன் வணக்கங்களையும் நன்றிகளையும் தெரிவித்து எமது ஆசிரியர் கருத்தினைப் பகிர்கின்றோம். தேசிய ஒற்றுமை என்னும் நிலைப்பாட்டிற்காக பல இன, மதம் கடந்தவர்களின் இறப்பு எமது தேசத்தில் நிகழ்ந்துள்ளது எனினும் இம்மாதத்தில் சிறப்பாக நினைவு கூரப்படும் மாவீரர்களின் தியாகம் என்பது எல்லையற்றது என்னும் கருத்தை யாராலும் மறுதலிக்கமுடியாது. உயிரினும் மேலாக தேசத்தை நேசித்த காலத்தின் பதிவுகளாய் இருந்த வீரம் செறிந்தவர்கள் வாழ்ந்த இம் மண்ணின் சுயநிர்ணயம், சுதந்திரம் போன்ற கனவுகள் இன்றுவரை நனவா காமலே கிடக்கிறது. வாழ்வின் இருப்புகளை வாழ்வதற்கான படிநிலைகள் ஒவ்வொன்றாய் குறைந்துசெல்வதாகவே உணரத்தோன்றுகின்றது. உரிமை கள் மறுக்கப்பட்டதால் தான் உணர்வுகள் கைகோர்த்துக்கொண்டது என் னும் உண்மைநிலை இன்னும் உணரப்படாத ஒன்றாகவே உள்ளது.

விடியலை நோக்கிய பயணத்தில் ஆசைகளையும் பாசங்களையும் துறந்து இலட்சியக்கனவுகளுக்காய் உயிர்நீத்தவர்கள் மௌனமாய் உறங்கு கின்றனர். அவர் தம் கனவுகள் கனவுகளாகவே இருக்கின்றன. மக்களின் மனங்களில் இன்று வரும் விடிவு, நாளை வரும் விடிவு என நாட்களின் நகர்வு என்னவோ மன்றாட்டங்களுடன் தான் நகர்கிறது. விசாலமாய் விரிந்துகிடந்த எண்ணங்கள் ஒற்றைப் புள்ளிக்குள் ஒடுக்கப்பட்ட ஒன்றாய் மாறிப்போனது. துயர் சுமந்தவனுக்கு அதுவே நிரந்தரமாயும் வலித்தவ னுக்கு வலியே கதியென்றும் ஆகிப்போனது. நிராதரவின் உச்சக்கட்டத் தினை எண்ணுகின்ற வேளை உள்ளங்கள் அனலாய் தகிப்பதை யாரறிவர்?

கந்தகம் சுமந்தவர்கள், செங்குருதி தோய்ந்தவர்கள் அனைவருக்கும் வாழ்க்கையும் அதன் மீதான பிடிப்பும் இருக்கத்தான் செய்தது, இவர்கள் வாழ்த்தெரியாதவர்களோ ஆசாபாசங்கள் அற்றவர்களோ அல்லர். தம் மையும் தம் மீதான சுகங்களையும் விட தாம் வாழ்ந்த மண்ணையும் அம் மண்ணில் வாழ்ந்த மக்களையும் அதிகமாய் நேசித்தவர்கள். காந்தீயத்தை சேகுவேராவாய் நின்று சொன்னவர்கள். பகத்சிங்கின் மொழியறிந்து அவ் வழி நடந்தவர்கள். அதன் வலி கண்டும் வழித்தடம் பற்றியவர்கள். அவர் தம் எண்ணங்கள் நிஜமானவை, நியாயமானவை. உரிமைக்கான பயணத் தில் உறவுகளை நிராகரித்தவர்கள் இவர்கள்.

காலம் தரும் பதில் உயர்வானதாக அமையும் என்ற எதிர்பார்ப்பு பலமாய் இருந்தும் எவ்வகைத் தீர்வும் இன்றுவரை எட்டப்படாமலே காலங்கள் கழிவது வருத்தமும் வேதனையுமே. சிறந்த தீர்வுகளே அமைதியையும் நிம்மதியையும் தரவல்லது என்பதை உணர்தலே சிறப்பு. தமிழ் பேசும் சிறுபான்மை யினரை கடவுள் தான் காப்பாற்ற வேண் டும் என்னும் எண்ணமே அனைவர் மனதிலும் நிறைந்திருக்க உரிமை மீட்பு பயணத்தில் மரணித்த அனைவரி னதும் கனவுகள் மெய்ப்பட பிரார்த் திப்போமாக.

பிரதம ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அகோரப்பசி

அறுசுவை உணவு சமைத்து
அலங்கரித்து விருந்துபசரித்து
வந்தவரை வாயார கூவியழைத்து
பாய்போட்டு பந்தியிலே
பாங்காவே சாப்பாடு.
வேண்டாம் என்று சொல்லும்
வாண்டுகளுக்கு
வேண்டுமென்றே
ஊட்டிவிட்டனர் வந்தவரும்.
பந்தி முடிய முடிய
பானையை பார்த்துப்பார்த்து
பெருமூச்சு விட்டேன்,
பங்கு நமக்கு மீதமாகுமாவென, .
மனதில் சலனம், வயிற்றில் அகோரம்
எச்சி இலை எடுத்துக் கொண்டே
எண்ணங்களையும் பொறுக்கி
ஓரமாய் எறிந்தேன்.
சத்தமெல்லாம் ஓய
சுற்றமும் ஒவ்வொன்றாய் கலைய
அந்தம்மா !
சீத்தா வா தட்டை கொண்டு வா என்றாள்.
பறந்து அடித்து ஓடி நின்றேன் பக்கத்தில்.
பானையை வறண்டி
எடுத்து போட்டாள்,
முகம் மலர்வுடன் பாத்து
அடி பிடித்தது போல
பரவாயில்லை என்று
மனதிலே நிம்மதி அடையும் போதே
அடி விழுந்தது போல
இந்தா இதை நாய்க்கு போடு
இரண்டு நாள் கலகலப்பில்
ஒன்றும் உண்ணவில்லை,
இதையாவது
உண்ணட்டும் என்றாள்
கண்கள் கண்ணீரை கக்க
நாய் தட்டை நக்கி முடித்தது.
வெற்றுத் தட்டில் ஓரமாய்
ஒட்டிய வெள்ளை நிறத்து
ஒற்றை பருக்கையை
குளமான விழியோடு
உற்று பார்த்து
நேற்றிரவு இருந்த சோத்தையும்
அம்மா, தம்பி, தங்கைக்கு
அளவளவா பிரிச்சுக்கொடுத்திட்டு
நாளை முதலாளி வீட்டில்
நல்லசோறு உண்டுக்கலாம் என்று
குவளை நிறைய தண்ணி மொண்டு
குடிச்சத நினைக்கையில,
கண்ணெல்லாம் நிறைஞ்சு
கண்ணீர் துளிகளாச்சு.
என்னடி ஆச்சு? என்று
எசமானி கேட்டதும் தான்
சொரணை வந்து முன்னால
சுகம் கேட்டு சிரிச்சது.
பதில் சொல்ல முடியாம
விம்மி விழுங்கும் போது
உள்ளிருந்து ஒரு குரல்
சீத்தா ஓடி வா,
பழைய சாதம் கொஞ்சம் இருக்கு
நீர் ஊற்றி தின்னு என்று.
விழிகளில் நீர் தெறிக்க
வீதியில் பிறந்தது தப்பா?
சாதியில் குறைந்தது தப்பா?
கேள்விகள் குமிழியிட
உள்ளம் சொன்ன பதில்,
வேதியர்கள் சாதியர்கள்
மிருக வர்க்கத்தை
மதிப்பதை போலேனும்
தாழ் சாதியை மதிப்பதில்லை...
பசி குறையாது
இந்தப்பசி குறையாது,
சாதிப் பசிக்கு ஜோதி கிடையாது
மனிதன் மிருகமாக உள்ளவரை.
சாதி வெறி
நம்மில் பாதி வரியாய் தான் வாழும்!

சுபானி. நுவரெலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஈ பற்றிய சில தகவல்கள்

- இரண்டு இறக்கைகள் இருந்தாலும் ஈ ஒரு பூச்சியினமாகும். இதன் இரண்டு கண்களும் நூற்றுக்கணக்கான கூட்டுக் கண்களின் தொகுப்பே ஆகும்.
- ஒரே சமயத்தில் ஒரு காலில் இருபது லட்சம் கிருமிகளைக் காவிவந்து தான் உட்காரும் பண்டத்தில் உதிர்க்கும்.
- பறக்கும் போது 12 000 தடவை இறகுகளை அடிக்கிறது.
- எதையும் திரவமாக்கிய பின்பே ஈயினால் உறிஞ்சிக்குடிக்க முடியும். பண்டங்களைத் திரவமாக மாற்றிக்கரைய வைக்கும் சக்தியுடைய திரவம் இதன் உறிஞ்சு குழாயில் சுரக்கின்றது.
- மூக்கு, வாய், பல் ஏதுமில்லாத ஈயிற்கு மோப்பசக்தி அதிகம் உண்டு. அதன் முகத்திற்கு முன்னாலுள்ள உணர்கொம்புகள் இப்பணியைச் செய்கின்றன.
- 45 நிமிடங்களுக்கு ஒருமுறை தான், தான் உட்காரும் பண்டத்தின் மீது மலம் கழித்து நோயைப் பரப்புகின்றது.
- ஈயிற்கு இருட்டில் கண்கள் தெரியாது.
- ஈயின் கால்களின் அடியில் சுரக்கும் திரவம் அதற்குத் தலைகீழாக எதிலும் ஒட்டிக்கொண்டு உட்காரவும் அப்படியே நகரவும் உதவும்.
- ஈயின் அதிகூடிய ஆயுட்காலம் 2 மாதங்களே.

வலம்புரி ராகவன், தரம் 5
பிரமந்தனாறு.

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்



குருபரன் முன்பள்ளி
சாருஜன் அபிநாத்
நுணாவில்-11.18



விநோபா முன்பள்ளி
ரவிச்சந்திரன் சனுஜன்
கச்சாய்-11.24



வினோபா முன்பள்ளி
அபிலன் சந்தோஷ்
கச்சாய்-11.21



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனோசக்தி தரும் காந்தப்பார்வை (Magnectic Gaze)

தருவது தம்மண்ண செட்டியார்

காந்தசக்தி என்னும் மகாசக்தியானது நமது சரீரம் முழுவதும் நரம்பு மண்டலங்களில் பரவி இருக்கிறது. இச் சக்திகள் இரண்டு வகையாக இருக்கின்றன. ஒன்று பாயும் சக்தி positive என்றும் மற்றொன்று தாங்கும் சக்தி negative என்று இரண்டு வகையாகும்.



சில மனிதர்களின் சரீரத்தில் பாயும் சக்தி அதிகமாகவும் வேறு சிலரிடத்தில் தாங்கும் சக்தி அதிகமாகவும் வியாபித்து இருக்கும். உதாரணமாக சில மனிதர்களை நாம் பார்த்தவுடன் அவர் பார்வைக்கு எதிர் விழி விழிக்க சக்தியற்றவர்களாய் நம் கண்களை நாம் கீழே தாழ்த்திக்கொண்டு அடக்கத்துடனும் ஒரு மரியாதையுடனும் நிற்கிறோம். நமது மனமும் அவர்கள் பேரில் ஈர்க்கப்பட்டு அவர்களிடம் சென்று பற்றிக்கொள்கிறது.

ஆண் பெண்களுக்குள் இருக்கும் அந்நியோன்யத்துக்கு காரணம் இதுவேயாகும். நாம் செய்வது என்ன என்று அறியாமலேயே மற்றவர்கள் நமக்கு வசியமாகும் விசேஷம் நமது பார்வையிலேயே திருஷ்டியிலேயே அமைந்து இருக்கிறது. இதைத்தான்'' காந்த பார்வை'' என்பார்கள். நமது சரீரத்தில் இருந்து சக்திகள் கால் கை விரல்கள் முகமாகவும் கண்கள் வழியாகவும் வெளியேறுகின்றன. பெரியவர்கள் மகான்களையும் நாம் வணக்கும் போது குனிந்து அவர்கள் பாதத்தை தொட்டு வணங்கும் போது அவர்களின் சக்தி பாதங்களின் விரல்கள் வழியாக நமது சரீரத்தில் பரவுகிறது.

அதே சமயம் அவர்கள் தங்கள் கைகளை உயர்த்தி ஆசீர்வாதம் செய்து கண்களால் நம்மை பார்க்கும் போதும் அவர்களது காந்த சக்தி நமது உடலில் பாய்கிறது. இதனால் தான் யோகிகள் மகான்களை வணங்கி ஆசீர்வாதம் பெறுவதை ஒரு நல்ல நோக்கத்துடன் ஏற்படுத்தியுள்ளனர். பல பெரியவர்கள், மகான்கள் தங்கள் பாதத்தை மற்றவர்கள் தொட்டு வணங்க அனுமதிக்காமல் கைகளாலேயே ஆசீர்வாதம் செய்வார்கள். இதற்கு காரணம் தங்களிடம் உள்ள காந்த சக்தி பாதங்கள் வழியாக பாய்கிறதை இவர்கள் உணர்ந்துள்ளதே ஆகும்.

பொதுவாக மற்றவர்களின் கண்களை நேராக பார்த்து பேசப்பழகுங்கள். உங்கள் மனதில் உள்ள திடசித்தம் உங்களது கண்களின் மூலமாக வெளியேற வேண்டும். யாரிடம் நீங்கள் பேசினாலும் அவர்களது கண்களைப் பார்த்து பேசப்பழகுங்கள். ஒருவரது கண்களின் கருவிழிகளை பார்த்து பேசுவது மிகவும் சிறந்தது.

அப்போது தான் உங்கள் சக்திகளை நீங்கள் பிரயோகிக்க முடியும். நம் மனதில் எதை தீர்மானிக்கின்றோமோ அதை நமது பார்வையினாலேயே தெரிவித்து விடலாம் வெறுமனேயே பராக்குப் பார்க்கும் கண்களையும் காரணகாரியமில்லாமல் கண்டபடி விழித்துக் கொண்டிருக்கும் கண்களையும் உடையவர்கள் இவ் உலகில் சாதனைகள் செய்வது மிகவும் அரிதாகும்.

மனோவசியம் என்னும் 'மந்திர சக்தியின் இரகசியங்கள்' என்ற மிக பிரபல தொடர் ஒன்று கடந்த மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி இதழ்களில் 4 பாகங்கள் வெளியாகி இருந்தன. தவிர்க்கமுடியாத காரணத்தினால் தொடர்ந்து பிரசுரிக்கமுடியவில்லை... மிக நல்ல விடயங்கள் எப்போதும் சற்று கடினமானதே. இதே போல் தான் இந்தத்தொடரும். ஒருதடவை வாசிப்பதை விட இரண்டு மூன்று தடவைகள் வாசிக்கும் போது நிச்சயம் மாற்றத்தை உணர்வீர்கள் . இங்கே பாகம் 5 பிரசுரம் ஆகியுள்ளது. இன்னும் 15 பகுதிகள் தொடர்ந்து வெளிவரும் .

இப்படிபட்டவர்களால் எதையும் செய்ய இயலாது. அதனால் அமர்ந்து ஆழ்ந்து மற்றவர்கள் நெஞ்சத்தை ஊடுருவி செல்லத் தக்கதும் மற்றவர்கள் பார்வைக்கு அஞ்சாமல் எதிநோக்கக்கூடியது மான பார்வையை அடைய அடிக்கடி இந்த பயிற்சிகளை செய்து வரவேண்டும்.

முதலில் பழக்கவேண்டியது என்னவென்றால் கண்களை களைப்படைய செய்யாமல் வெகு நேரம் ஒரு பொருளை பார்த்து வருவதேயாகும். நேராக ஒரே இலக்கை பார்த்து பழகும் வழிகள் பல உள்ளன. அவைகளை இனி பார்ப்போம்.

- அடுத்த இதழில் தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE CROOKED TREE

It was a dense forest. All trees were straight and tall. Their trunks were broad and shapely. But, there was one tree which was having a crooked shapeless trunk.

The crooked tree was sad. He thought " how ugly I am! All athers are straight and shapely. I alone am crooked."

One day a wood – cutter came there. He looked around and said " I will cut all trees here except that crooked tree. That is of no use to me". He cut away all other trees.

Now the crooked tree was happy for its crookedness.

BE HAPPY WITH WHAT YOU ARE.

தமிழில் 35 ஆம் பக்கத்தில்

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்



தி.யதுர்ஷிகன்
29.11.2017
கொழும்பு



தூய தோமஸ் முன்பள்ளி
குகதாசன் தர்சன்
கெருடாவில் -11.29



கை. சரஸ்வதி முன்பள்ளி
கு.அக் ஷாயினி
கைதடி-11.29

## உதவி (11)

### அரசியின் உதவிக்கரம் :-

## கல்விக்கும் அறிவியலுக்கும் கரம் கொடுப்போம்

திருமதி ஞானவேல் இந்திராகாந்தி என்பவரின் கணவர் சிறுநீரக கோளாறினால் மரணமடைந்துவிட்டார். இவர் 5ம் தரத்தில் கல்வி கற்கும் தனது மகளான சகானா துஷ்யந்தினி என்பவரின் கல்விச் செலவிற்காக ஒளிஅரசியின் கல்வி உதவிச் செயற்றிட்டமான கல்விக்கும் அறிவியலுக்கும் கரம் கொடுப்போம் என்னும் உதவும் செயற்றிட்டத்தின் மூலம் உதவுமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இவரது வேண்டுகோளுக்கிணங்க டென்மார்க் வாழ் ஈழத்து சகோதரியான வைஷ்ணவி சசிதரன் என்பவர் ரூ. 5000.00 இனை வழங்கியுள்ளார். இவருக்கு ஒளிஅரசியின் சார்பில் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வாசகர்களே, நீங்களும் இவர்களைப் போன்றவர்களுக்கு உதவ விரும்பினால் அல்லது உதவி தேவைப்பட்டால் எமது ஆசிரிய பீட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.**

**தொடர்புகளுக்கு :**

E-mail : oliarazi33@gmail.com, 0114320695 - 0714 273035



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவுகள் மெய்ப்பட

உலகவரலாற்றில் பல பெண் ஆளுமைகள் பல வடிவங்களில் தமது தடத்தினைப் பதித்துச் சென்றிருக்கின்றனர். அத்தடங்கள் பற்றி மாதாந்தம் வாசகர்களோடு பேசும் ஒளி அரசி இம்மாதம் ஊட கவரலாற்றின் உச்சம் தொட்ட பெண்ணான மேரி கொல்வினைப் பற்றி பேசுகின்றது.

2011 லிபாயாவின் உள்நாட்டு யுத்தத்தை அறிக்கையிடும் போது முகமட் கடாபியை நேர்காணும் வாய்ப்பைப்பெற்றார் என்பதும் இவரே முதல் முதலில் முகமட் கடாபியை நேர்காணல் செய்தவரென்பது குறிப்பிடத்தக்கது. கடாபி இறப்பதற்கு சில மாதங்களுக்கு முன் சந்தித்தவர் மேரி கொல்வின்.

# ஊடக வரலாற்றின் உச்சம் தொட்ட



மேரி கொல்வின்

1956 ஆம் ஆண்டு ஜனவரி 12ம் திகதி அமெரிக்காவில் பிறந்த இவர் சிரியாவின் கிளர்ச்சி தொடர்பான செய்தி சேகரிப்பிலீடுபட்ட போது 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 இல் கொல்லப்பட்டார். மானுடவியலில் தனது முதல் பட்டத்தை 1978 இல் பெற்றுக் கொண்ட மேரி கொல்வின் ஓராண்டு கழித்து பொலிஸ் ரிப்போட்டராக நியுயோர்க் யுனைற்றட் பிறஸ் இன்ரநாசனலில் இணைந்து பணியாற்றினார். பின்னர் 1985 பிரித்தானியாவின் த சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் இணைந்து பணியாற்றினார். முதலில் மத்திய கிழக்கு விடயங்களுக்கான விசேட செய்தியாளராக நியமிக்கப்பட்டு பின்னர் 1995 தொடக்கம் உலக விடயங்களை கவனிப்பதற்காக நியமிக்கப்பட்டார்.

மத்திய கிழக்கு விடயங்களில் சிறப்பு தேர்ச்சி கொண்டவரான மேரிகொல்வின் செச்சினியா, கொசோவோ, சியராலியோன், சிம்பாவே, கிழக்கு தீமோர், இலங்கை போன்ற யுத்தம் நடைபெற்ற பகுதிகளில் மிக ஆபத்தான சூழ்நிலைகளில் பணியாற்றியிருக்கிறார்.

சர்வதேச பெண்கள் ஊடக அமைப்பின் இதழியலின் தற்துணிவுக்காக வழங்கப்படும் சர்வதேச விருதை கொசொவோ செச்சினிய முரண்பாட்டு சூழலை வெளிக்கொண்டுவந்ததற்காக பெற்றுக் கொண்டார். இவர் பல ஆவணப்படங்களையும் தயாரித்துள்ளார், அதில் அரபாத் பற்றி அவர் தயாரித்த ஆவணப்படம் முக்கியமானது.

எங்கெல்லாம் அரச படைகளின் தாக்குதலில் அப்பாவிகளின் அபயக் குரல் கேட்கிறதோ... அங்கெல்லாம் தனது இருப்பைப் பதிவு செய்த பத்திரிகையாளர் மேரி கொல்வின்.

பிறப்பால் அமெரிக்கராக இருந்தாலும் லண்டனில்தான் அதிகமாக வாழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. கொசாவா, ஜிம்பாப்வே, கிழக்கு தைமூர்... என எங்கு உள்நாட்டு யுத்தம் நடந்தாலும் அங்கே மேரி கொல்வின் சென்று விடுவார்.

**'அதனாலேயே போர்ச் செய்தியாளர் என்ற பட்டம் தாங்கினார்.'**

பொதுவாக, பெரும் பத்திரிகைகளில் 'வார் ரிப்போர்ட்டர் என்று இருப்பார்கள். இராணுவம் எத்தகைய ஆயுதங்களை வைத்துள்ளது, என்ன மாதிரியான வெடிகுண்டுகள் வைத்திருக்கிறார்கள், ஒரு குண்டு எத்தனை கி.மீ. தாண்டிப் போய் வெடிக்கும், இராணுவத் தளபதிகளின் சாகசம் என்ன என்று எழுதி 'வார் ரிப்போர்ட்டர் ஆனவர்கள் தான் அதிகம். ஆனால் அதிலிருந்து முற்றுமுழுதாக மாறுபட்டவர் தான் மேரி கொல்வின். போர்ச் சூழலில் பலியாகும் பெண்கள், குழந்தைகள் படும் அவஸ்தைகள் மூலமாக ஆயுதங்களின் கோரத்தை எழுதுவதன் மூலமாக 'அமைதி நிருபராக இருந்தவர்.

1999ம் ஆண்டு கிழக்கு தைமூர் போர்ச் சூழலில் 1,500 பெண்கள் தங்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பிஞ்சுக் குழந்தைகளுடன் சிக்கிக்கொண்ட போது ஐ.நா. அமைப்புடன் பேசி அவர்களை மீட்கத் துடித்தவர் கொல்வின். கடைசியில், அவர்கள் அத்தனை பேரையும் காப்பாற்றவும் பகீரதப்பிரயத்தனம் செய்து வெற்றியும் காண்டார். 2000 ஆம் ஆண்டில்தான் அவரது பார்வை இலங்கைப் பக்கமாகவும் திரும்பியது. இதேபோன்று ''2001 ஆம் ஆண்டு வன்னியில் 5 லட்சம் தமிழரின் அவல நிலையை

கொண்டுவரும் மேரி கொல்வின் போன்றவர்கள் தாம் பணிபுரியும் துறைக்கு விசுவாசமாகவும் உண்மையாகவும் பணியாற்றியிருப்பதை பத்திரிகையாளர்கள் முன்மாதிரியாக கொள்ள வேண்டும். இன்று களத்துக்கு செல்லாமல் செவிவழி செய்திகளை தொலைபேசிகளில் கேட்டு தகவல், தரவு மற்றும் நேர்த்தி பிறள்வுகளுடன் செய்தி சேகரிக்கும்



அறிந்துகொள்ள புலிகளின் கட்டுப் பாட்டுப் பிரதேசத்துக்குள் நுழைந்தவர் தான் மேரி கொல்வின் என்ற பெண் ஊடகவியலாளர் என்பதை யாரலும் மறுக்கவோ அல்லது மறக்கவோ முடியாது. நேரடியாக ஈழம் வந்த மேரிகொல்வின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் மேரிகொல்வினின் இடது கண்ணின் பார்வை முற்று முழுதாக பறிபோனது.

எத்தனையோ மிரட்டல்களுக்கு முகங் கொடுத்தும் சற்றும் சளைக்காதவராய் மேரி கொல்வின் அடுத்த பணியை செவ்வனவே செய்ய சிரியாவில் கால்பதித்தார்.. இலங்கையைப் போலவே சிரியாவும் மேரி கொல்வினை மிரட்டியது. அந்த மிரட்டலைக் கூட கருத்தில் கொள்ளாமல் சிரியா நாட்டுக்குள் பிரவேசித்தார். மேரி கொல்வினின் இடது கண்ணை இலங்கை பறித்தது. அவரது உயிரையே காவு வாங்கி விட்டது சிரியா. எங்கோ பிறந்து யாருக்காகவோ உழைத்து, எங்கோ இறந்துபோன கொல்வினின் வாழ்க்கை, நம் அனைத்துப் பெண்களுக்கும் முன்னுதாரணமாக திகழுமென்றால் அது மிகையாகாது.

மிகத்துணிச்சலுடன் முரண்பாட்டுப் பகுதிக்குச் சென்று தங்கியிருந்து செய்திகளை சேகரித்து உலகுக்கு உண்மைகளைக்

வியாபாரிகளின் நவீன யுகத்தில் உண்மையைத்தேடும் தனது முயற்சியில் மேரி கொல்வின் தன் உயிரை நீத்திருப்பது முக்கியமான விடயமாகும்.மேரி கொல்வின் எந்தவொரு சூழ்நிலைக்குள்ளாலும் தப்பித்து வந்துவிடுவார் என்ற நம்பிக்கையில் காத்திருந்த குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் மிகுந்த ஏமாற்றம் தருவதாக அவரது இறப்பு செய்தி அமைந்திருக்கிறது.

**மேரி கொல்வின் பெற்றுக் கொண்ட விருதுகள்**


2000: Journalist of the Year: Foreign Press Association.
2000: Courage in Journalism: International Women's Media Foundation.
2001: Foreign Reporter of the Year:British Press Awards
2010: Foreign Reporter of the Year:British Press Awards (second award).

தமிழரசி.
நன்றி இணையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர்காலத்தில் கதகதப்பான உடைகள் அணிந்து கொள்ளுதல், நெருப்புக்கு அருகில் அமர்ந்து குளிர் காய்தல், தலை முதல் கால் வரை மூடிய நிலையில் உடைகள் அணிதல் ஆகியவை மட்டும் போதாது. குளிர்காலத்தில், சருமத்திற்கு பிரத்தியேக கவனம் செலுத்தி பராமரிப்பது அவசியம்.



# குளிர்காலத்திற்கு ஏற்ற உடல் பராமரிப்புகள்!

## கூந்தல் பராமரிப்பு:

குளிர்காலத்தில் கூந்தல் வறண்டு காணப்படும். எனவே, கூந்தலில் கற்றாழைச் சாறு தடவி, சில நிமிடங்கள் கழித்து மசாஜ் செய்யலாம். இதனால், கூந்தல் மென்மையாக இருக்கும். மேலும், வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறை ஒலிவ் ஒயில் தடவலாம்.

இதனால், கூந்தலின் ஈரத்தன்மை வலுவடையும். எண்ணெயை சூடுபடுத்தி, தலையில் தேய்த்து வெயில் காலத்தில் ஊறவிடுவதை விட குறைந்த நேரம் மட்டுமே குளிர்காலத்தில் ஊறவிட வேண்டும். தலையில், அதிக நேரம், எண்ணெயை ஊற விட்டால், அதனால், உடல் நலன் பாதிக்கப்படலாம்.

அதே போல், மூலிகை சாறுகள் ஏதாவது தலையில் தேய்ப்பதாக இருந்தாலும், அவற்றையும் அதிக நேரம் ஊற விடக் கூடாது. மூலிகைச் சாறுகள் பெரும்பாலும் குளிர்ச்சி தருபவை, அவை வெயில் காலத்திற்கே உகந்தது. குளிர்காலத்தில், கூந்தலை ப்ரீ ஹெயர் விடுவதை தவிர்த்து, பின்னுவது அல்லது கொண்டை போடுவது ஆகியவற்றைச் செய்யலாம். இதனால், குளிர்ந்த காற்றால் கூந்தல் வறண்டு போவது தடுக்கப்படும்.

## சருமப் பராமரிப்பு:

சரும ஆரோக்கியம் வெளிப்புறத்தில் செய்யும் சிகிச்சையைப் பொறுத்து மட்டுமல்லாது, நாம் சாப்பிடும் உணவையும் பொறுத்தது. முறையான ஊட்டச்சத்தான உணவு, சருமம் ஆரோக்கியமாக இருக்க உதவுகிறது. அதிலும் குறிப்பாக, சருமத்தின் ஈரப்பதத்தை பராமரிப்பதில் தண்ணீர் முக்கிய பங்காற்றுகின்றது.

தினமும், உணவில் அதிகளவில் பழங்கள் மற்றும் காய்கறிகள் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவையும், நம் உடலின் செயல்பாட்டிற்கான தண்ணீரை வழங்குகின்றன. குளிர்காலத்தில், சருமத்தின் மென்மை மற்றும் நெகிழ்வு தன்மை ஆகியவற்றை பராமரிக்க, சோப்பிற்கு பதிலாக கடலை மாவை பயன்படுத்தலாம். தோல் வறண்டு போதல் மற்றும் வெடித்தல் ஆகியவற்றை தவிர்க்க, குளிக்கச் செல்வதற்கு சிறிது நேரத்திற்கு முன், தேங்காய் எண்ணெய் தேய்க்கலாம்.

குளிர்காலத்தில் மாய்ச்சரைசர்கள் மற்றும் கிரீம்கள் தடவ வேண்டியது அவசியம். குளிக்கப்பயன்படுத்தும் தண்ணீரில் சில துளிகள் எண்ணெய் சேர்த்துக் கொள்ளுங்கள். இது, குளிப்பதால், ஏற்படும் ஈரப்பதம் இழப்பு மீண்டும் பெற உதவும். மிகவும் சூடான நீரில் குளிப்பதை தவிர்க்க வேண்டும். ஏனென்றால், சூடான நீரில் குளிப்பதால், உடலின் இயற்கையான எண்ணெய்ப் பசை குறைந்து விடும்.

குளிர்காலத்தில் பெரும்பாலானவர்களுக்கு ஏற்படும் பொதுவானபிரச்னைஉதடு வெடிப்பு. இதற்கு, வெண்ணெயை உதட்டில் தடவலாம். இதனால் உதடு வெடிப்பு குணமாவதோடு கூடுதல் மென்மை கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை சிந்திய மேகமாய்




திருமதி சந்தியா சந்தோஷ்

கணவனுக்கும் மனைவிக்கும் இடையே உள்ள உறவு ஒரு புனிதமான உறவு. கடவுளால் உண்டாக்கப்படும் உறவு. அறியாத வயதில் குழந்தைத்தனமாக இல்லறத்தையும் வாழ்க்கைத்துணையையும் தீர்மானித்துவிடுவ தால் சிறந்தோங்கவேண்டிய சில இல்லறங்கள் தோல்விகண்டு துவண்டுபோவது என்னவோ உண்மைதான். வாழ்க்கையின் உன்னதங் களை உணராததால் வருகின்ற விளைவே அது.

திருமணம் புனித உறவாக இருப்பதற்கு கணவன் மனைவி இருவரும் ஒருவருக் கொருவர் முழுமையாகத் தங்களைத் தியா கம்செய்து உறவை வளர்க்கவேண்டும். இந்த உறவு ஒரு முழுமையான, வாழ்க்கை யின் எல்லா அம்சங்களையும் பாதிக்கின்ற உறவு. அலுவலகத்தில் நம்முடன் வேலை பார்ப்போர் வேலை நேரத்தில் வேலை சம்பந்தமாகத்தான் பேசுவார்கள். அதில் ஒரு சிலர் மட்டும் நல்ல நண்பர்களாக மாறுவ துண்டு. சோகங்களையும் சுகங்களையும் பகிர்ந்துகொள்ளக்கூடிய உறவாகலாம். ஆனால் கணவன் மனைவி வாழ்வின் எல்லா அம்சத்திலும் ஒருவருக்கொருவர் பின்னிப் பிணைந்து கொள்வர். இந்த உறவுக்கு ஈடாக வெளியில் எந்த உறவும் இருக்க இயலாது. நமது பிற உறவுகளெல்லாம் இந்தப் புனித உறவுக்குள்ளும் அமையவேண்டும். எனவே திறந்துவைக்கப்பட்ட நூல் போல் கண வன் மனைவி வாழ்க்கை அமைய வேண் டும். Transparency என்று ஆங்கிலத்தில் இதனைக் குறிப்பிடுவர். கணவன் மனைவி ஒளிவு மறைவு இல்லாமல் ஒருவரோடொரு வர் இயைந்து வாழவேண்டும்.

சில விட்டுக்கொடுப்புகள், சில தியாகங் கள், ஒருவரைப்பற்றி ஒருவருக்கு முழுமை யான புரிதல் என்பது சாத்தியமல்ல என்ற புரிதல் இவை எல்லாமே இல்லற பந்தத்தை செழித்தோங்கச் செய்கின்றன. திவ்யா பிரசாத் இருவரது வாழ்விலும் இப்படித்தான் கொஞ்சம் தியாகங்களிற்குப் பிறகே நிறைய இன்பத்தில் திளைத்தனர்.

பிரசாத் மிகப்பெரிய கார்க்கொம்பனி ஒன்றின் பொறியியல் அதிகாரியாகக் கட மையாற்றினான். வீட்டினரின் நச்சரிப்பு தாங்கமுடியாமல் திவ்யாவைப் பெண்பார்க் கச் சென்றான். எல்லோரும் ஏதேதோ பேசிக் கொண்டிருக்க பிரசாத் திவ்யாவிடம் சொன்ன செய்தி அவளை ஆச்சரியப்படுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியது. சில வருடங்களின் முன் தனக்கு ஒரு காதல் இருந்ததாகவும் காலன் அவளது உயிரைக் காவுகொண்டு விட்டதால் சில காலம் நடைபிணமாய் இருந்திருக்கிறேன் என்றும் சொன்னான்.

எதுவுமே பேசாமல் மௌனமாய் இருந்தாள். அவசர அவசரமாய் திருமணம், அவனோடு நகர்ப்புற வாழ்க்கை என பரபரப்பான ஒரு உலகத்திற்குள் தள்ளப்பட்டாள். பிரசாத்திற்காக ஒவ்வொன்றையும் பார்த்துப்பார்த்துச் செய்தாள். ஆனால் அவனோ எப்போதும் ஒரு விலகலையே அவளிடம் காட்டினான். சாப்பாட்டை கூட அடிக்கடி வெளியில் தான் முடித்துக்கொண்டான். சாப்பாடு எடுத்து வைப்பதற்காய் திவ்யா மேசைக்குச் செல்லும் போது தான் தான் சாப்பிட்டுவிட்டு வந்ததையும் நீ சாப்பிடு என்பதையும் சேர்த்துச் சொல்லுவான்.

பல நேரங்கள் மனது கசந்துபோனது அவளுக்கு. இதனால் அடிக்கடி இருவருக்கும் வாய்த்தகராறு ஆகி பிரசாத்தின் அதிக பொழுதுகள் வெளியே கழிந்தது, திவ்யாவின் அதிக பொழுதுகள் கண்ணீரில் கரைந்தது.

தன் அம்மா வீட்டிற்கே சென்றுவிடலாம் என எண்ணிய போது தான் அந்த எண்ணம் தோன்றியது அவளுக்கு. படிக்கிற காலத்தில் எதையுமே சவாலாக எடுத்துக்கொள்பவள் அவள். சாதாரணமாய் வீதியில் செல்லும் போது கூட அதிக தூரத்தில் செல்லும் வாகனத்தை முந்திவிடவேண்டும் என எண்ணினால் அந்த வெற்றியை எப்படியும் அடைந்துவிடுவாள். இப்படி பல விடயங்களை சவாலாக எடுத்துகொண்ட தன்னால் ஏன் பிரசாத்தின் மனதில் நுழைகின்ற சவாலை எதிர்கொண்டு வெல்ல முடியாது என எண்ணியவள் அந்த முயற்சிக்கான திட்டங்களை வகுத்தாள். ஒருவரை நேசிக்கிறோம் என்றால் அவரது குறைநிறைகளுடன் நேசிப்பது தானே சரியாகும். கணவன் மீது தனக்கிருக்கும் அன்பு உண்மையானதெனின் அவரது குறைகள் மட்டும் எப்படி பிடிக்காமல்போகும் என எண்ணியவள் பிரசாத்தின் குறைகளை நிறைவாக்குவதே தனது முதலாவது கடமை என்பதை உணர்ந்தாள்.

அவனிடம் கோபப்படுவதை நிறுத்திக் கொண்டாள். எதற்கும் அவனிடம் போய் நிற்பதையும் நிறுத்தினாள். தனது வங்கிக் கணக்கில் இருந்த பணத்தை எடுத்து தனது ஆசைப்படி மேற்படிப்பிற்கான அனுமதி பெற்றாள். பஸ்ஸிற்கு சீஸன் எடுத்தாள். கணவனிடம் இவைபற்றி ஒரு துண்டுக்காகிதத்தில் எழுதித்தெரிவித்தாள். பார்த்தபோது பிரசாத்தின் முகத்தில் சின்னப்புன்னகை அரும்பியதைஅவளும்கவனித்தாள். உங்களுக்கு எந்த சிரமமும் தராமல் ஒரு ஓரமாக இந்த வீட்டில் இருந்து படிக்கிறேன் என அவள் காகிதத் துண்டில் எழுதிக்கேட்டபோது அவனுக்குள் உண்டான கழிவிரக்கத்திற்கு அளவே இல்லை. பழக்கதோசத்தாலோ மனதில் பாறையாய் கனத்த நினைவுகளாலோ அவன் ஆம் என்ற பதிலைத்தவிர வேறெதனையும் கூறவில்லை.

> **இரு உள்ளங்கள்**
> **இணையும் ஆரம்பம்**
> **திருமணம்**
> **இணைந்த இரு கரம்**
> **அன்பினில்**
> **எழுதிய காவியம்**
> **இல்லறம்**

அன்று காலையில் அவனுக்கும் தனக்குமாக சமையலைமுடித்து அவனுக்கான டிபன் பொக்ஸை கொடுக்கும் போது சிறிய காகிதத்துண்டு ஒன்றையும் சேர்த்துக்கொடுத்தாள். அதில், இந்த வீட்டில் தங்கியிருப்பதற்குப்பதிலாக நான் சமைத்து தருவதை எற்றுக்கொள்ளுங்கள் என எழுதியிருந்தாள். அப்போதும் சின்னப்புன்னகை அரும்பியது பிரசாத்தின் உதடுகளில்.


நாட்கள் கடக்க, துண்டுக் காகிதத்திற்குப் பதிலாக மெசேஜ் அனுப்பு எனக்கூறி மொபைல் போன் ஒன்றை புதிதாக கொடுத்த கணவனை கண்வெட்டாமல் பார்த்தபடியே அதை வாங்கிக்கொண்டாள். போனில் தகவல் பரிமாறி இருவரும் பேசிக்கொள்ளத் தொடங்கினர். சின்னச்சின்ன உரையாடல்கள் பெரிதாகி அருகருகில் அமர்ந்து அன்றைய பொழுதை அலசுமளவிற்கு வளர்ந்தது. அதுவே அவர்களிற்கான நெருக்கத்தினை மெல்ல மெல்ல உண்டாக்க மனைவியிடம் மன்னிப்பு கோருமளவிற்கு பிரசாத்தை மாற்றியது. அவன் ஏதாவது கோபப்பட்டால் கூட மௌனமாக இருந்துவிட்டு சிறிது நேரத்தின் பின் தன் தரப்பு நியாயத்தை கூறுவதை வழக்கமாக்கினாள்.

வெளியே போகலாமா? என கணவனே கேட்குமளவிற்கு மாறிப்போனது அவர்களின் வாழ்க்கை. சின்னச்சின்ன சண்டைகளைக் கூட சுகமாக்கிய மனைவியை பிரசாத்திற்கு ரொம்பவே பிடிக்கத்தொடங்கியது. காலம் அவன் மனதில் அவளை அழியாமல் பதியச்செய்ய அழகான ஒரு இல்லறம் இருவருக்கும் பரிசானது.

★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 10 மாத கற்கைநெறி



சி. நற்குணலிங்கம்
நெல்லியடி.

அன்பு மகளுக்கு
அன்புடன் அம்மா எழுதிக்கொள்வது,

நீ தாயாகப்போகின்ற தகவலை தொலைபேசியில் கேட்ட கணத்தில் இருந்து எனது மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அருகில் இல்லாமல் நீ தொலைவில் இருப்பது ஒன்றே எனது மனக்குறையாக உள்ளது. இருப்பினும் தாய்மை பற்றி ஒன்றுமே தெரியாதே, என்னசெய்யப்போகின்றேனோ எனக்கேட்டு எழுதியிருந்தாய்? வீட்டின் கடைக்குட்டியாகவும் ஒரே பெண்குழந்தையாகவும் இருந்து இந்த வீட்டின் அனைவரினதும் செல்லப்பெண்ணாக இருந்ததனால் இருபத்தைந்து வயது வரையும் குழந்தையாகவே இருந்துவிட்டாய். அம்மாவாக நான் சொல்வதைக்காட்டிலும் நான் அண்மையில் வாசித்த தாய்மை பற்றிய கட்டுரையை அப்படியே எழுதி அனுப்புகின்றேன். பார்.

பிள்ளைகளை சிறந்த வளமுள்ளவர்களாக ஆக்க அத்தகைய திறன்களையும் தேர்ச்சிகளையும் உரமிட்டு அடித்தளமிட்டு வளர்த்தெடுக்கும் பொறுப்பு தாய் கர்ப்பம் தரித்த நாளிலிருந்தே ஆரம்பமாகின்றது. அப்பயணத்தின் போது தாய் தனக்காக மட்டுமன்றி தன் வயிற்றில் வாழும் குழந்தைக்காகவும் வாழவேண்டும். கர்ப்பகாலத்தில் தாய் தனது ஆரோக்கியம், போஷாக்கு, மகிழ்ச்சி என்பன தொடர்பில் அதிக அக்கறை கொண்டிருந்தாலே சமுதாயத்திற்கு பொருத்தமான ஆரோக்கியம் மிக்க குழந்தையைப் பிரசவிக்கமுடியும். கர்ப்பமாக இருக்கும் தாய் கோபம், எரிச்சல், பொறாமை போன்ற குணங்களைத் தவிர்த்து எதிர்காலத்தில் தன் குழந்தை எவ்வாறு பரிணமிக்கவேண்டும், என்பதனைப்பற்றியும் எண்ணமிடவேண்டும்.

தாயின் கருவறையானது தாயின் கற்பித்தலுக்கான பள்ளிக்கூடமே ஆகும். பத்து மாத கற்கைநெறி ஒன்றை பிள்ளைக்கு வழங்குவதாக நினைத்து கல்வி, பண்பாடு என்பவற்றை தனது எண்ணத்தினூடு பிள்ளைக்கு கடத்தி சந்ததியை வளமானதாக மாற்றவேண்டும் என்ற எண்ணத்துடன் செயற்படுவதானது ஆற்றலும் ஆளுமையும் கொண்டபிள்ளைகள் உருவாக வழிசமைக்கும். சிறந்த புத்தகங்களை வாசிப்பதன் மூலமும் அறிவார்ந்த பண்போடு கூடிய வாழ்வை வாழ்வதன் மூலமும் சிறந்த கல்விமானாக குழந்தையை உருவாக்கமுடியும்.

இவைதவிர பயனுள்ள கருத்துக்களைப் பரிமாறுவதுடன் பண்பானவர்களுடன் பழகுதலும் ஆன்மீகம் சார்ந்த பேச்சுக்களைப் பேசுவதும் இறைபக்தியுடன் வாழ்வதும் மனஅமைதியைப் பேணுவதும் குழந்தையின் சிறப்பான வளர்ச்சியை தூண்டக்கூடிய செயல்களாகும். குழந்தை வயிற்றில் இருக்கும் போதே பிள்ளையின் அறிவு வளர்ச்சிக்கான அத்திவாரம் இடப்படுகின்றது என்பதை உணராது விட்டுவிடுகின்றனர் பெரும்பாலான தாய்மார்கள். இவ் உண்மையை உணர்ந்துகொண்டால் அறிவுஜீவிகளான குழந்தைகள் பிறப்பது அதிகமாகிவிடும். இவை எல்லாவற்றிற்கும் தாய்மையடைந்துள்ள அப்பெண்ணின் குடும்பத்தினர் முக்கிய பங்காற்றவேண்டும்.

இதனை வாசித்து விடயங்களை அறிந்துகொள்வாய் என நினைக்கின்றேன். அடுத்த மடலில் எனது அறிவுரைகளை எழுதுகின்றேன்.

இப்படிக்கு
அன்புடன் அம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இவ்வுலகில் படைக்கப்பட்ட மனிதர்களுக்கு இறைவன் வழங்கியுள்ள அருட்கொடைகளுள் மிக முக்கியமான ஒன்றுதான் குழந்தைப் பாக்கியம் என்பது. திருமணமாகி ஒருமாதம் கடந்ததுமே தம் பதியரிடம் அனைவரும் கேட்டு நச்சரிப்பதும் இந்த குழந்தை விடயம்தான். சிலருக்கு அது உடனேயும் சிலருக்கு காலம் தாழ்த்தியும் இன்னும் சிலருக்கு கிடைக்காமலும் போய்விடுவதுண்டு. கிடைக்கப் பெற்றவர்கள் சிலசமயங்களில் அதை உதாசீனம் செய்வதும் கிடைக்கப் பெறாதவர்கள் அதற்கு ஏங்குவதும் இயல்பானதே. இப்படி குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களை திருப்திப்படுத்தவே தத்தெடுத்தல் என்ற ஒரு விடயமும் சட்டபூர்வமாக்கப்பட்டு இருக்கிறது. இந்த தத்தெடுத்தல் என்ற விடயம் சில இடங்களில்

# என்ன தவறு செய்தன இந்தப் பிஞ்சுகள்?

சட்டபூர்வமாகவும் பல சந்தர்ப்பங்களில் சட்டரீதியற்றும் இடம்பெற்று வருகிறது. அதேபோல குழந்தைப் பாக்கியமே இல்லாதவர்கள், குறித்த பிள்ளைகள் (ஆண்/பெண்) இல்லாதவர்கள்,மேலதிக குழந்தைகள் தேவைப்படுபவர்கள் என பல கோணத்திலும் தத்தெடுத்தல் இடம்பெறும்.

நீதிமன்றத்திலே குழந்தைகள் சட்டபூர்வமாக தத்துக்கொடுக்கப்படுவது வழமை. அப்படி தத்துக்கொடுக்கப்படுவதற்கு பல்வேறு நிபந்தனைகள் உண்டு. அந்த நிபந்தனைகள் அனைத்தும் பூர்த்தியாகி தீர்க்கமான விசாரணைகளின் பின்பே கௌரவ நீதவான்களால் குழந்தைகள் தத்தெடுப்பவர்களிடம் சட்டபூர்வமாக வழங்கப்படும். அன்று தத்துக்கொடுப்பதற்காக இரண்டு இரட்டைக்குழந்தைகள் கொண்டுவரப்பட்டிருந்தன. பார்ப்பதற்கே அழகாகவும் பிரகாசமாகவும் காட்சியளித்தனர் அக்குழந்தைகள். இன்னும்சொல்லப்போனால் நமக்கும் இரட்டைக் குழந்தைகள் பிறக்காதா என ஏங்க வைத்தன அந்தப் பிஞ்சுமுகங்கள். கருவில் இருக்கும் போதே தத்தெடுப்பதற்காக விண்ணப்பித்தவரால் பராமரிக்கப்பட்ட குழந்தைகள் அவர்கள். குழந்தைகளை வைத்திருந்த தாயிடம் ஏனம்மா? எனக்கேட்டேன், வறுமை என்றார். சம்பாசணை முடிந்தது. இருந்தாலும் விடவில்லை மனது.

நன்நடத்தைக்குப் பொறுப்பான எனது நண்பரிடம் வினவினேன். தப்பான உறவினால் உருவான குழந்தைகள், என நேரடியாகவே சொல்லிவிட்டார். திருமணம் முடித்து கணவன் வெளிநாடு சென்றதன் பிற்பாடு மனைவிக்கு ஏற்பட்ட பிழையான உறவிலே உருவானது தான் இக்குழந்தைகள். குழந்தை வயிற்றில் இருப்பது தெரிந்தது முதல் நீதிமன்ற அனுமதியுடன் அந்தத் தாய் மறைமுகமாக பராமரிக்கப்பட்டு இன்று உரியவர்களுக்கு குழந்தைகள் வழங்கப்படுகிறனர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## பிறந்தநாள் வாழ்த்துக்கள்



பாரதி முன்பள்ளி
சிவதர்சன் ஆருண்யா
எழுதுமட்டுவால்-11.12




பாரதி முன்பள்ளி
மகேஸ்வரன் சாரங்கன்
சாவகச்சேரி-11.20

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்



கலைமகள் முன்பள்ளி
பாலகணேஸ் கபிசாந்
மட்டுவில்-11.03



ஸ்ரீ முருகன் முன்பள்ளி
ஹே.எமேஜிதா
சங்கத்தானை-11.08

ஆனால் அக்குழந்தைகளுக்காக எவ்வித பணமும் வாங்கவில்லை அந்தத் தாய். பிழையான உறவு, குழந்தையின் எதிர்காலம், தாயின் மனம், இரட்டைக்குழந்தைகள் வேறு என பலகோணங்களில் மனம் பதறியது.

அற்பசுகம் ஒன்றிற்காக கணவனையும் ஏமாற்றி அழகிய குழந்தைகளையும் இலகுவாக கைமாறிவிட்டுச் செல்கிற தாயைப் பார்த்தபோது புரிந்தது எமது தாய்மாரின் அருமை.

தத்துக்கொடுக்கப்பட்ட குழந்தைகள் சென்ற இடம் நல்ல வசதியான இடம்தான். பெற்றவரிடம் வளர்வதை விட அங்கு நல்ல நிலையில் இருப்பார்கள் அக்குழந்தைகள். ஆனாலும் இறுதி வரைக்கும் அவர்கள் யாரென்ற விடயம் வெளியே வராமல் இருக்கும் என்பதற்கு என்ன உத்தரவாதம்? அப்படி இருந்தல் சந்தோசம் தான்.

தத்துக்கொடுத்தல் என்ற விடயம் நல்ல விடயம்தான் ஆனால் இப்படியான தவறுகள் செய்பவர்களுக்கு அவர்களது தவறுகள் மறைக்கப்பட மிகமிக இலகுவான வழியாக அது காணப்படுவதுதான் கவலையளிக்கிறது. அதாவது தத்தெடுப்பவர்கள் தங்களுக்கு என்ன வழியிலாவது குழந்தை கிடைத்துவிடவேண்டும் என்பதற்காக எதையும் செய்யத் துணிந்து விடுகிறார்கள்.

அதாவது அவர்களை மறைமுகமாக பராமரித்தல், வைத்தியச்செலவுகள், குழந்தை பிறப்பதற்கு முதலே அதற்கான பராமரிப்பு என எதற்கும் துணிந்து விடுகிறார்கள். அதனால் இப்படிப்பட்ட தவறானவர்களுக்கு மனதில் தைரியம் அதிகம். தவறுகள் செய்வது இயல்புதான். அதற்கு மன்னிப்பும் வழங்கலாம். ஆனால் இப்படியான வழிகள் இருக்கிறது தானே என தவறுகள் செய்யத்துவங்கிவிட்டால் என்ன நிலை?

இக்குழந்தைகள் சம்பந்தமாக குறிப்பிட்ட அந்தத் தாயின் கணவருக்குத் தெரியுமா என்பது கூட நமக்குத் தெரியாது. எவ்வாறிருந்தாலும் அது பிரச்சினைக்குரிய விடயம் தானே.

ஆழகிய குழந்தைகளை இலகுவாகக் கைமாறும் மனம் எப்படிவந்தது இந்தத் தாய்க்கு? காலம் செல்லச் செல்ல தாய்ப்பாசங்கள் இப்படி ஆகிவிடுமா? தத்தெடுப்பவர்களே நீங்களும் சற்றுச் சிந்திக்கலாமே. எல்லாக் குழந்தைகளும் வாழத்தான் வேண்டும். குழந்தைகள் எதுவித பாவமும் அறியாதவர்கள்தான், ஆனாலும் நாம் அக்குழந்தையைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறையில் சற்று அவதானத்துடனும் இறைவனுக்குப் பயந்தும் நடந்துகொண்டால் நன்றாக இருக்கும் என்பது எனது கருத்து.

தாய் செய்த தவறுக்காக வளர்ந்ததன் பிறகு சமூகத்தின் ஒரு சில வார்த்தைகளால் அக்குழந்தைகள் தண்டிக்கப்படாமல் இருக்க இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

ஸஹீட். எச். சப்ரீன்,
சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர்,
மருதமுனை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிலந்திவலையில் மீன்

காரிருள் மெதுவாய் தளர்ந்து போகையிலே...
கதிரவன் மிருதுவாய் மேலெழும் வேளையிலே...
கண்ணெதிரே வந்த கன்னி மயிலே...
உன்னைப் போன்றிங்கு யாருமில்லை உண்மையிலே...
கட்டுக் கூந்தலை காற்றில் கலைத்தாய்...
வேலினையும் வெட்டும் விழியை அசைத்தாய்...
உதட்டில் புன்னகை மொட்டை அவிழ்த்தாய்...
வேறென்ன உயிரை வேரோடு அறுத்தாய்...
அரும்பு மீசையை சிலிர்க்க வைத்தாய்...
ஆசைகள் நெஞ்சில் துளிர்க்க வைத்தாய்...
கற்பனையில் கவிதைகள் நுழைய வைத்தாய்...
பொழுதெல்லாம் உனையெண்ணி புலம்ப வைத்தாய்...
சிலந்தி வலையில் மீன் பிடிக்க வைத்தாய்...
உனை நினைந்ததாலே எனையே இழக்க வைத்தாய்...
கால்கள் இருந்தும் அதை மறக்க வைத்தாய்...
குழந்தையாய் உன் நினைவில் தவழவும் வைத்தாய்...
இத்தனை இம்சைகளையும் இதமாய் ஏற்று சகிக்க வைத்தாய்...
இப் பிறவியின் பயன் நீயேயென உணர வைத்தாய்...
இந்தக் கேள்விக்கு மட்டும் பதிலையேன் மௌனமாகவே வைத்தாய்.
.. இப்போதாவது சொல்லடி என்னை உனக்குள் எங்கே வைத்தாய்



... குலேந்திரன் மயிலந்தனை...

## வெற்றியை தேடி



சுபா

போராடாதவரை
உன் முகவரியை உன்னால்
இனம்காணவே முடியாது ''
பயமின்றி களம் இறங்கு
பகுத்தறிந்து
தினம் நடத்து யுத்தம்
உனக்கான பரிசு
உன் தேடல் உண்மையானால்
உனக்காகவே காத்திருக்கும்
அதுஒருநாள்
அத்தனை வலியையும்
மறக்க தரும்
ஆயிரம் முத்தம்
விமர்சனங்களை தூக்கி எறி
எதிரிகளை இனம் காண்
எங்காவது ஒருவன்
உன்னை போல்
தேடலோடு இருப்பான்
அவனைத் தேடி கண்டுபிடி
அதன்பின் உனக்கு
நீ விரும்பினாலும்
ஓய்வெடுக்க மாட்டாய்
ஏனெனில் அதுவே உனக்குள்
ஆயிரம் போட்டியை
உருவாக்கி விடும்
ஓடு ஓடு ஓடிகொண்டே இரு
தேடு தேடு தேடிக்கொண்டே இரு
இந்த உலகில்
வென்றவர் பட்டியலை புரட்டிப்பார்
அத்தனைபேரின் ஆரம்பம்
யாரோ ஒருவரின் அறிமுகம் தான்
அந்த யாரோ ஒருவரை தேடு
நிச்சயம் நீயும்
நாளைய வெற்றியாளன் தான்........!



# அகத்தி கீரை

அகத்தி கீரையின் இலை, பூ, வேர், பட்டை ஆகியவை மருத்துவப் பயனுடையவை. பொதுவாக வெப்பு அகற்றியாகவும், கீரை மலமிளக்கியாகவும், வேர் உடல் பலம் தரும் மருந்தாகவும் பயன்படும். இது மருந்து முறிவு கீரையாகும். பிற நோய்களுக்கு மருந்து சாப்பிடுபவர்கள் அகத்திக்கீரையை சாப்பிடக் கூடாது என அறிவுறுத்தப்படுகின்றனர்.

1. கீரையை வாரம் ஒரு முறை சமைத்து உண்ண வெயிலில் அலைவதால் ஏற்படும் வெப்பும், மலச்சிக்கல், காபி, டீ, இவை குடிப்பதால் ஏற்படும் பித்தம் ஆகியவை தீரும்.

2. அகத்தி மரப்பட்டையையும், வேர்ப்பட்டையையும் குடிநீராக்கி குடித்துவர, சுரம், தாகம், கை கால் எரிவு, மார்பு எரிச்சல், உள்ளங்கால் உள்ளங்கை எரிச்சல், நீர்க்கடுப்பு, நீர்த்தாரை எரிச்சல், அம்மைச்சுரம் ஆகியவை தீரும்.

4. அகத்திப்பட்டை தோல் தொழிலுக்குப் பயன்படுகிறது. அகத்திப் பட்டையின் சாறு சிரங்குக்கு மருந்தாகப் பயன்படுகிறது.


5. அகத்தி கீரையை அடிக்கடி உணவில் எடுத்துக் கொண்டால் வாய்ப்புண், வயிற்றுப்புண் குணமாகும். அதோடு வயிற்று பூச்சிகள் ஒழியும்.

6. சுண்ணாம்புச்சத்து இக்கீரையில் அதிக அளவில் உள்ளது. இது பல் மற்றும் எலும்பு வளர்ச்சிக்கு உதவுகிறது. இக்கீரை உயிர்ச்சத்துக்கள் நிறைந்த கீரையாகும்.

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்



புவேந்தன் பாலர் பாடசாலை
லி.ஹம்சிகா
கொடிகாமம்-11.23



புவேந்தன் பாலர் பாடசாலை
லதாகரன் யதுஷனா
நுணாவில்-11.16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# North Mass Media College

இலங்கையில் உள்ள முன்னணி ஊடக கல்லூரிகளில் ஒன்றான வடமாகாணத்தில் வவுனியாவிலும் கிளையானது யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, புத்தளம் ஆகிய இடங்களிலும் இயங்கி வரும் North mass media college கடந்த 22-10-2017 வவுனியா மில் வீதியில் அமைந்துள்ள Hotel Oviyaவில் மூன்று மாதகால ஊடகத்துறை கற்கைநெறியை (Diploma in mass media) வெற்றிகர மாக நிறைவு செய்த மாணவர் களுக்கான சான்றிதழ்கள் மற்றும் மலையக கலை, கலாசார சங்கம் NDC Radio Net work ஊடக வலையமைப்பு இணைந்து மதகுருமார், கல்விமான்கள், சமூக சேவையாளர் கள், ஊடகவியலாளர்கள் போன்றோர்களுக்கான Rathna Deepa National Social Award இனையும் வழங்கி கௌரவித்தது.

எமது ஊடக கல்லூரியானது 2010 தொடக்கம் இன்றுவரை பல மாணவர்களை ஊடகத்-துறைக்கு இணைத்துள்ளது. இலங்கையிலுள்ள அச்சு, இலத்திரனியல் இணை ஊடகங்களில் எமது மாணவர்கள் தொழில் வாய்ப்பை பெற்றுள்ளனர். எமது கல்லூரியினால் வழங்கப்படும் ஊடகத்துறை கற்கைநெறியானது பொருத்தமானதொரு துறையாக விளங்கிவருகின்றது. குறிப்பாக ஆசிரியர் தொழில், சட்டத்துறை, வைத்தியத்துறை போன்ற ஏனைய துறையில் செல்ல இருப்பவர்களும் இத்துறையை மேலதிக தகைமையாக பெற்றுக்கொள்ளலாம். எமது கல்லூரியில் வழங்கப்படுகின்ற சான்றிதழ்கள் (ICVE) சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மற்றும் அச்சு, இலத்திரனியல், இணைய ஊடகங்களில் பணியாற்ற இருப்பவர்களுக்கும் இத்துறை விசேடமானது.

எதிர்வரும் ஆண்டுகளில் NBC ஊடக வலையமைப்பு வடமாகாணத்தில் இருக்கின்ற மூத்த/இளம் ஊடகவியலாளர்கள், கல்விமான்கள், சமூகசேவையாளர்கள், மதகுருமார்கள், கலைத்துறை யிலுள்ளோர் போன்ற இன்னோரன்ன சமூகசேவையில் ஈடுபட்டுள்ளவர்களை இனங்கண்டு அவர்களுக்குரிய 'இரத்ன தீப தேசிய சமூக விருது' களையும் வழங்கவுள்ளது என North mass media கல்லூரியின் பணிப்பாளர் NAFEES ABOOTH AHIR மகிழ்வுடன் தெரிவித்துள்ளார்.

NBC Radio Network | சத்தம் TV | சோலை TV | சத்தம் FM | செரண்டிப் FM

SRI LANKA'S NUMBER ONE ONLINE MEDIA NETWORK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## எழுக பெண்ணே!



இரும்புச் சங்கிலிகளால்
பிணைக்கப்பட்ட கரங்களிற்கு
விடுதலை கொடுக்கும்
நேரம் வந்துவிட்டது...
காகிதப் பூக்களாய்
கசங்கி பாலியலிற்குள்
சித்திரவதையால்
சிதைந்த தேகத்தை
பலமாக்கும் தருணம்...
முற்றுகையிட்டு கற்பை
அற்பமாய் அலங்கரித்து
நாடகமாடிய நயவஞ்சகர்களை
குற்றவாளிக் கூண்டில் ஏற்றி
குருதி படியும் வினாவெழுப்ப
இதுவே காலம்....
ஏனின்னும் தயக்கம்
நம் பெண்ணினம் அங்கே
மண்ணைக் காத்ததை
மறந்து விட்டாயா?
மறந்துதான் இருப்பாய்.
பச்சோந்திகளாய் மாறி
இச்சை வேண்டியலையும்
மன்மதன்களை. மனதால் பூசித்து
துரோகங்களால்
தூக்குக்கயிற்றை தூக்கியவள்
அல்லவா நீ.... அக்காவோ
அன்னியன் பிடியில்
தங்கையோ தூக்கின் நுனியில்
இனியும் போலி வேலிக்குள்
பொழுதுகள் விடிய வேண்டாம்...
நம்பி நம்பி நாள்கடத்தி
வெம்பிவாழும்
வாழ்வும் வேண்டாம்
அம்பிலும் கொடிய கண்ணால்
அநீதியை தகர்த்தெறிவாய்...
கூண்டிற்குள் குறுகிவாழும்
மாண்புற்ற மாதரே எழுக..
மாண்டோரின் இறுதித் தாகம்
மானத்து மங்கையால்
நிறைவேற்றப்பட்டடும்...
எழுக பெண்ணே எழுக...



தி.நித்தீஷ்வரன் ✍
மட்டக்களப்பு

## என் அப்பா...

அழுது கொண்டு இருக்கும் போது
உன் தோளில் என்னை
தூங்கி அணைத்துக் கொண்டு
ஆதரிக்கும் என் அப்பா
நடக்கத் தெரியாத வயதில்
என் கையை பிடித்து
நடைபயில சொல்லி கொடுத்த
என் அப்பா
துக்கம் ஏற்படும் வேளையில்
அன்பை வெளிக்காட்டி
என் தலையைத் தழுவி விட்டுச்
செல்லும் என் அப்பா
சைக்கிளில் ஏற்றி
மகிழ்ச்சிப்படுத்தி
ஊர்வலமாய்
கொண்டு செல்லும்
என் அப்பா
எத்தனை உறவுகள்
வந்து சூழ்ந்திட்டாலும்
அப்பா எனும்
உறவு போன்று
அமையாது ஒன்றுமே.



ஒலுவில் ஆதிக் ✍

## நகர்வு

சுரங்கப்பாதையைக் கடந்து
தரைத் தளத்தின் அடுத்த பக்கமாய்
நடைபோடும் பயணிகளின்
கால்களைச் சுற்றியிருக்கிறது
பார்வையற்ற வயோதிகனின் இசை
படிமேல் படியேறும் நகரவாசிகள்
அதன் தலையில் மிதித்து கொன்ற
குற்றவுணர்ச்சி சிறிதுமின்றி
இன்றைக்குள் கலந்துவிடுகிறார்கள்.



யாழிசை மணிவண்ணன் ✍




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




மரத்தில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி அதற்குள் ஒளிந்திருக்கும் தத்துவத்தை தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் கண்டுபிடிக்கவும்.

## கண்டுபிடியுங்கள்...

விடைகள்
43 ஆம் பக்கத்தில்





இரண்டு படத்திற்கும் இடையே உள்ள 6 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சிறப்பு நேர்காணல்

கனவுகள் மெய்ப்பட

# கடவுளின் இராச்சியமே நிலையானது



பாரம்பரியங்களை எடுத்துக் காட்டும் விதத்தில் பலவித நிகழ்வுகளை ஒழுங்கமைத்து வெளியீட்டு நிகழ்வினைச் சிறப்பித்திருந்தார் இந்நூலின் செயலியக்குநரும் சிறந்த கலைஞனுமான கவிஞர் யோ. புரட்சி.




**ஆயிரம் கவிஞர்கள் கவிதைகள்** பெருநூல் வெளியீட்டு விழா 21. 10. 2017 அன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கோலாகலமாக நடைபெற்று முடிந்துள்ளது. பலரின் எதிர்பார்ப்பை பூர்த்தியாக்கி வரலாற்றின் ஒரு தடமாக தமிழ் புத்தக வரலாறு ஒன்று மாறியிருக்கின்றது என்றால் அது எமது மொழிக்கான வெற்றி எனக்கூறுவது தவறில்லை. தமிழின



நேர்காணல் :
து.திலக்(கிரி )
சுவிட்சர்லாந்து



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புரட்சி எமது சஞ்சிகையின் சார்பில் ஏற்கனவே நேர்காணல் செய்யப்பட்டிருந்தார் எனினும் நிலத்திலும் புலத்திலுமாய் ஆயிரம் படைப்பாளர்களை ஒன்றாக்கி அவர்களின் எண்ணத்து விதைகளை விருட்சமாக்கி மகிழ்வித்திருக்கும் இந்நல் தருணத்தில் அவருடனான சிறப்பு நேர்காணல் ஒன்றினை வாசகர்களுக்கு வழங்கவுள்ளோம்.

**வணக்கம் புரட்சி அண்ணா, ஒளி அரசியின் சிறப்பு நேர்காணலுக்காக உங்களோடு இணைந்தமை குறித்து மட்டற்ற மகிழ்ச்சி. 2016 ஆனி மாத சஞ்சிகையில் சிறப்பு கவிஞர் பகுதியில் உங்களை நேர்காணல் செய்திருந்தபோதும் ஆயிரம் கவிஞர்கள் கவிதைகள் பெருநூலுக்கான சாதக பாதகங்கள் குறித்து உரையாடவுள்ளோம்.**

வணக்கம் திலக். ஒளிஅரசியின் சார்பில் இணைகின்றமை எனக்கும் மகிழ்வே.

**இவ்வாறு 1000 கவிஞர்களை இணைத்து நூல் வெளியீடு செய்ய வேண்டும் என்ற எண்ணம் எவ்வாறு ஏற்பட்டது?**

2005 ஆம் ஆண்டில் எனது ஆஷா நாயும் அவளும் நூல் வெளியீட்டின் போது என்னோடு அங்கு கூடியிருந்த சிலரால் இவ்விடயம் பேசப்பட்டது. எனினும் இவ்வாறான பிரமாண்டமான நிகழ்வொன்றினை நடாத்தமுடியுமா, இது சாத்தியப்படுமா, என்ற எண்ணம் அனைவரது மனதிலும் இருந்தது. அனைத்தையும் தாண்டி ஆயிரமானவர்களின் கவிகளை இணைத்து இந்நூல் உதயமாகியிருக்கின்றது.

**நாடுகள் ரீதியாக செயலியக்குநர்களை வைத்திருந்துள்ளீர்கள். அவர்கள் மூலம் உதவிகள் கிடைத்ததா? இதனுடைய முழுமைப் பங்காளர்களைப்பற்றி கூற முடியுமா?**

ஆம், தேசங்கள் தோறும் செயலாற்றுநர்களை ஏற்படுத்தியதற்கான காரணங்களாவன, எங்களுக்கு முழுமையான தரவுகளை எடுக்கமுடியாமை ஒன்று. இரண்டாவது இப்பணி விரிவுபடுத்தப் படவேண்டும் என்பது.

அத்துடன் பன்முகப்படுத்தப்பட்ட ஆலோசனைகள், செயற்றிறன்மிக்க முயற்சி முன்னெடுப்புகள் எமக்கு தேவை என்பதும் காரணமே. இருப்பினும் சிலர் இப்பணியைச் சரிவர செய்யாமல் இடை நடுவில் முறித்துக்கொண்டமையை எம்மால் அறியமுடிந்தது.

அதற்காக செயற்படுத்தவில்லை என்ற கருத்தல்ல, முழுமையாக செயற்பட்டிருந்தால் இன்னும் அதிகமாக தகவல்களைப் பரவலடையச்செய்திருக்கமுடியும். இது ஒரு முதலாவது முயற்சி என்ற அடிப்படையில் அதன் மூலமாக வெற்றியைக் கண்டிருக்கின்றோம்.

நிதிசார் பங்பளிப்பை மட்டும் நோக்க முடியாது. பல்வேறு பணிகளும் அடங்குகின்றன. நம்நாட்டு உறவுகள், புலம்பெயர் உறவுகள் என அனைவரும் சிறிதும் பெரிதுமாய் பெயரிட்டும் பெயரிடாமலும் நிதி உதவியினை நல்கியிருந்தனர். பெரும்பான்மையான நிதிப்பங்களிப்பினை கனடாவில் வசிக்கும் எனது உறவினரான ஜமுனா நித்தியானந்தன் அவர்கள் ஏற்றிருந்தார். பதிப்புரிமையையும் அவரே பெற்றுள்ளார்.

**மிகவும் பிரமாண்டமாக பலரும் பாராட்டும் வகையில் இந்நிகழ்வை முன்னெடுத்துள்ளீர்கள். இதில் ஊடகத்துறையின் பங்களிப்பு எவ்வாறானது?**

இந்நூலைப் பொறுத்தவரை ஊடகங்கள் மிகப்பெரிய பங்களிப்பை நல்கியிருந்தன. ஊடகத்துறையில் மற்றொரு வடிவம் தான் சமூகவலைத்தளங்கள். பலரும் தமது தனிப்பட்ட முகநூல் மூலம் இதனை பரவலடையச்செய்திருந்தமை நன்றிக்குரிய ஒன்றாகும். அத்துடன் கலாசார விடயங்களையும் இந்நூல் மூலம் கொண்டுசெல்லவேண்டியதாக இருந்தமையால் அவ்வாறான பணிகளையும் இணைத்திருந்தோம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**இந்நூலுக்கு கவிதைகளைத் தந்து வானகம் சென்றவர்களை அஞ்சலித்துள் ளீர்கள், இது பற்றி?**

ஆம், இவர்கள் அனைவரும் ஏதோ ஒரு வகையில் கௌரவிக்கப்பட வேண்டியவர் களே, அவர்கள் மறைந்திருந்தாலும் மறக்கப் படவேண்டியவர்களல்லர், எமது நூலுக்குள் எப்போதும் வாழ்ந்துகொண்டிருப்பவர்கள். இந்நூலுக்கான அவர்களின் உழைப்பினைக் கௌரவம் செய்யவேண்டும் என்பதே அத்தகைய நிகழ்வின் அத்திவாரம்.

**உங்கள் சிந்தனைகள் வித்தியா சமானதே, விழிப்புலன் அற்ற சிறார்கள் மூலம் வெளியீட்டினை செய்தமை பற்றி?**

தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்ப டுவான், தன்னை தாழ்த்துகின்றவன் உயர் வடைவான். இது பரிசுத்த வேதாகமத்தில் கூறப்படுகின்றது.

இவ்விடயம் எனது அனுபவத்தில் கண்ட உண்மை. நாமெல்லோரும் இந்நூலினை கண்களால் பார்க்கமுடியும், அவர்களால் அது முடியாது. நாங்கள் கடினப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்திருக்கின்றோம், வாழ் கின்றோம். அதுவும் அவர்களின் நிலையை உணரும் ஒரு சந்தர்ப்பமாகும். தியானம் போன்ற இறையோடு இணைந்த வாழ்க்கை வாழ்பவர்களுக்கு, மனதில் உண்மையான இரக்கம் இருக்கும் போது இவ்வாறான செயல்கள் தனாகவே தோன்றிவிடுகின்றது.

**உங்களுக்கு வழங்கப்பட்ட பொற் கிளியை இனியவாழ்வகத்திற்கு வழங்கி விட்டீர்களே, அது பற்றி?**

அவ்வேளை அவ்வாறானதொரு செயலை நான் எதிர்பார்க்கவில்லை. உடுவை தில்லை நடராசா அவர்கள் செய்த பணி பாராட்டிற்குரியது. ஒரு கவிஞனை இவ்வாறு கௌரவப்படுத்த வேண்டும் எனும் அவரது எண்ணம் சிறப்பானது. எனினும் அது பல கவிஞர்களின் ஒன்றிணைந்த கூட்டு முயற்சியின் பரிசு. அதனை நான் தனியே அனுபவிப்பது தவறெனத்தோன்றியது டன் பலரின் முயற்சிக்கான அப்பணத்தினை இவ்வாறான வர்கள் அனுபவிப்பது அழகான தாக இருக்கும் எனவும் எண்ணிய தால் உடனடியாக அவ்வாறு செய்தேன்.

**இதன் பிரசவத்திற்காக எடுக்கப்பட்ட காலங்கள் ? அதனால் ஏற்பட்ட பூரிப்பு பற்றி கூறுங்கள்?**

இப்பணி ஆரம்பித்த காலத்தில் இருந்து 2 ஆண்டுகள் எடுத்துள்ளது நிறைவடைய. பூரிப்பு என்றால் இந்நூலில் இடம்பிடித் துள்ள அனைத்து கவிஞர்களின் பூரிப்புமே எனது பூரிப்பாகும். அவர்களின் மகிழ்ச் சியே எனது மகிழ்ச்சி.

**அண்மையில் உங்களுக்கு கிடைத்த கவித்துறை கௌரவம் பற்றி?**

கடவுள் ஒருவருக்கே மகிமை உண்டா கட்டும். கௌரவம் என்பது நிலையானது அல்ல, கடவுளின் இராச்சியம் மட்டுமே நிலையானது. என்னைவிடவும் தகுதியா னவர்கள் அதிகம் பேர் உள்ளனர் என்பதே எனது கருத்து.

**நிறைவாக எழுதத்துடிப்பவர்களுக்கு நீங்கள் கூறுவது?**

உழைப்பதற்கு துணிச்சல் இல்லாவிட் டால் எழுதுவதற்கு ஆசைப்படாதீர்கள். உற்சாகம் உள்ளவர்களால் தான் எழுதவும் முடியும். வாய்ப்பு என்பதில் நாமாகப் பெறுவது ஒன்று, தானாகக்கிடைப்பது ஒன்று. உங்களால் வாய்ப்பினைப்பெற முடியாவிட்டால் அது தானாக கிடைக்கும். உள்ளமும் உணர்வும் பாதையும் சரியாக இருந்தால் மட்டுமே வாய்ப்பு தானாக தேடி வரும். நிச்சயமாக காத்திருங்கள், வெற்றி கிட்டும். இதுவே எழுதத்துடிப்பவர்களுக்கு நான் கூறவிரும்புவது.

**புரட்சியின் பாதைகள் அனைத்தும் இன்னும் செம்மைபெற வேண்டும் என ஒளிஅரசியின் சார்பில் வாழ்த்தி விடை பெற்றோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படிக்கு...

கனவுகளே கதை கேளுங்கள்
அவள் நினைவுகளை
மொழிப்பெயர்த்து தாருங்கள் ..
கண்மணிகள் இன்று
கரைகிறதே
கண்ணீர் தரை
தொடுகிறதே!
நெஞ்சத்தில் இடி
வீழ்கிறதே அடிப்பட்டு இதயம்
அழுகிறதே !
செல்கள் எல்லாம்
செயலிழக்கிறது
ஹார்மோன்களின் ஆசை
குறைகிறதே !
இரத்தத்தில் நச்சு
கலக்கிறதே அச்சத்தில் ஆயுள்
அழிகிறதே !
கனவுகளே கதை
கேளுங்கள் அவள்
நினைவுகளை
மொழிப்பெயர்த்து தாருங்கள்..
தொல்லையில்லா இரவு
தொலைதூரம் போனதே
சோகங்கள் ஒன்றாகி
சொந்தங்கள் ஆகுதே !
அவள் சொன்ன சங்கதிகள்
எல்லாம் சந்தங்கள் ஆகுதே
சந்தங்கள் ஒன்றாகி
ஒருதலை சங்கீதம் இசைக்கிறதே !
கனவுகளே கதை கேளுங்கள்
கவலையில்லா கதை கூறுங்கள் ....



முத்துசாமி நிசாந்தன்

## பிறந்தநாள் வாழ்த்து



நளினி முன்பள்ளி
காண்டீபன் டிவியா
மீசாலை-11.14



# சோதரனே...

கார்த்திகைத் திங்களில்
காவியமான என்
கண்மணியே சோதரனே
உங்கள் உயிரின் ஸ்பரிசத்தை
அதன் உன்னத பிணைப்பை
பிரித்திடமுடியா உன் நினைவுகளை
என் உயிர் பிரியும் நேரத்திலும்
எடுத்துச்செல்வேன் என்னுடனே!
நீர் செய்த அர்ப்பணிப்பை
நிகழ்த்திச்சென்ற சாதனையை
எழுதமுடியா இக்கணத்தில்
மௌனத்தை உடைத்தெறிந்து
எழுதுகின்றதென் எழுத்தாணி.
இப்பிறவியை அனுபவித்து வாழ்வதற்கும்
பேரின்பத்தை அடைவதற்கும்
முட்டிமோதிக்கொள்ளும் இப்பொழுது
என்றுமே திரும்பிடா இளமையை
அதன் இனிமைகளை
வாழ்வின் சின்னச்சின்ன ஆசைகளை
உம் துளிர்க்கனவுகளை
எமக்காய் துறந்துவிட்டு
எல்லாமாய் கலந்த உம்மை
எண்ணி எண்ணியே
எம் நெஞ்சம் கனக்கிறது.
குழந்தையாய் அடம்பிடித்து
புலம்புகின்றது எம் ஆத்மா.

ராகமித்ரா

இசைக் கருவிகளின் பிரமாண்டம்

# 'ஈழப்பெரும் பேரிகை'

லெப்ரினன்ற்.லி.அனிருத்தன்
விரிவுரையாளர்

இறைவனையும் இயற்கையையும் இசைக்கவல்ல இசைக்கலையில் பண்டைத் தமிழனின் மறத்தை பறைசாற்றி நிற்பன முழுவியற் கருவிகள். இக் கருவிகள் குடுகுடுப்பை முதல் பேரிகை வரை வடிவங்களாலும் பருமனாலும் நாதத்தாலும் வாசிப்பு முறைகளாலும் வேறுபட்டு காலத்துக்குக் காலம் மாறியும் மாறாமலும் தமிழர் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்து வளர்ந்துள்ளன.

தாள வாத்தியங்கள், லய வாத்தியங்கள், கொட்டற்கருவிகள், முழுக்கு வாத்தியங்கள்



என அழைக்கப்படும் இக் கருவிகள் ஒரு முகமாகவும், இருமுகமாகவும், பஞ்சமுகமாகவும் மரம், உலோகம், சிரட்டை, மூங்கில், சுரைக்காய், மண் போன்றனவற்றலான பீப்பாய்களில் விலங்குகளின் தோலைப் போர்த்திக் கட்டி வடிவமைக்கப்பட்டவை. இவ்வாத்தியங்கள் சர்மஜம், அவனந்தம் எனவும் இவற்றிலிருந்து எழுப்பப்படும் ஒலி ஆத்யாதம் எனவும் உபநிடதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

வேதங்களிலும் இதிகாசங்களிலும் லம்பரம், ஆடம்பரம், பேரி, துந்துபி, முரசு, படகம் போன்றனவும் சங்க காலத்தில் பேரிகை , பறை வகைகளும் அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளன. பண்டைய குழுக்கள் உத்தம, மத்திம, அதம, வீர வாத்தியங்கள் என நான்குவகைப்படுத்தப்பட்டு அதில் பேரிகை உத்தம வகை வாத்தியமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றினைவிட தப்பு, கஞ்சிரா, பஞ்சமுக வாத்தியம், செண்டை, கிரிக்கட்டி, உறுமி, டமாரம் போன்றனவும் இந்துக் கலாசாரத்தோடு பேணப்பட்டு வந்துள்ளன. இக்கருவிகள் சுயமாக இயங்குபவை, கைக்குச்சிகளால் வாசிக்கப்படுபவை, தடிகளால் அடித்து ஒலி எழுப்பப்படுபவை சம்மட்டிகளால் முழுக்கப்படுபவை எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அத்தோடு மங்கல, அமங்கல, ஆலய, போர்க்கள, கச்சேரி மற்றும் சாதக வாத்தியங்கள் எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.


நாட்டிய சாஸ்த்திரத்தில் 86 வகை குழுவியற் கருவிகளும் பஞ்சமரவு மற்றும் அடியார்க்கு நல்லார் உரை என்பவற்றில் 80 வகைக் கருவிகளும் அவைபற்றிய குறிப்புக்களும் காணப்படுகின்றன.

பேரிகையே பேரி எனவும் அழைக்கப்படுகின்றது. இது தேவ மங்கல பேரி, அமங்கல பேரி என வகைப்படுத்தப்பட்டுள்ளது. அளவில் சிறியது நகரா எனவும் நடுத்தரத்தில் உள்ளது முரசு எனவும் பெரியது பேரிகை எனவும் அழைக்கப்படுகின்றது. ஆனால், இவை வடிவத்தில் ஒத்தே காணப்படுகின்றன.



ஆலயங்களில் சுவாமி வீதிவலம் வரும் செய்தியை ஊர் மக்களுக்கு தெரியப்படுத்தும் முகமாக பேரிகையையும்

**பிறந்தநாள் வாழ்த்து**



ரட்ணா முன்பள்ளி
விஷ்ணுதாசன் விதுரா
கொடிகாமம்-11.17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கனவுகள் மெய்ப்பட

முழக்குபவரையும் இடப வாகனத்தில் ஏற்றி சுவாமிக்கு முன்னால் கொண்டு செல்ல அவர் சம்மட்டிகளால் பேரிகையை முழக்கி இறைவன் வரும் செய்தியை அறிவிப்பார்.

பகைவர்களை நடுநடுங்க வைக்கும் முழக்கத்தினையுடைய பேரிகையை யானைக்கு மேல் ஏற்றி போர்ச் செய்திகளை அறிவிப்பதற்காகவும் பயன்படுத்தினர். யுத்த களங்களில் பயன்படுத்தப்படுவது ரணபேரி என வழங்கப்படுகின்றது என்கிறது இன்னோர் குறிப்பு.


மகாகவி பாரதியாரால் ஜெய பேரிகை எனவும் அடியார்க்கு நல்லாரால் தலைக்கருவி வன்மக் கருவி, அகமுழுவு எனவும் குறிப்பிடப்பட்ட இவ்வாத்தியம் செம்பு, பித்தளை, இரும்பு போன்ற உலோகத் தகடுகளால் இணைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட உலோகப் பீப்பாயில் உத்தமான பசுவின் தோலால் போர்த்தி இரண்டு தொடக்கம் மூன்று அடிவரையான விட்டத்தை உள்ளதான பெருவாத்தியம் என வரைவிலக்கணப்படுத்தப் பட்டுள்ளது. (தமிழர் முழுவியல்-129).

**பிறந்தநாள் வாழ்த்து**



பாரசக்திபாலர்
முன்பள்ளி
ச.அக்சயசர்மா
கைதடி-11.27

சேறை அறிவனாரும், அடியார்க்கு நல்லாரும் குறிப்பிட்ட அளவுப் பிரமாணத்தைவிட இரண்டு மடங்கு விட்டமும் நான்கு மடங்கு மேற்பரப்பும் எட்டு மடங்கு கன அளவும்



கொண்ட வரலாற்றில் எங்கும் இல்லாத அளவு பிரமாண்டமான தோற்றத்துடனும் முழகத்துடனும் கூடிய பொக்கிஷம் ஒன்று எமது நாட்டில் பிரசவமாகியுள்ளது. இது ஈழத்திலோ இந்தியாவிலோ வேறு எந்த நாடுகளிலுமோ பயன்படுத்தப்பட்டிராத பேருருவம் கொண்டதாக திகழ்கிறது.

கல்வி கலை கலாசாரம் செல்வமோடு சிவம்
நன் மக்கள் பெற்றெடுத்த காரையிற் பிறந்தது



ஒரு பேரிகை - ஈழப் பெரும் பேரிகை - இல்லை
அது உலகப் பெரும் போரிகை.

யாழ்ப்பாணம், காரைநகர், மணற்காடு குடும்பநாயகி முத்துமாரிஅம்மன் ஆலய வேட்டைத்திருவிழாவை பிரதிநிதித்துவப்படுத்தி, சிவகாமி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த கலைஞர் பெருமக்களால் இப்பேரிகை உருவாக்கப்பட்டிருக்கின்றது. கட்டுரை ஆசிரியரின் எண்ணத்தில் உதித்த இவ்வாத்தியம் கலாபூஷணம் மா. சிதம்பரநாதனின் இசை சார் ஆலோசனைகளின்படியும் கலைத்திலகம் சி.சோமசேகரம்பிள்ளையின் கைவண்ணத்திலும் செலவிலும் பிரபல மிருதங்கத் தொழிலாளர் ச. இந்திரனின் தோல் வேலையுடனும் உதயமாகி ஈழப்பெரும் பேரிகைஎன்ற நாமத்துடன் விளங்குகின்றது.

5' விட்டமும் 4' உயரமும் கொண்ட ஈழப்பெரும் பேரிகை க. ஜெகதீசனின் சமூக ஒருங்கிணைப்பிலும் தட்டிக்கொடுப்பிலும் கட்டுரை ஆசிரியரின் தலைமையிலும் நெறிப்படுத்தலிலும் மி. புருஷோத்தமனின் பயிற்சியிலும் நான்கு இளைஞர்கள் எட்டு சம்மட்டிகளை வைத்து ஓங்கிமுழங்க அம்முழக்கத்துக்கு ஈடாக தப்புகளும், இடைத்தாளங்களும், கொம்புகளும், சங்குகளும் ஒலிக்க எங்கும் பெரு முழக்கத்துடன் சிவப்புக் குதிரையில் அம்பாள் போர்க் கோலத்தில் வேட்டைக்குச் செல்லும் காட்சியை நேரில் பார்ப்பவர்களாலேயே உணரமுடியும்.

இப் பொக்கிஷத்தினை ஈழப்பெரும் பேரிகைஎன அழைப்பதைவிட உலகப் பெரும் பேரிகை என அழைப்பதே எம் மண்ணுக்கும், கலைக்கும், தமிழ் இனத்துக்கும் கிடைக்கும் பெருமையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பெண் விடுதலை என்பது...

உதயசகி யாழ்ப்பாணம்

உண்மையான பெண் விடுதலை எது வென்று தெரியாமலே பல பெண்கள் இன்னும் அதிகமாக ஆண்களுக்கு அடிமையாகிக்கொண்டிருக்கிறார்கள்.....உண்மையான பெண் விடுதலை என்பது ஒரு பெண்ணை மிகச்சரியான பெண்ணாகத் தான் மாற்ற வேண்டுமே ஒழிய ஆணின் நகலாக அல்ல. ஆனால் இது தான் இப்பொழுது நடந்து கொண்டிருக்கின்றது.

பெண்கள் ஆண்கள் போலே மாற விரும்புகின்றனர். ஆண்கள் சிகரெட் குடித்தால் பெண்களும் போட்டி போட்டு குடிக்கிறார்கள்....ஆண் பாண்ட் போட்டால் பெண்ணும் போடுகிறாள். ஆண் ஒரு விடயத்தை செய்தால் அதை பெண்ணும் செய்தாக வேண்டும் என்கிறாள். இது பெண்மைக்கான அடையாளம் அல்ல. அவள் இதனால் இரண்டாம் தர ஆணாகவே மாற்றமடைகிறாள்.



இது விடுதலையல்ல. இது இன்னும் அதிக ஆழமான அடிமைத்தனம். ஏன் இது அதிக ஆழமானது என்றால் முதல் அடிமைத்தனம் ஆண்களால் திணிக்கப்பட்டது. இந்த இரண்டாவது அடிமைத்தனம் பெண்கள் தாங்களே உருவாக்கிக்கொள்வது. விடுதலை என்ற பெயரில் பெண்கள் தங்களை தாங்களே அடிமைத்தனத்திற்குள் திணித்துக்கொள்ளும் வரை அதிலிருந்து வெளிவருவது என்பது சாத்தியமே இல்லை...

பெண் நிஜமாகவே பெண் ஆக வேண்டும். ஒரு பெண்ணை சார்ந்தே நிறைய விடயங்கள் உள்ளன. ஆணை விட ஒரு பெண் மிகவும் முக்கியமானவள். ஏனெனில் அவள் தான் ஆண், பெண் இருவரையுமே தன் கருவில் சுமக்கிறாள். ஆண், பெண் இருவருக்கும் அவள் தான் தாய். இருவரையுமே அவள் தான் ஊட்டி வளர்க்கின்றாள். அவள் விஷமானால் அவள் பாலும் விஷமாகும். அவள் குழந்தைகளை வளர்த்திடும் விதமும் விஷமாகிவிடும்.

பெண் ஒரு உண்மையான பெண்ணாக இருக்க சுதந்திரம் இல்லையென்றால் ஆணுக்கும் நிஜமாகவே ஆண்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கனவுகள் மெய்ப்பட

## பெண்ணியம்

ஆக சுதந்திரம் என்றுமே கிடைக்காது. பெண்ணின் சுதந்திரம் ஆணின் சுதந்திரத்திற்கு மிகவும் அவசியம். ஆணின் சுதந்திரத்தை விடவும் அடிப்படையானது அது.

பெண்கள் தாங்கள் விடுதலையை பெறுவதற்காக ஆணுக்கு போட்டியாக ஆணின் நகலாக மாற வேண்டிய அவசியமில்லை.

பெண் தன் பெண்மைக்குரிய அடையாளத்தோடே போராட வேண்டும்... அதுவே உண்மையான பெண்மைக்கு அழகு.



இதை ஒரு பெண் படித்தால் இதில் கூறியுள்ளவற்றை எதிர்க்கவே செய்வாள்... ஏன் நானே ஒரு பெண்

நானே கூட எதிர் கேள்விகள் கேட்கவே வாய்ப்புண்டு.. ஆனால் இதை ஆழமாக பார்த்தால் இதில் கூறப்பட்டுள்ளவை நூறு வீதம் உண்மையானவை.ஆணிற்கு சமமாக வேண்டும் என்று எண்ணிக்கொண்டு நாம் இன்னும் ஆணிற்கு அடிமையாகிக்கொண்டிருக்கிறோம். நமெக்கென்று தனித்துவமான அடையாளங்கள் எவ்வளவோ உள்ளது. பெண்கள் நாம், நம் பெண்மையை இழக்காமல் நம் விடுதலைக்காய் போராடுவதே பெண்மைக்கு அழகு. அதுவே அவளின் சிறப்பு.

நீ யாரையாவது அடிமைப்படுத்தினால் நீயும் இறுதியில் அடிமையாகித் தான் போவாய்.நீ சுதந்திரமாக இருக்க விரும்பினால் மற்றவர்களுக்கும் விடுதலையை கொடு. அது ஒன்று தான் நீ சுதந்திரமாய் இருப்பதற்கான ஒரே வழி. (இது ஆண் ,பெண் இருவருக்குமே பொருந்தும்...)


பெண்ணே...நீ விடுதலையை பெற வேண்டுமென்றால் ஆணாய் மாறாதே...உண்மையான மிகச் சிறந்த பெண்ணாக மாறு. அது உனக்கு மட்டுமல்ல உன்னைச் சார்ந்தவர்களுக்கும் பெற்றுக் கொடுக்கும் விடுதலையை.....

ஓசோ அவர்களின் பெண்ணின் பெருமை எனும் நூலில் '' பெண் விடுதலை'' எனும் பகுதியினை வாசித்த போது எனக்குள் தோன்றியவையையும் அவரது கருத்துக்களையும் சேர்த்து இங்கு பகிர்ந்துள்ளேன்.

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்



நாவலர் முன்பள்ளி
பிரதீபன் ஆதித்திகன்
மீசாலை-11.21



நாவலர் முன்பள்ளி
வேல்நம்பி அபிலாஷ்
மீசாலை-11.29



நாவலர் முன்பள்ளி
ஸ்ரீராம் தனுஷ்
மீசாலை-11.08



நாவலர் முன்பள்ளி
உ.லிதுர்ஷனா
மீசாலை-11.16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவுகள் மெய்ப்பட

தருவது சுகன்ராஜ்

# கயலின் கல்யாணம்



# காதல் முதல் கல்லறை வரை.

## அத்தியாயம் 8

அருணின் கார் ஓர் கோயில் வாசலில் நின்றது. அந்த கோயில் கயலின் பிரியமான கோயில், முன்பு இங்குதான் வாரா வாரம் வருவாள் . பின்பு வீடு மாற்றம் ஆகியதால் அங்கு செல்வதையே நிறுத்தியிருந்தாள்.


''ஏன் அருண்'' இந்த கோயிலிற்கு கூட்டிற்று வந்திருக்காய்? என்ன ஆச்சு உனக்கு? சொல்லு அருண் என கேட்டுக்கொண்டே காரில் இருந்து இறங்கினாள்.

''என்ன கயல் இன்னுமா உனக்கு இந்த நாள் நினைவு வரல, கொஞ்சம் யோசித்துப் பார்'' என புதிர் போட்டான் அருண். தன் வாழ்க்கையில் நடந்த பல திருப்பங்களின் அதிர்ச்சியால் நாள் கிழமை என அனைத்தையும் மறந்திருந்தவளால் நினைவுபடுத்த முடியவில்லை.

''நீயே சொல்லு அருண்'' எனக் கெஞ்சினாள், ஆனால் அருணோ, ''அத நான் சொல்ல மாட்டன் உள்ள வா, உனக்கே புரியும்'' என கூறி கோவிலின் உள்ளே சென்றான். கயலும் மகனுடன் பின் தொடர்ந்தாள். ஆலயம் முழுவதும் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டு இருந்தது.

''என்ன அருண், பிளீஸ் சொல்லு'' என கயல் வற்புறுத்தவும் ''அங்க பார், உனக்காக ஒரு ஜுவன் காத்திட்டு இருக்கு, போய் பேசு'' எனக்கூறி கை காட்டினான். அங்கு மாப்பிள்ளை தோற்றத்தில் நடந்து வந்துகொண்டிருந்தான் சக்தி. அவனை கண்ட கயலின் கண்கள் பனித்தன இதுவும் கனவா என சந்தேகித்து தன்னை கிள்ளியும் பார்த்துக் கொண்டாள். மெய் சிலிர்த்து நின்ற கயலை நெருங்கிய சக்தி தன் கைகளில் இருந்த நகைப் பெட்டியை திறந்து உள்ளிருந்த தங்கத் தாலியை நீட்டி கயல் முன் மண்டியிட்டு அமர்ந்தான். கயலின் வேற் கண்களை நோக்கி ''கயல் நாம கல்யாணம் பண்ணிக் கலாமா!'' என காதலுடன் கேட்டான். கற்சிலைபோல் அசைவற்று நின்ற கயலின் கண்ணீர் வழிந்து சக்தி ஏந்தி நின்ற தாலியை நனைத்தது. பேச்சிழந்த பேதையானவள் கண்களாலேயே சம்மதம்

### பிறந்தநாள் வாழ்த்து



கரம்பகம் விநாயகர் முன்பள்ளி
புவேந்திரன் தேனுசன்
2017.11.04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி மெல்ல தலை அசைத்தாள். அப்போது தான் கயலின் நினைவிற்கு வந்தது அந்த நாள்.

ஆம் அன்றுதான் கயலிடம் தன் காதலை வெளிப்படுத்தினான் சக்தி, இன்று அவனுடைய பிறந்தநாளும் அல்லவா, கயலின் உதடுகள் துடித்தன, இருந்தும் வார்த்தைகள் வெளிவர மறுத்தன. அதே நேரம் அங்கு வந்த சக்தியின் தம்பியும் எஸ்தரும் கயலை வரவேற்றனர்.

எஸ்தர், ''என்ன அக்கா அதிர்ச்சியா இருக்கா, எல்லாமே எங்க ஏற்பாடுதான்'' எனக் கூறிச் சிரித்தாள். உடனே இடைப்பட்ட அருண் ''மிச்சம் நான் சொல்றன்'' என்றபடி ''கயல் நீ என் கிட்ட சக்திய பத்தியும் உங்க காதலப்பத்தியும் சொன்ன அன்றே நான் சக்திய சந்திச்சு பேசினன், அப்போதான் இரண்டு பேருமே ஒருத்தர ஒருத்தர் தப்பா புரிந்து கொண்டிருந்தது தெளிவாச்சு, அப்போ சக்தி பட்ட சந்தோஷத்த நீ கூட இருந்து பாத்திருக்கணும், துள்ளி குதிச்சிட்டாரு, நானும் உடனே வந்து கயல பாருங்க, என்று சொன்னன், ஆனாஅவர் தான் இன்னும் கொஞ்ச நாள்ள என் பிறந்தநாள் வருது, இதே நாள்ள தான் நான் என் காதல சொன்னன், அதால அன்னைக்கே கயலிற்கு இன்ப அதிர்ச்சி குடுக்கனும்னு, சொல்லி இவளோ ஏற்பாடும் செய்தாரு. அது மட்டுமில்ல நீ கஷ்டப்படுறத பார்க்க முடியாம தன் வீட்டுக்கு வரும் வரைக்கும் நீ பாதுகாப்பா இருக்கணும் என்று புது வீடு பார்த்து பணம் குடுத்தது கூட சக்திதான். நான் வெறும் கருவிதான் கயல்,'' என்று விரைவாக அருண் கூறவும் காதல் கண்களில் கசிய இமைக்காமல் சக்தியையே பார்த்துக் கொண்டிருந்தாள் கயல்.

எஸ்தரோ, ''சரி சரி முகூர்த்தம் போகுது முதல்ல கல்யாணம் முடியட்டும் விளக்கமா பேசுவம்'' எனவும், நீங்க கூட இத மறைச்சிட்டிங்களே எனும் அர்த்தத்தில் எஸ்தரை பார்த்து புன்னகைத்தாள் கயல். சிறிது நேரத்திலேயே கயலை சிறப்பாக அலங்காரம் செய்து மணமேடைக்கு அழைத்து வந்தாள் எஸ்தர். இனிதாக திருமணம் முடிந்தது. தன் பல வருட தவ வாழ்வின் பயனை அடைந்ததாக உணர்ந்தாள் கயல். வார்த்தைகள் வற்றிப்போன நிலையில் தன் சைகைகளாலேயே அருணிற்கும் எஸ்தருக்கும் நன்றி கூறினாள் கயல். அன்றே கயலின் உடமைகள் எல்லாம் சக்தியின் வீட்டை அடைந்தது. குழந்தை சக்தியை உறங்க வைத்துவிட்டு, தன் காதலன்.

இல்லை இல்லை தன் காதல் கணவனின் அறையை அடைந்தாள். கயலின் வருகையை அறிந்தவன் கதவருகே ஒளிந்து கொண்டான். கயல் உள்ளே நுழைந்ததும் மெதுவாக கதவை அடைத்துவிட்டு பின் நின்று, கயலை அணைத்துக் கொண்டான். இத்தனை வருடங்களாக எவன் ஒருவனின் அன்பிற்காகவும் ஸ்பரிசத்திற்காகவும் காத்திருந்தாளோ இன்று அவன் தனக்கே தனக்காய் கிடைத்ததை எண்ணிப் பூரித்து நின்றாள்.

தன் பிடியை சற்றும் தளர்த்தாத சக்தி, ''என்ன கயல் இன்னைக்கு நாம சந்திச்சதும் நீ நிறைய பேசுவாய் என்று எதிர்பார்த்தன், ஆனா நீ காலையில் இருந்து அமைதியாவே இருக்கியே மா ,உன்னை இத்தனை வருசம் தனியா தவிக்க விட்டுட்டன் என்று கோபமா, ஏதாவது பேசு கயல்'' எனக் கெஞ்சினான்.


அதே பிடியினுள் சிக்கிய மீனாய்த் திரும்பியவள் ''ஏன் மாமா என்ன இப்பிடி காக்க வைச்சாய், நீ இல்லாம நடை பிணமா வாழ்ந்திட்டிருந்தன்டா,'' என சக்தியை இன்னும் இறுக்கிக் கொண்டு அழுதாள்.

''அழாத கயல், இன்னைக்கு உனக்கு நான் சத்தியம் பண்றன், இனி உன் கண்ணில கண்ணீர் வருது என்றால் அது உன் சக்தி உன் முன் பிணமா இருக்கும்போதுதான், சரியா,'' எனக் கூறிக் கொண்டே நெற்றியில் முத்தம் பதித்தான். முற்றும்.

**அனைவரின் ஆதரவிற்கும் நன்றி**

வாசகர்களின் விமர்சனங்களை oliarazi33@gmail.com என்ற இணையத்தள முகவரிக்கு அல்லது oliarazi என்ற முகநூல் முகவரிக்கு அனுப்பலாம்

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்



நவபுரம் நவசக்தி முன்பள்ளி
கிரிதாஸ் ஜஸ்மிலன்
கைதடி-11.08



நவபுரம் நவசக்தி முன்பள்ளி
அர்ச்சுதன் அக்ஷயா
கைதடி-11.16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாகீசன் திஹாரிய.**

**காதலுக்கும் நட்புக்கும் என்ன வித்தியாசம்?**

காதல் வந்தால் சொல்லி அனுப்பு, உயிரோடிருந்தால் வருகிறேன், இது காதல்.

சரக்கு இருந்தால் சொல்லி அனுப்பு, சைட் டிஸ்ஸோடு வருகிறேன், இது நட்பு.

**கல்யாணி மாத்தளை**

**இரு பொருள் சொல்லும் ஒரு செயல் சொல்லமுடியுமா?**

முதல் முதலாக பறந்துவிட்டுவந்த குழந்தை நுளம்பிடம் அப்பா நுளம்பு கேட்டதாம், முதல் அனுபவம் எப்படி என்று, மனிதர்கள் எல்லாம் இரு கைகளையும் தட்டி தட்டி என்னை வரவேற்றனர் என்றதாம் குழந்தை நுளம்பு.

**சுதாங்கன் கல்முனை**

**சீனாவுக்கு போய்வந்தீர்களாமே, ஒரு அனுபவம்?**

சீன அழகி ஒருவரிடம் அவளது நம்பரைக்கேட்டேன், sex! sex! sex! free sex! tonight என்றாள். வாவ் என்று வாயைப்பிளந்தேன், அருகிலிருந்த அவளது நண்பன் சொன்னான், அவள் சொன்னது, 6663629.

**குமுதா நெடுந்தீவு**

**தாஜ்மஹால் தரிசித்ததுண்டா?**

தாஜ்மஹால் பார்த்துவிட்டு வீடு திரும்பிய கணவனிடம் அன்பே எனக்காக ஒரு காதல் சின்னம் கட்டுவீர்களா? மனைவி கேட்டாள், நான் ஏற்கனவே ஒரு நிலத்தை வாங்கி விட்டேன், சுணக்கம் உன் தரப்பில் மட்டுமே என்றானாம் கணவன்.

**ஹரிஸ்ராஜ் பருத்தித்துறை**

**அண்மையில் பார்த்து அதிர்ச்சியடைந்த சம்பவம்?**

என் மனைவியின் பாடசாலை ரிப்போட் பார்க்கக்கிடைத்தது. அதில் ஆசிரியர் குறிப்பு எழுதியிருந்தார், very obedient and soft spoken student. இதற்கு தமிழ் மொழிபெயர்ப்பு எனக்கு தெரியவில்லை.




## பிறந்தநாள் வாழ்த்துக்கள்




அன்னை திரேசா முன்பள்ளி
கேதீஸ்வரன் ஷர்மினா
கொடிகாமம்-11.22



வலம்புரி ராகவன்
25.11. 2017.



ஸ்ரீ முருகன் முன்பள்ளி
சிவகரன் ஹிரன்யன்
கல்வயல்-11.05



பூவேந்தன் முன்பள்ளி
சுதாகரன் டனுஷாந்
கொடிகாமம் -11.06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிச்சைக்காரனும் தங்க நாணயமும்


ஒரு பிச்சைக்காரன் உணவுக்காக வீடு வீடாக அலைந்தான். அவன் மிகவும் அசிங்கமாக, கிழிந்த உடைகளோடு, சிக்குப் பிடித்த தலைமுடியோடு இருந்தான். ஒரு பழைய கோணிப் பையே அவனுக்கு உடமையாக இருந்தது.

ஒவ்வொரு வீடாகப் போய் பார்த்து விட்டு எதுவும் கிடைக்காவிட்டால் தனக்குள் அந்த வீட்டைப் பற்றிச் சொல்லிக் கொள்வான். ஒரு வீட்டின் முன்னே போய் சொன்ன வார்த்தைகள், ''வீடு மிகப் பெரியது. ஆனால் இங்குள்ளவர்களுக்குப் பணம் நிறைய இருந்தும் திருப்தி இல்லை. அவர்கள் எப்போதும் அதிகமாகவே எதிர்பார்க்கிறார்கள். கடைசியில் அவர்கள் பேராசையால் எல்லாவற்றையும் இழப்பார்கள்.''

இன்னொரு வீட்டுக்குப் போனான். உணவு கிடைக்கவில்லை. இந்த வீட்டில் உள்ளவன் கோடீஸ்வரன். ஆனால் இருக்கிற பணத்தில் திருப்தியடையாமல் அவற்றை இரட்டை மடங்காக்க சூதாடினான். கடைசியில் எல்லாவற்றையும் இழந்தான். எனக்கோ கொஞ்சப் பணம் கிடைத்தால் போதும். திருப்தி கொள்வேன். அதிக ஆசைப் படமாட்டேன்! என்று அந்த பிச்சைக்காரன் சொன்னதும் அதிர்ஷ்ட தேவதை அவன் முன்னே தோன்றியது.

நான் உனக்கு உதவப் போகிறேன். நீ உன்னுடைய கோணிப்பையைப் பிடி. நான் அதனுள்ளே தங்க நாணயங்கள் போடுவேன். உனக்கு எவ்வளவு வேண்டுமோ பெற்றுக் கொள்.

பிச்சைக்காரன் அதிர்ஷ்ட தேவதையைப் பார்த்தான். அதன் கரங்களில் தங்க நாணயங்கள் நிறைய இருந்தன. உடனே அவன் ''கோணிப்பையை விரித்தான். அப்போது அதிர்ஷ்ட தேவதை சொல்லியது கோணிப்பைக்குள் விழுகின்ற நாணயங்கள் தங்கமாக இருக்கும். அவை நிலத்தில் விழுந்தால் தூசியாகி விடும். இது எனது எச்சரிக்கை.''



பிச்சைக்காரன் மிகுந்த மகிழ்ச்சியோடு இருந்தான். அதிர்ஷ்ட தேவதை மீண்டும் எச்சரித்தது. அதன் பிறகு பிச்சைக்காரனின் கோணிப்பைக்குள் தங்க நாணயங்களைக் கொட்டியது. கோணிப்பை நிரம்பியதும் தேவதை தங்க நாணயங்களைக் கொட்டுவதை நிறுத்தியது. ''உன் கோணிப்பையில் இருக்கிற நாணயங்கள் உன்னை அரசனை விட பணக்காரனாக்கும். அது போதும் தானே?'' என்றது அதிர்ஷ்ட தேவதை.

''போதாது. இன்னும் வேண்டும்'' என்றான் பிச்சைக்காரன்.

அதிர்ஷ்ட தேவதை மேலும் சில தங்க நாணயங்களைக் கொடுத்து விட்டு சொன்னது, உன் கோணிப்பை இதற்கு மேல் தாங்காது. பிச்சைக்காரன் சொன்னான் இன்னும் கொஞ்சம் வேண்டும். அதிர்ஷ்ட தேவதை மேலும் தங்க நாணயங்கள் சிலவற்றைக் கொடுத்துவிட்டு நிறுத்தியது.

''உன் கோணிப்பை கிழியப் போகிறது.'' பிச்சைக்காரன் மறுத்தான். ''இல்லை நீ இன்னும் கொஞ்சம் நாணயங்களைப் போடு! என் கோணிப்பை தாங்கும்'' மறு வினாடி கோணிப்பை கிழிந்தது. அதனுள் இருந்த நாணயங்கள் கீழே விழுந்து தூசியாகின. அதிர்ஷ்ட தேவதையும் மறைந்தது. பிச்சைக்காரன் திகைத்துப் போய் நின்றான்.

பேராசை பெருநட்டம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலக் கதை தமிழில்....




# வளைந்த மரம்

மொழிபெயர்ப்பு - ஆசிரியர் த.வராகினி, சாவகச்சேரி



அது ஒரு அடர்த்தியான காடு. அங்கேயிருந்த எல்லா மரங்களும் நேரானதாக உயரமானதாக இருந்தன. அவற்றின் அடிமரப் பகுதிகள் (தண்டுப்பகுதி) அகன்ற வடிவமுள்ளதாக இருந்தன. ஆனால் ஒருமரம் மட்டும் வளைந்தும் நல்ல தோற்றமுடைய தண்டுடைய தாகவும் இருந்தது.

இதையிட்டு அந்த வளைந்த மரத்துக்கு கவலையாக இருந்தது. நான் அழகில்லாமல் இருக்கிறேன். மற்ற எல்லா மரங்களும் நேரான (நேர்த்தியான) வடிவமுள்ள தாக இருக்கின்றன. நான் மட்டும் வளைந்ததாக இருக்கி றேன் என்று எண்ணியது. ஒரு நாள் ஒரு மரம் வெட்டி அங்குவந்தான். அவன் சுற்றிவர பார்த்து விட்டு நான் இந்த வளைந்த மரத்தை தவிர இங்குள்ள எல்லா மரத்தையும் வெட்டப்போகிறேன். இந்தமரத்தால் எனக்குப் பயனில்லை, என்று கூறிவிட்டு ஏனைய மரங்களை வெட்டினான்.

அப்போது அந்தவளைந்த மரம் தனது வளைந்த தன்மையினால் சந்தோஷமடைந்தது.

**நீ உன்னிடமுள்ளதை வைத்தே சந்தோஷமாயிரு**

## இம்மாதம் பிறந்தநாளைக் கொண்டாடும் இந்த மழலைச் செல்வங்களுக்கும் பிறந்த நாள் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

| | | |
|---|---|---|
| மி. அபிஷேகா | 10.11.2017 | சித்திவிநாயகர் முன்பள்ளி தச்சன்தோப்பு, கைதடி |
| டி. டிக்ஸ்பிகா | 16.11.2017 | சித்திவிநாயகர் முன்பள்ளி புதிய குடியேற்றம், நவற்குழி மேற்கு, கைதடி |
| ஸ்ரீ. அஸ்மிகா | 27.11.2017 | பூவேந்தன் முன்பள்ளி சரசாலை மத்தி, சவகச்சேரி |
| ம. மதுரகன் | 10.11.2017 | சின்னத்தம்பி முன்பள்ளி மறவன்புலோ கிழக்கு, சாவகச்சேரி |
| ச. சபபீசன் | 25.11.2017 | சின்னத்தம்பி முன்பள்ளி மறவன்புலோ மத்தி, சாவகச்சேரி |
| ஜெ. டனோயன் | 23.11.2017 | பாரதி முன்பள்ளி மன்னன்குறிச்சி, மிருசுவில் தெற்கு, மிருசுவில் |
| அ. குரசியா | 24.11.2017 | மகாவிஸ்னு முன்பள்ளி கைதடி |
| செ. பிரவீன் | 11.11.2017 | வெள்ளாம் போக்கட்டி முன்பள்ளி வெள்ளாம் போக்கட்டி,கொடிகாமம் |
| தி. அஜஸ்ருதி | 06.11.2017 | கொடிகாமம் மத்தி முன்பள்ளி 1ம் ஒழுங்கை, கச்சாய் வீதி, கொடிகாமம் |
| நி. ருஜிஸ்ஸன் | 30.11.2017 | நிறைமதி முன்பள்ளி குமர நகர், கைதடி மத்தி கைதடி |
| ற. தக்சன் | 18.11.2017 | தனங்கிளப்பு பண்டிதமணி முன்பள்ளி தனங்கிளப்பு, சாவகச்சேரி |
| வ. சங்கீத் | 14.11.2017 | சாவகச்சேரி கிழக்கு முன்பள்ளி அல்லாரை தெற்கு, மீசாலை |
| சி. வேணுயன் | 02.11.2017 | டேனிஜா முன்பள்ளி கெருடாவில் சாவகச்சேரி |
| ய. திவிக்ஷன் | 22.11.2017 | கைதடி விநாயகர் முன்பள்ளி கைதடி கிழக்கு, கைதடி |
| ம. விகாஷனன் | 08.11.2017 | மின்னொளி முன்பள்ளி செல்வ நகர், நாவற்குழி வடக்கு |
| சு. துலக்ன் | 14.11.2017 | கணேசா முன்பள்ளி - எழுதுமட்டுவாழ் எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழ் |
| து. யனிஸ்ரிகா | 23.11.2017 | வளர்மதி முன்பள்ளி கள்ளிநகர், கைதடி கிழக்கு கைதடி |
| அ. கபிநயா | 21.11.2017 | துரையூர் கலைமகள் முன்பள்ளி கச்சாய் தெற்கு, கொடிகாமம் |
| கே.சர்மி | 01.11.2017 | கலைமகள் முன்பள்ளி நூணாவில் மேற்கு, சாவகச்சேரி |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைப்பாடம்

# அனுபவ அறிவு

மாருதி நிறுவனத்தில் ஏராளமான கார்கள் தயாரிக்கப்பட்டு ஒரு கிடங்கில் அடுக்கப்பட்டிருந்தன. அதை வெளியே கொண்டு வரும் போது சிக்கல் ஏற்பட்டது.


காரின் உயரத்தைவிட வாயிலின் உயரம் ஒரு அங்குலம் சிறிதாக இருந்தது. உள்ளே ஏற்றும்போது வராத பிரச்சினை வெளியே கொண்டு வரும் போது ஏற்பட்டது. எப்படி வெளியே கொண்டந்தாலும் மேற்கூரை இடிக்கும். குறைந்தபட்சம் காரின் மேற்புறம் கீறல் விழக்கூடும். கீறல் விழுந்தால் பரவாயில்லை. மறுமுறை பெயிண்ட் அடித்து டபுள் கோட் கொடுத்து விடலாம் என்றார் மேலாளர். வேண்டாம். வாயிலின் மேற்புறம் ஒரு செங்கல் கனத்துக்கு இடித்துவிடுவோம். பிறகுமீண்டும் சிமெண்ட் பூசிவிடலாம் என்றார் அந்த கட்டிடத்தின் இஞ்சினியர்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டேயிருந்த வயதான காவலாளி ஒன்று சொன்னார், அதெல்லாம் வேண்டாம், கார்களின் சக்கரத்தின் காற்றை இறக்கிவிடுங்கள் சரியாக போய்விடும் என்றார். கேட்டுக் கொண்டிருந்த கம்பெனியின் டைரக்டர் பொட்டில் அடித்தது போல் நிமிர்ந்தாராம்.

எப்பேர்ப்பட்ட ஆலோசனை. இஞ்சினியர்களும், டெக்னீஷியன்களும் அங்கே கூடியிருக்க எவருக்கும் தோன்றாதது ஒரு படிப்பறிவு இல்லாத வாட்ச்மேனுக்குத் தோன்றிவிட்டது. இவர்கள் தொழில் நுட்பத்தில் கரைகண்ட நிபுணர்கள். பெரிய பிரச்சினைகளையெல்லாம் சமாளிப்பவர்கள். ஆனால் இந்த சிறிய பிரச்சினை அவர்களை திக்குமுக்காடவைத்துவிட்டது.

அன்றிலிருந்து படித்தவன், படிக்காதவன் அனைவரிடமும் ஆலோசனை கேட்கும் பழக்கம் கட்டாய கடமையாகவே மாறிவிட்டது அங்கு. தற்போது முன்னணியில் உள்ள பல நிறுவனங்களிலும் இது இயல்பான நடைமுறையாகவே உள்ளது....!

## ஜோக்ஸ்




ஆசிரியர் 1 : எதுக்கு சேர் அந்தப்பையனை வாங்கில ஏத்தி விட்டிருக்கீங்க?
ஆசிரியர் 2 : கட்டபொம்மனை தூக்கில போட்ட இடம் எதுன்னு கேட்டா, கழுத்துன்னு சொல்றான் சேர்.

ஆசிரியர் : ஏண்டா லேட்டா வாறே?
மாணவன்: வீட்ல அம்மாவுக்கும் அப்பாவுக்கும் சண்டை சார்.
ஆசிரியர் : அதுக்கு நீ ஏண்டா லேற்று?
மாணவன் : என்னோட ஒரு சப்பாத்து அம்மாட்டயும் இன்னொரு சப்பாத்து அப்பாட்டயும் இருந்திச்சு சேர்.

நன்றி முகநூல் புரட்சி மன்னன்

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்



அன்னை திரேசா முன்பள்ளி
சதீஸ்குமார் கம்சிக்கா
கொடிகாமம்-11.11



அன்னை திரேசா முன்பள்ளி
சுந்தரேசன் லிஷானா
இயற்றாலை-11.16




அன்னை திரேசா முன்பள்ளி
கௌசிகன் டீப்பிகா
வரணி-11.7



மட்டுவில் வளர்மதி முன்பள்ளி
S.நஜாத்
மட்டுவில்-11.19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





புலம்பெயர்ந்து இங்கிலாந்து தேசத்தில் வசிக்கும் ஈழத்தின் முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவிப் பகுதியைச் சேர்ந்த அனாதியன் என்கின்ற மார்க் ஜனாத்தகன் எழுதிய இரண்டு கவிதை நூல்களான 'மனித விலங்கொன்றின் நாட்குறிப்பிலிருந்து' மற்றும்' சீயக்காய் வாசக் காரியும் சில்வண்டுக் காதலனும்' ஆகியவற்றின் வெளியீட்டு விழாவானது 29.10.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு மல்லாவி மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. மார்க் ஜனாத்தகன் என்ற அனாதியன் கடந்த வருடம் 'ஒரு வேள்வி ஆட்டின் விண்ணப்பம்' எனும் கவிதை நூலினை வெளியீடு செய்திருந்தார். முகநூலில் 'அனாதியன் கவிதைக்களம்' எனும் எனும் கவிதைப் பக்கம் ஒன்றினையும் இவர் நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இன்றைய நாளில் ஈழத்து இலக்கியத்தில் இவ்விரு கவிதை நூல்களும் தம்மையும் இணைத்துக்கொண்டுள்ளன. இவரது கவிப்பயணம் மேலும் தொடர ஒளிஅரசியின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றோம்.

---





தமிழ், சிங்களம், ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய நான்கு மொழிகளில் வெளிவந்த கவிஞர் ஆ.முல்லை திவ்யனின் தாய் நிலம் நூல் அறிமுக விழா அண்மையில் யாழ்.பிரெஞ்சு நட்புறவுக் கழகத்தில் நடைபெற்றது.யாழ்.பிரெஞ்சு நட்புறவுக்கழகத்தின் நிர்வாக இயக்குனர் திரு.ஜெய றாட் றொவுக்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நூலின் முதல் பிரதியை நூலாசிரி யர் ஆ.முல்லைதிவ்யன் வெளியிட யாழ் ஆசிரியர் கலாசாலை முன்னாள் விரிவுரையாளர் திரு மதி.சிவலோகநாயகி அவர்கள் பெற்றுக்கொண்டார்.இந்நிகழ்வில்கவிஞர் திரு..சோ.பா உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித்துவமானவர்களாக மிளிர்வது எப்படி?

அத்தியாயம் 10

எழுதுவது: பாலாஜினி - பளை

வாருங்கள் பேசலாம் வாழ்க்கை பற்றி எனும் தொடரினூடாக இம்முறை நான் மிக்க மகிழ்ச்சயுடன் உங்களை எதிர்கொள்கின்றேன். இந்தத் தடவை சமூகத்தில் முன்னிலை பெறுதல் என்கின்ற தலைப்பின் ஊடாக சில விடயங்களை உங் களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன். உங்கள் வாழ்க்கை இன்று எவ்வாறு சென்று கொண்டிருக்கின்றது. நீங்கள் உங்கள் வாழ்க் கையை சந்தோசமான முறையில் அமைத் துக் கொண்டிருக்கின்றீர்களா? என்னுடை ய கருத்துக்களால் உங்களுடைய வாழ்க்கையில் ஏதேனும் நல்ல விடயங்களை நீங்கள் பின்பற் றுகின்றீர்களா? நல்ல மாற்றம் ஏற்பட்டுள்ள தா? அவ்வாறாக நல்ல மாற்றங்களை நீங்கள் எதிர்கொள்வீர்கள் என்ற நம்பிக்கையுடன் இப் பகுதிக்குள் முழுமையாக நுழைகின்றேன்.



ஒரு தனி மனிதனினால் சமூகத்தில் ஒரு போதும் தனித்து வாழ்ந்துவிடமுடியாது? அவன் சமூகமாகவே இணைந்து வாழ விழும்புகின்றான். அவ்வாறு வாழும்போ துதான் சிறந்த முறையிலான வாழ்க்கையை அவனால் அமைத்துக்கொள்ள முடியும். ஆதிகால மனிதன் நாடோடி வாழ்க் கையை வாழ்ந்து வந்தான். அவனுக்கு என நிரந்தரமான ஒரு குறிப்பிட்ட நிலப்ப ரப்பு இருக்கவில்லை. இதனால் அவன் பல பிரச்சினைகளை எதிர்கொண்டான். எனவே அந்தப் பிரச்சினைகளில் இருந்து விடுவித் துக்கொள்வதற்கு அவன் சமூகமாக சேர்ந்து வாழத் தொடங்கினான். அவ்வாறு சமூகமாக சேர்ந்து வாழும்போது அவன் தனது எண்ணங்களையும் உணர்வுகளையும் மற்றவர் களுடன் பரிமாறிக்கொண்டான். காலம் செல் லச்செல்ல இந்தச் சமூகமானது மேலும் பல கட்டமைப்புக்களையும் நிறுவனங்களையும் கொண்ட ஒரு பல் பரிமாணத் தன்மையு டன் வளர்ச்சி அடைந்துவருகின்றது.

இன்றைய காலப் பகுதியிலும்சரி முன் னைய காலப்பகுதியிலும்சரி சமூகம் என்பது மனிதர்களை இணைக்கின்ற ஓர் உயிர்நாடி யாக காணப்படுகின்றது. சமூகத்தில்வாழ் கின்ற அனைவரும் அதனுடைய கட்டமைப் புக்கு உட்பட்டவர்களாக ஆகி வருகின்றோம். எங்கள் ஒவ்வொருவரினுடைய பங்களிப்பும் சமூகத்துக்கு தேவையாக இருக்கின்றது. சமூகத்தில் ஒவ்வொருவரும் நற்பிரசை யாக வாழ வேண்டிய தேவை உள்ளது. இன்றைய சமூகம் நவீனத் தன்மை கொண்ட ஒன்றாக மாற்ற மடைந்து வருகின்றது. போட்டித் தன்மை யும் அதிகரித்துக்கொண்டே போகின்றது. இந்த போட்டித் தன்மை மிக்க நிலையில் சமூகத்தில் அங்கத்துவம் வகிப்பதிலும் நம் ஒவ்வொருவருக்கும் இடையிலும் அதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய ரீதியான திருத்தல் சேவையுடன் தரம் -04 மாணவர்களின் (2018) பரீட்சைப் பெறுபேற்று அடைவை அறிந்துகொள்வதற்கு ஒளிஅரசி நடத்தும் தனித்துவப் பரீட்சை செயற்றிட்டம்

# சிங்கள வினாத்தாள்களின் மொழிபெயர்ப்பு தொகுப்பு பரீட்சை - 2018

கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்கள பத்திரிகைகளில் வெளிவந்த வினாத்தாள்களில் இருந்து தேவையான பகுதிகள் மொழி பெயர்க்கப்பட்டு எமது விசேட ஆசிரியர் குழுவால் மேற்பார்வை செய்யப்பட்டு பகுதி - I, பகுதி - II வினாக்கள் ஒன்றாக கலந்த ஒரு பரீட்சையாக இங்கு தொகுக்கப்பட்டுள்ளது.

இவ்வினாத்தாளை நேரம் கணித்து சுயமாக எழுதச்செய்து இல 70, டேவிட்சன் றோட், கொழும்பு - 04 என்ற முகவரிக்கு அனுப்பினால் எமது பரீட்சைக் குழுவினரால் அவ்வினாத் தாள் திருத்தப்பட்டு புள்ளியிடப்பட்டு மீண்டும் உங்கள் முகவரிக்கு தபாலிடப்படும். (முகவரி எழுதப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட மேலதிக கடித உறை ஒன்றையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும்)

## ஒளிஅரசி பரீட்சைத் தொடர் - 03 (நவம்பர்)

தரம் 4

மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2018

முழுப்பெயர்: - ..............................................................................

பாடசாலை: - ..............................................................................

வீட்டின் சரியான தபால் முகவரி - ..............................................................

..............................................................

தொ.பே. இல. .................................... பிறந்த திகதி. ....................................

பகுதி -I, II

பெற்ற புள்ளி

..............................
பொறுப்பாசிரியர்

..............................
மேற்பார்வையாளர்


## முக்கிய குறிப்பு

இவ் வினாத்தாளுக்கு 200 புள்ளிகள் வழங்கப்படும்.

எதிர்வரும் ஜனவரி மாதம் வரை மாணவர்களின் சுமையைக் கருத்தில் கொண்டு பகுதி I, II ஆகிய இரண்டும் ஒரு வினாத்தாளாகவே வெளிவரும்.

நவம்பர்- 2017

நன்றி: மொழிபெயர்ப்பு
திருமதி. எஸ். தவபாலன்
(அச்சுவேலி, யாழ்ப்பாணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள வினாத்தாள்களின் மொழிபெயர்ப்பு தொகுப்பு பரீட்சை - 2018

**பெயர்**

பகுதி - (I+II)

நேரம் - 1மணி 15 நிமிடங்கள்

**தரம் 4**

★ **பொருத்தமற்ற படத்தின் கீழ்க் கீறிடுக.**

01)


01


02


03



04

02)


01


02


03


04

★ **பின்வரும் வாக்கியங்களில் தரப்பட்டுள்ள விபரங்களை சுருக்கமாக கூறக்கூடிய சொல்லின் கீழ்க் கீறிடுக.**

03) புராதன பொருட்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள இடம்,
1. நூல்நிலையம் 2. அருங்காட்சியகம் 3. காட்சிமண்டபம்

04) வெளியில் இருந்து வீட்டுக்கு வந்த ஒருவர்,
1. நண்பன் 2. விருந்தாளி 3. அயலவர்

05) திசைகளை அறிந்துகொள்ள உதவும் கருவி?
1. தொலைநோக்கி 2. நுணுக்குக்காட்டி 3. திசைகாட்டி

06) நதி கடலைச் சேரும் இடம்,
1. ஆறு 2. கழிமுகம் 3. குடா

★ **பின்வரும் அட்டவணையில் பொருட்களின் நிறைகள், மற்றும் தரப்பட்டுள்ள விபரங்களைக் கொண்டு அதன்கீழ் வரும் 17 - 19 வரையிலான வினாக் களுக்கான சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

அரிசி மூடை ஒன்றின் நிறை = 2 பருப்பு மூடைகளின் நிறை
பருப்பு மூடை ஒன்றின் நிறை = 2 சீனி மூடைகளின் நிறை
சீனி மூடை ஒன்றின் நிறை = 500g

07) அதிகூடிய நிறை கொண்டது எது?
1. அரிசி 2. பருப்பு 3. சீனி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08) குறைந்த எடையில் இருந்து கூடிய எடை வரையிலான ஒழுங்குமுறை எது?
1. சீனி, பருப்பு, அரிசி 2. அரிசி, சீனி, பருப்பு 3. பருப்பு, சீனி, அரிசி

09) குறைந்த நிறை கொண்டது எது?
1. அரிசி 2. பருப்பு 3. சீனி

10) பல வர்ணங்களில் காணப்படக்கூடிய தாவரம்,
1. பப்பாசி 2. ரோசா 3. குரோட்டன் 4. அலரி

★ **தரப்பட்ட பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையவன் - மன்னற்குத்
தன் தேசமல்லாம் சிறப்பில்லை கற்றோருக்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு

11) சென்ற இடமெல்லாம் சிறப்புப் பெறுபவர் யார்?,
1. மன்னன் 2. கற்றோர் 3. வியாபாரி

12) இப்பாடலில் உணர்த்தப்படுவது,
1. மன்னனின் சிறப்பு 2. தேசத்தின் சிறப்பு
3. கல்வியின் சிறப்பு

13) அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் எனும் பழமொழியின் கருத்து,
1. ஒற்றுமையே பலம் 2. விடா முயற்சி பலன் தரும்.
3. பலசாலியும் தோல்வி அடைவான்.

14) ஆகாயத்தில் கோட்டை கட்டுவதுபோல் என்பதன் கருத்து,
1. செய்ய முடியாத செயலைச் செய்ய முயலுதல்.
2. பெரிய வேலையைச் செய்யத் தொடங்குதல்.
3. மிகவும் ஊக்கத்துடனும் தைரியத்துடனும் செயற்படுதல்.

15) பொருத்தமற்ற அடைமொழியுடன் கூடிய சொற்றொடரைத் தெரிவு செய்க.
1. புதிய சட்டை 2. அழகான சட்டை 3. அன்பான சட்டை

16) துன்பத்திற்கு மேல்துன்பம் என்பதை விளக்கும் தொடர்,
1. மதில்மேல் பூனைபோல 2. ஊமைகண்ட கனாப்போல
3. மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தாற்போல

17) மழைமானியின் பயன்பாடு,
1. திரவங்களை அளத்தல். 2. மழை வீழ்ச்சியை அளத்தல்.
3. காற்றின் வேகத்தை அளத்தல்.

18) ஒருவரின் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் அரச அதிகாரி
1. பிரதேச செயலாளர் 2. கிராம சேவகர்
3. அரசாங்க அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.

1. Lets go home ..........................................................................

2. Please open your book ..........................................................

20) பின்வரும் சொற்களை ஆங்கிலத்தில் மாற்றி எழுதுக.

1. சமயலறை ................................

2. உப அதிபர் ................................

21) பின்வருவன சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழில் எழுதுக.

1. புகையிரத நிலையம் ..........................................

2. பப்பாசிப்பழம் ..........................................

22) எண்கோலத்தில் அடுத்துவரும் இரு எண்களையும் முறையே எழுதுக.

20110, 20114, 20118, 20122, 20126, ..............., ..................

23) இலக்கங்களில் எழுதுக.

பதினாறாயிரத்து இருபத்தேழு ..................................................

24) ஒரு மண்டபத்தில் 8 கதிரைகள் வீதம் 24 நிரைகளும், 4 கதிரைகள் வீதம் 10 நிரைகளும் உள்ளன. காணப்படும் மொத்த கதிரைகளின் எண்ணிக்கை யாது?

..........................................

25) அமரசிங்கவிடம் உள்ள பணத்தைக்கொண்டு நான்கு பந்துகள் வாங்கலாம். அல்லது ஐந்து பேனைகள் வாங்கலாம். ஒரு பந்தும், ஒரு பேனாவும் வாங்குவதற்கு ரூபா 80 தேவையாகும். எனில், அமரசிங்கவிடம் இருந்த பணம் எவ்வளவு?

..........................................

26) கப்பல் ஒன்று பி.ப 2.00 மணிக்கு இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்தது. 8மணித்தியாலம் 25 நிமிடங்களின் பின்னர் கொழும்பை வந்தடைந்தால் அடைந்த நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

..........................................

27) பின்வரும் பெரியார்களின் பெயரை எழுதுக.

1. 

2. 

3. 

............................ ............................ ............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28) இன்று புதன்கிழமை நாளைய மறுநாள் 6ந்திகதி வருகிற வாரம் புதன்கிழமை எத்தனையாம் திகதி?

..............................

29) ஒரு வருடத்தின் மாசி மாதம் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமையாயின், அவ்வருடத்தின் தை மாதம் 5ஆம் திகதி என்ன கிழமைநாள் ஆகும்?

..............................

30) உட்பக்கம் தெரியாத பெட்டி ஒன்றில் நான்கு கறுப்பு நிறப்பந்துகளும் இரண்டு வெள்ளை நிறப்பந்துகளும் உள்ளன. பந்துகளைப் பார்க்கமால் ஒரே நிறத்திலான இரு பந்துகளைத் தவறாமல் பெறுவதற்கு பெட்டியிலிருந்து வெளியே எடுக்கப்படவேண்டிய பந்துகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை யாது?

..............................

★ **கீழே தரப்பட்டுள்ள அட்டவணையைக் கொண்டு 31 - 33 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

| A | B | C | D |
|---|---|---|---|
| தச்சுத்தொழில்<br>விவசாயம்<br>வைத்தியம் | மண்வெட்டி<br>கடப்பாறை<br>கூடை | உளி<br>சுத்தியல்<br>குறடு | தராசு<br>படிகள்<br>சாக்கு |

31) தச்சுத்தொழிலில் பாவிக்கப்படும் கருவி,
1. A  2. B  3. C

32) விவசாயத்தொழிலுக்கு பயன்படும் கருவி அடங்கியுள்ள அட்டவணை,
1. B  2. C  3. D

33) தச்சுத்தொழிலுக்கும் வேறுசில தொழில்களுக்கும் பயன்படும் உபகரணங்கள் அடங்கியுள்ள அட்டவணை,
1. A  2. C  3. D

34) **பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

பகல் வேளைகளில் காணப்படும் வெப்பமான சூழ்நிலை எனக்குப் பிடிப்பதில்லை. இரவு நேரமே எனக்கு மிகவும் பிடிக்கும். இரவு நேரத்தில் உணவு தேடிச்செல்வது எனக்கு சுலபமானது. எனினும் நீண்ட தூரம் செல்வதற்கு எனக்கு சக்தி கிடையாது. குறைந்த கண்பார்வை கொண்ட எனக்கு பாதுகாப்புக்கு உள்ளது ஓடு ஒன்றே ஆகும்.

01. இப்பந்தியில் குறிப்பிடப்படும் உயிரினம் ..............................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இந்த உயிரினத்தின் எதிரி ..........................

35) 3kg 500g கடலையில் 250g வீதம் செய்யக்கூடிய பொதிகள்,
1. 14 2. 16 3. 10

36) 1தொடக்கம்10வரையில்இலக்கங்களில்ஒற்றைஇலக்கங்களின்எண்ணிக்கை,
1. 5 2. 6 3. 4

37) வாகனம் ஒன்று மணித்தியாலத்தில் 78km வேகத்தில் செல்கிறது. அது 195km தூரத்தைக் கடக்க எடுக்கும் நேரம்,
1. 1மணி 30 நிமிடம் 2. 2 மணி 30 நிமிடம்
3. 2 மணித்தியாலம்

38) **பின்வரும் பந்தியை வாசித்து அதன் மூலம் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

ருவனி அன்று இருட்டியபிறகே வீட்டுக்கு வந்தாள். வேறு நாட்களில் இல்லாதவாறு வீட்டைச்சுற்றி வெளிச்சமாக இருந்தது, தூரத்திலேயே தெரிந்தது. ருவனி ஆகாயத்தைப் பார்த்தாள். வானத்தில் சந்திரன் (நிலவு ) தோன்றவில்லை. நட்சத்திரங்கள் பெருமளவாக மின்னின. அவள் மீண்டும் வீட்டுப்பக்கத்தை ஆர்வத்தோடு பார்த்தாள்.

01. 'ருவனி' இச்சொல்லில் காணப்படும் எழுத்துறுப்புக்கள் இரண்டை எழுதுக.

.................................................. ..................................................

02. 'வெளிச்சம்' என்ற சொல்லின் எதிர்கருத்துச் சொல்லை எழுதுக.

..........................

03. அதிகம் என்ற கருத்தைத்தரும் பந்தியில் குறிக்கப்பட்டுள்ள சொல் எது?

..........................

04. ஒன்றைத் தெரிந்துகொள்ளும் ஆசை என்னும் எண்ணத்தைத் தரும் தனிச் சொல்லை எழுதுக.

..........................

05. இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் பெண்பால் ஒருமைச் சொல்லுக்கு உரிய இறந்தகால வினைச்சொல்லைத் தெரிந்து எழுதுக.

..........................

06. கண்ணில் பட்டது என்பதன் பொருளை எழுதுக.

..................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39) **தரப்பட்டுள்ள இடைவெளிக்கு மிகவும் பொருத்தமான சொல்லை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01. இதுவரை வெளிச்சத்தில் ...................................
(மிண்ணிய /மின்னிய ) அறை இருட்டாகி விட்டது.

02. பிள்ளைகள் ஆசிரியை வருவதைக் கண்டதும் ..............................
(நிசப்தம் / நிஸப்தம் ) ஆனார்கள்.

40) Happy Birthday to you என்னும் வாக்கியத்தின் பொருளை சிங்களத்தில் எழுதுக.

..............................................................................................

41) 'தயவு செய்து செவிமடுங்கள்' என்ற பொருள்தரும் ஆங்கில வாக்கியத்தை எழுதுக.

..............................................................................................

42) **பின்வரும் ஒவ்வொரு வினாக்களிற்கும் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01. வருடம் முழுவதும் பூக்கக்கூடிய தாவரம்.
1. பூசணி 2. முள்முருங்கை 3. வாழை 4. வாகை

02. மாமிச உண்ணியான பறவை.
1. காகம் 2. கிளி 3. கோழி 4. கொக்கு

03. தரையில் வாழும் மிகப்பெரிய உயிரினம் ஆவது.
1. யானை 2. திமிங்கிலம் 3. டைனோசர்
4. வரிக்குதிரை

04. சகல போசணை வகைகளும் அடங்கிய உணவுவகை.
1. நற்பயனுள்ள உணவுவகை 2. கலப்பு ஆகாரவேளை
3. பகல் உணவுவேளை 4. காலை உணவுவேளை

05. தேசியக்கொடியில் முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நிறம்.
1. கரும்சிவப்பு 2. மஞ்சள் 3. செம்மஞ்சள் 4. பச்சை

43) 2085, 5280, 5208, 2058 இந்த எண்கூட்டத்தை ஏறுவரிசைப்படுத்தி எழுதும்போது மூன்றாவதாக வரும் எண் எது?

..............................................................................................

44) மு.ப 10.50க்கு புறப்படவேண்டிய பஸ்வண்டி 25 நிமிடங்கள் தாமதமாகப் புறப்பட்டது எனின், அந்த பஸ்வண்டி புறப்பட்ட நேரம் என்ன?

..............................................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45) ஒரு வீட்டில் தாத்தா, பாட்டி, பேரன் ஆகிய மூவரும் பத்திரிகை வாசித்த நேரங்கள் கீழேயுள்ளன. தாத்தா மு.ப 9.10 இலிருந்து மு.ப 10.40 வரையும், பாட்டி மு.ப 8.10 இலிருந்து மு.ப 9.20 வரையும், பேரன் மு.ப 8.30 இலிருந்து 9.50 வரையும் பத்திரிகைகள் வாசித்தார்கள். மூவரும் ஒரே வேளையில் பத்திரிகைகள் வாசித்த நேரம்?

1. மு.ப 8.10 இலிருந்து மு.ப 10.40 வரை
2. மு.ப 9.10 இலிருந்து மு.ப 9.20 வரை
3. மு.ப 8.30 இலிருந்து மு.ப 9.20 வரை

46) பின்வரும் ஒருமை வாக்கியங்களை பன்மை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

1. நாய் உறக்கத்தில் இருந்தது. ..................................................

2. சித்திரையில் பூ மலர்ந்தது ..................................................

47) பின்வரும் வாக்கியங்களை சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை ) எனவும் எழுதுக.

1. கதிரைகள் உடைந்து விட்டது. ..................................................

2. அண்ணாமார் பாட்டு பாடினார்கள். ..................................................

48) பின்வரும் மரபுத் தொடரின் கருத்தை எழுதுக.

கை கொடுத்தல் ..................................................

49) ஒரு அலங்காரப் பந்தலில் சிவப்பு, பச்சை, மஞ்சள் நிற மூன்றுவகை மின் குமிழ்கள் மாறிமாறி ஒளிர்ந்தன. சிவப்புநிற மின்குமிழ் ஐந்து நிமிடங்களுக் கொரு தடவையும், பச்சை நிற மின்குமிழ் நான்கு நிமிடங்களுக்கு ஒரு தட வையும், மஞ்சள் நிற மின்குமிழ் இரண்டு நிமிடங்களுக்கு ஒரு தடவையும் ஒளிர்ந்தது. காலை 8.30க்கு மூன்றும் ஒரே தடவையில் ஒளிர ஆரம்பித்தது எனின் மீண்டும் மூன்றும் ஒரே தடவையில் ஒளிர்ந்த இரு நேரங்களும் எவை?

..................................................

50) ''டெங்கை ஒழிப்போம்'' எனனும் தலைப்பில் நான்கு வாக்கியங்கள் எழுதுக.

1. ..................................................

2. ..................................................

3. ..................................................

4. ..................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







கரித்த போட்டி நிலவுகின்றது. சமூகத்தில் முன்னிலை வகிக்க வேண்டும் என்று நாம் நினைப்பது தவறில்லை. அது நியாயமானது தான். ஆனால், சமூகத்தில் முன்னிலை வகிப் பதற்கு எவ்வாறு முயற்சிக்க வேண்டு என்பது தான் முக்கியம்.

உண்மையைச் சொல்லுங்கள். உங்கள் ஒவ்வொருவரது மனிதினிலும் சமூகத்தில் முன்னிலை வகிக்கவேண்டும் என்ற விருப் பம் இருக்கிறதல்லவா? இதுவும் உங்கள் வாழ்க்கைக்கு தேவையான ஒன்றுதானே. வாழ்வில் வெற்றிபெற வேண்டுமானால் சமூகத்தில் முன்னிலை வகிப்பது அவசியம் தானே.

அப்படியாயின் வாருங்கள் சமூகத்தில் முன்னிலை வகிக்க வேண்டுமா யின் செய்ய வேண்டியவற்றையும் பின்பற்ற வேண்டியவற்றையும் விரிவாக நோக்கலாம். சமூகத்தினுடைய அடிப்படை அலகு குடும் பம்தான். குடும்பங்கள் பல இணைந்துதான் சமூக அமைப்பு தோன்றுகின்றது. சமூகத் துக்குள் நுழைவதற்கு முன் நீங்கள் ஒவ்வொ ருவரும் குடும்பத்தினுள் நுழைந்திருப்பீர்கள். எனவே குடும்பத்தில பழகிய பண்புகளைத் தான் சமூகத்தில் வெளிப்படுத்துவீர்கள். குடும்பத்தில் வாழ்கின்றபோது குடும்ப அங்கத்தவர்களுக்கிடையே ஒற்றுமை, விட் டுக்கொடுப்பு, அந்நியோன்னியம் முதலிய பண்புகளை நீங்கள் பழகிக்கொள்வீர்கள். குடும்பத்தில் வாழ்கின்ற அனைத்து அங்கத் தவர்களும் ஒரேமாதிரியான குணப்பண்பை திறமையை செயற்பாட்டை கொண்டவர் களாக இருக்கமாட்டார்கள். எனவே குடும் பத்தில் வாழ்கின்ற ஒவ்வொருவரும் மற் றவர்களைப் புரிந்துகொண்டு செயற்பட்டு குடும்ப ஒரு மைப்பாடுகளுக்கும் குடும்பத் தினுடைய விஸ்திரமான கட்ட மைப்புக்கு துணைபோகக்கூடியவர்களாக இருத்தல் அவசியம்.

முதலில் ஒவ்வொருவரும் குடும்பத்தில் ஏற்படுகின்ற சவால்களுக்கு வெற்றிகரமாக முகம்கொடுக்க கற்றுக்கொள்ளுங்கள். சமூகத் தில்முன்னிலை வகிப்பதற்கு முன் குடும்பத் தில் முன்னிலை வகிக்க பழகிக்கொள்ளுங் கள். பொதுவாக, ஒரு குடும்பத்தில் எவர் ஒருவர் அனைத்து தேவைகளையும் நிறை வேற்றிவைத்து, உற்சாகத்துடன் செயற்ப டுகின்றாரோ அவரை அந்தக் குடும்பத்தில் உள்ளவர்கள் முன்னிலைப்படுத்தி முக்கியத் துவப்படுத்துவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கும்.

அதே போலத்தான் சமூகமும். குடும் பத்தில் இருக்கின்ற அங்கத்தவர்கள் தானே சமூகத்தினுடைய கட்டமைப்பையும் ஏற் படுத்துகின்றார்கள். எவர் ஒருவர் சமூகத்தி னுடைய தேவைகளை சிறந்த முறையில்



நிறைவேற்றுகின்றாரோ அவரை சமூகம் முன்னிப்படுத்துகின்றது.

உங்கள் ஒவ்வொருவரினதும் சொல் செயல் போன்றவையே அதனைத் தீர்மானிக் கின்றன. சிலர் எத்தனையோ காலங்களுக்கு முன்னர் வாழ்ந்தும்கூட, இன்றும் சமூகத்தில் முன்னிலைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.


நெல்சன்மண்டேலா ஓர் கறுப்பினத்தவர். அவர் தனது கறுப்பின சமூக மக்களினுடைய உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது வாழ்நாளையே அர்ப்பணித்தவர். நோபல் பரிசையும் வென்றவர். சமூகத்துக்கு அவர் செய்த சேவைக்காக சமூகம் அவருக்கு சிறந்த முன்னிலைப்படுத்தலை வழங்கி இருக்கின்றது. அதைப்போலத்தான் மகாத்மா காந்தி, அன்னை திரேசா போன்றவர்களும் சமூகத்தில் தம்மை தனித்துவமானவர்களாக வெளிப்படுத்திக்கொண்டார்கள். இவர்கள் தமது உயரிய எண்ணங்களையும் சிந்தனைகளையும் செயல்வடிவமாக்கியவர்களாவர்.

இவர்களைப் போலத்தான் உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் ஏதோ ஓர் அபார சக்தி மறைந்திருக்கின்றது. அந்த சக்தியை வெளிப்படுத்தும் பொறுப்பு உங்களுடையதே. அந்த சக்தியை இணங்கண்டு அதை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மெற்கொள்ளுங்கள். சமூகத்தில் உங்களைப்போல் எத்தனை மனிதர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் அனைவரிலும் நீங்கள் தனித்துவமானவராகத் தெரிய வேண்டுமாயின் உங்களை நீங்கள் வளர்த்துக்கொள்ளுதல் அவசியமாகும். சமூகத்தில் முன்னிலை பெறவேண்டும் என்பது



சாதாரண விடயமல்ல என்பதை நீங்கள் முதலில் புரிந்துகொள்ளுதல் வேண்டும். முன்னேற வேண்டும் என்று நினைக்கும் போது சவால்களும் தடைகளும் ஏற்படுவது வாழ்க்கையினுடைய இயல்பு. ஆனால், அவற்றை எல்லாம் கண்டு அஞ்சி நீங்கள் பின்வாங்கினீர்கள் என்றால் உங்கள் முயற்சி பயனளிக்கமாட்டாது.

எப்போதும் துணிவுடன் செயற்படல் வேண்டும். மற்றையவர் இப்படித்தான் வாழ்கின்றார். நானும் அவரைப் போலவே வாழ்ந்துவிட்டுப்போகலாம் என்று நினைக்காதீர்கள். மற்றையவர்களிலும் தனித்துவமாக வாழக் கற்றுக்கொள்ளுங்கள்.


அப்போதுதான் சமூகம் உங்களை முன்னிலைப்படுத்தும். எனவே எவ்வாறான செயற்பாடுகளின் ஊடாக சமூகத்தில் முக்கிய அந்தஸ்தை ஒரு சிறந்த முன்னிலைப்படுத்தலை பெறமுடியும் என்பதைப் பார்க்கலாம்.

நேர்மையான முறையில் செயற்படுதல், சமூக நிகழ்வுகளில் பங்கெடுத்தல், இலட்சியப்பாதையில் செயற்படல், தலைமை தாங்கும் பண்பு, பழமை பேணல் போன்றவையே உங்களை சமூகத்தில் முன்னிலைப்படுத்தும் என்பதை உணர்ந்து செயற்பட்டு தனித்துவமானவர்களாய் காலம் கடந்தும் வாழ்வீர்களாக...

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்




ஜ. அனந்திகா
2017.11.27
அச்சுவேலி



ஸ்ரீ மகாவிஷ்னு முன்பள்ளி
தனுசன் தனிகா
நாவற்குழி-11.26



வளர்மதி முன்பள்ளி
ஞா.கவினுஷன்
மட்டுவில் -11.21



சித்திவிநாயகர் முன்பள்ளி
குணாளன் பினோகஸ்
நாவற்குழி-11.22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தின் நல்குரல் நங்கை

தொகுத்து தந்தவர்
எம். எம். எம் கஸ்ஸாலி அக்குறணை, கண்டி.

எமது நாட்டின் ஊடகங்களின் முன்னோடியாக இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் மிக முக்கியத்துவம் பெறுகின்றது. அதிலும் தமிழை தமிழாக உச்சரிப்பதில் எமது இலங்கை வானொலி தனித்துவம் வாய்ந்தது. அத்தோடு அதன் தமிழ் ஒலிபரப்பின் ஆரம்ப கால அறிவிப்பாளர்களான எஸ். பி. மயில் வாகனம், எஸ்.கே. பரராஜ சிங்கம், சி. நடராஜசிவம், பி. எச், அப்துல்கமீட், ராஜேஸ்வரி சண்முகம், புவனலோஜினி, கோகிலவர்த்தினி, புர்க்கான் பி. இப்திகார், விசாலாட்சி, கே.எஸ். ராஜா போன்றவர்களால் தமிழ் உச்சரிப்பு கட்டிக்காக்கப்பட்டு வந்தது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். அண்மைக் காலங்களின் இந்நிலை சற்று பிறள்வு கண்டுவரும் நிலையில் மலையகத்தினைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒரு தமிழ்க்குயில் ஒலிபரப்பின் பாரம்பரியங்களைக் கட்டிக்காத்து வந்தது.



அவர் வேறு யாருமல்ல, ஜெயலக்ஸ்மி சந்திரசேகர் என்ற சிறந்த அறிவிப்பாளரே. மாத்தளை மாவட்டத்தில் பிறந்த இவர் தான் பிறந்த மாவட்டத்திலும் நாவலப்பிட்டியவிலும் கல்வி கற்று சங்கீதப் பட்டதாரியாக வெளிவந்தவர். 1994 இல் கொழும்பு சர்வதேச ஒலிபரப்பின் மூலம் நிரந்தர நியமனம் பெற்று வர்த்தகசேவை, தேசியசேவை, தென்றல் போன்றவற்றில் கச்சிதமான தமிழ் உச்சரிப்புடன் ஏராளமான நிகழ்ச்சிகளைத் தொகுத்தளித்து தனது பெயருக்கேற்றவாறே வெற்றி மகுடம் சூடியவர். துல்லியமான செய்திவாசிப்பாளராக விளங்கிய இவர் பாடசாலை மாணவர்களுக்கு ஆசிரியர்களால் வாசிப்பின் நேர்த்திக்காக உதாரணமாக கூறப்பட்டமையே இவரது மாபெரும் வெற்றியாகும். தனது தொகுப்பில் ஒலிபரப்பான அத்தனை நிகழ்ச்சிகளிலும் நேயர்களின் அங்கீகாரம் பெற்று வெற்றிவாகை சூடியவர்.

தனது திறன்களினால் எதுவித அகங்காரமும் கொள்ளாது அமைதியாய் கண்ணியமாய் அமுதசுரபியாக அழகு தமிழில் நிகழ்வுகளை வழங்கிய இவர் அண்மையில் ஒலிபரப்பு துறையில் இருந்து ஓய்வுபெற்றார். இவ்வாறானவர்களின் திறன்களை வளர்ந்துவரும் அறிவிப்பாளர்கள் பின்பற்றுவார்களா என்பது கேள்விக்குறியே. பல பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகிக்கக்கூடிய அதீததிறமைகள் இருந்தும் அவற்றை தகுதியற்றவர்கள் தட்டிப்பறித்துக்கொண்டது வேதனைக்குரியது. எந்த ஒரு நிகழ்ச்சியையும் அலட்டிக்கொள்ளாமல் நற்றமிழில் நல்குரல் வளத்துடன் வழங்கும் பாணி இவருக்கே உரியது. சில மெல்லிசைப் பாடல்களையும் பாடியுள்ள ஜெயலக்ஸ்மி சந்திரசேகர் அவர்களின் அபாரசேவையை 48 வருட வாசகனாக இருந்துவரும் நான் மனதார பாராட்டுகின்றேன். இவ்வாறான அறிவிப்பாளர்கள் ஒலிபரப்பு துறைக்கு வருவார்களா என்பதை காலம் தான் சொல்லவேண்டும்.

தேன் தமிழில் செவி இன்பம் தந்த ஜெயலக்ஸ்மி சந்திரசேகர் அவர்களின் ஓய்வுகாலம் சிறப்புற அமைய ஒளிஅரசியின் சார்பில் வாழ்த்துவதில் நாமும் மகிழ்வடைகின்றோம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மெல்போர்ன்
அவுஸ்திரேலியாவிலிருந்து
ப.கனகேஸ்வரன் (கேஜி)

# சுவரைக்கொன்ற சித்திரம்


காதல் பற்றிய தெளிவில்லாத நேரத்திலிருந்தே சாத்விகாவுக்கும் சுதேசுக்கும் இடையில் அத்தனை நெருக்கம். அவள் குட்டை பாவாடை நிறைய அணிவாள். முடியை பேபி சாலினி போலவே வெட்டி இருப்பாள். நானும் அவர்களுடன் தான் எப்போதுமே. ஆனால் அவர்கள் இருவரும் வேறு ஒரு உலகத்தில் என்னைக் கடந்து போயிருப்பார்கள். சோறு கறி ஆக்கி விளையாடுவோம். நான் பிள்ளையாக அவனும் அவளும் என் தாய் தகப்பனாக. நான் ஐயராக இருப்பேன். பால் கொடி தாலி எடுத்துக் கொடுத்து பூக்கள் தூவி ஒரு தனி ஆளாக பெயிண்ட் டின்னில் மேளம் அடித்து வெறும் வாயில் பீப்பீ ஊதியும் அவர்கள் திருமணத்தை நடத்தி முடித்தேன். அன்றிலிருந்து தான் அவனும் அவளும் என்னை மகனே என விளையாட்டாக அழைக்க ஆரம்பித்தனர். நல்லா படிப்பவர்கள் அவர்கள் இருவருமே. நான் கொஞ்சம் சுமார் தான், ஆனாலும் என்னை விட்டுக்கொடுக்க மாட்டார்கள் இருவருமே. பாடமாகட்டும் உணவாகட்டும் நான் கூடவே தானிருப்பேன். நாங்கள் மூவரும் ஒரே ஊர் என்பதால் பாடசாலை தொடங்கி மாலை நேர வகுப்பு, விளையாட்டு, கோவிலுக்கு போவது எல்லாமே ஒன்றாகத்தான். நாங்கள் உறங்குவது மட்டுமே எங்கள் வீடுகளில், வாழ்க்கை அவ்வளவு சுகமாய் போய்க்கொண்டி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்த தருணம். காலம் உருண்டோட அவர்கள் இருவரும் மேற்படிப்புக்காக காலேஜ் போயிருந்தார்கள், நான் படிப்பை பாதியிலேயே நிறுத்திவிட்டு வேலைக்குப் போய்க் கொண்டிருந்தேன். அப்போதெல்லாம் அவர்கள் காதல் அவரவர் வீடுவரை தெரிந்து சம்மதமும் கிடைக்கப் பெற்றிருந்தது. அவர்களை விட மகிழ்ச்சி எனக்கே . இப்போதெல்லாம் அவர்களுக்கிடையில் அடிக்கடி சண்டை வர ஆரம்பித்திருந்தது. அவ்வப்போது சமாதானமாகி கூடலும் ஊடலுமாய் போய்க்கொண்டிருந்தது. இடையில் ஒருநாள் அவர்கள் பிரிந்துவிடப் போவதாக சொல்லிக்கொண்டிருந்தான். தாயும் தகப்பனும் விவாகரத்தானால் பிள்ளைகள் பாடுதான் பெரும்பாடு. நானும் இப்போ அந்த பிள்ளையின் மனநிலையில் தான். அதுவரை அவன் எனக்கு சொல்லவே இல்லை அவர்கள் பிரிவதற்கான காரணத்தை. அவளுக்கு இன்னொரு பையன் மீது புதுக்காதலாம். இப்போதெல்லாம் அவன் காலேஜ் போவதை குறைத்து இருந்தான். முன்னர் போல இல்லை, தீய பழக்கங்கள் எல்லாம் அவனிடம் இருந்தன. புகைபிடித்தல் தாடி வளர்த்தல் தண்ணி அடித்தல் என காதல் தோல்விக்கான எல்லா வழமையான செயல்களும். அடிக்கடி அவன் என்னிடம் சொல்லிக் கொண்டு அழுவான். ஆனால் அன்று வழமைக்கு மாறாக முகச்சவரம் செய்து காலேஜ் போனான். என்னைக் கூட்டிக் கொண்டு ஊர் சுற்றினான். நான் அவளை மறந்துவிட்டேன் என்றான். தன்னை ஒரு




புது மனிதனாக உணருவதாகவும் இந்த உலகத்திலேயே சந்தோஷமான மனிதன் தான் தான் எனவும் சொன்னான்.

எனக்கு கூட ஒரு பியர் போத்தல் வாங்கிக் கொடுத்தான். அவன் குடிக்கவில்லை, போகும் போது ‘‘மகனே என் கல்யாணத்துக்கு பிறகு தான் நீ கல்யாணம் முடிக்கணும் என்றான் . மனித மனம் என்ன அவ்வளவு பலமானதா? பலவீனமான மனதை பலமானதாக காட்டிக் கொள்ள எத்தனை பிரயத்தனப்பட்டிக்கிறான் அவன். அன்பு ஒரு மிகக் கொடிய ஆயுதம் என்பதை அன்றைய இரவே அவன் தூக்கில் தொங்கிய போது கூட நான் உணரவில்லை. எல்லாம் மறந்து இன்று அவள் திருமணம் அமோகமாக நடந்து முடிந்த போது அவள் முகத்தில் இருந்த புன்னகையும் மகிழ்ச்சியும் தான் புரியவைக்கிறது அன்பு ஒரு மிகக் கொடிய ஆயுதம் என.

## 22 ஆம் பக்க விடைகள்

### தத்துவங்கள்

சூரியன் உதிப்பதற்கு முன் நீ எழுந்தால் சூரியனையே தொட்டுவிடலாம்.

If You up before sun rise You will be able to touch the sun

### வித்தியாசங்கள்

தடி, பாம்பின் நாக்கு, முயலின் காது, முகில், தொப்பி, புகை போக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்கள் நலமா?

**கேள்வி:-**

வணக்கம் ஒளிஅரசி குழுமத்தினர் அனைவருக்கும். எனது பெயர் துவாரகா. (பெயர் மாற்றப்பட்டுள்ளது) எனக்கு 26 வயது. மூன்று வயதில் ஒரு மகன் உண்டு.


எனது இருபத்தி இரண்டாவது வயதில் பெற்றோர் வரன் பார்த்து எனக்கு திருமணம் செய்துவைத்தனர். சில மாதங்கள் மகிழ்வாய் தான் நகர்ந்தது வாழ்க்கை. ஆறு மாதங்கள் ஆகியிருக்கும், சில நாட்களில் நேரம் கழித்து வீட்டிற்கு வரத்தொடங்கிய கணவரை நான் முதலில் எதுவும் கேட்கவில்லை. நாட்கள் செல்லச்செல்ல ஏன் தாமதம்? எனக்கேட்டேன். காரணம் சொல்லவேண்டிய அவசியம் இல்லை என்றார். அதன் பின்னர் ஒவ்வொரு நாளும் இதுவே வழக்கமானது. நாட்கள் செல்லச்செல்ல இருவருக்கும் எப்போதும் பிரச்சினைகளே. அவரது நடவடிக்கைகளால் வாழ்க்கை மீதே வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. காலையில் வேலைக்கு போனால் இரவு அதிக நேரத்தின் பின்னரே வீடு திரும்புவார். நண்பர்களுடன் ஊர் சுற்றுவதும் நேரம் செலவழிப்பதுமே அவரது பொழுதுபோக்கு. நல்ல நாள், கோயில், குளம் என எதுவுமே கிடையாது. இதற்கிடையில் குழந்தை பிறந்து அவனுக்கும் இரண்டு வயதாகிவிட்டது. இந்நிலையில் திடீரென எனது கணவர் இறந்துவிட்டார். தற்போது ஒரு வருடம் கடந்த நிலையில் எனது பெற்றோர் எனக்கு வேறு திருமணம் செய்துவைக்க எண்ணுகின்றனர். எனக்கோ திரும்பவும் ஒரு கசப்பான இல்லறம் எதற்கு எனத்தோன்றுகின்றது. தயவுசெய்து சிறந்த ஆலோசனை தரவும்.?

**பதில்:-**

அன்புச் சகோதரியே தங்களின் கடந்த கால வாழ்வும், அதன் கசப்பான அனுபவங்களையும் குறிப்பிட்டிருந்தீர்கள். நீங்கள் குறிப்பிட்டது போன்று சிலரது நடத்தை பிறழ்வுகள், பொறுப்பற்ற தன்மைகள்.. இப்படி ஒரு கசப்பான நிலையையே தோற்றுவிக்கும். ஒரு மனிதன் மரணித்த பிறகு அவரைப்பற்றிய விடயங்களை கூறுவது இனி பயனற்றதே ஆகும் அதனால் தங்களின் இரண்டாவது விடயத்துக்கு வருவோம்.

தனி மரம் தோப்பு ஆகாது என்பார்கள், பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு தீங்கிளைக்க மாட்டார்கள், வருகின்ற வரன்கள் தான் நல்லவனாக வாழவேண்டும். தற்போதய சூழலில் கலாசாரம் என்ற போர்வையில் தடம் மாறி மானிட கொள்கைக்கு முரணாக அனேகர்வாழ்கின்றனர். இதுவே இன்பமான இல்லற வாழ்க்கையை சின்னாபின்னமாக்குகிறது. தங்களின் கடந்த கால வாழ்வியல் அனுபவங்கள் உங்கள் பெற்றோருக்கு தெரியுமா?.. தெரியுமென்றால் பரவாயில்லை. தெரியாவிடில் கட்டாயம் இது பற்றி கதைக்கவும். கலந்து அவர்களுடன் ஆலோசித்து பொருத்தமான வாழ்க்கையை தெரிவு செய்யச் சொல்லுங்கள்.

முக்கியமாக உங்கள் குழந்தையை கருத்திலெடுங்கள்.. வருகின்ற கணவர் அப்பிள்ளைக்கு உடலாலோ அல்லது உளவியலாலோ தீங்கிளைக்காத





எஸ் சிவஞானம்
உள வளஆலோசகர் 0776156081


**வாசகர்களின் கவனத்திற்கு...**

உங்கள் பிரச்சினைகளை பெயர் குறிப்பிடாது எமக்கு எழுதி அனுப்பினால் உரிய ஆலோசனைகள் வழங்க நாம் தயாராகவுள்ளோம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வராக இருக்க வேண்டும். நான் இதுவரை சந்தித்த நபர்களின் பிரச்சனையில் 90சத வீதமானவை குடும்ப பிரச்சினை. கூடுதலானவை இரண்டாவது திருமணத்தின் பின்னரான குழந்தைகள் பிரச்சினை. சில குடும்பங்களில் மூத்த (முதன்னய வாழ்வின்) பிள்ளைகளுக்கு ஆண் பெண் இரு சாராருமே கொடுமைப்படுத்துகின்றனர். உணவு கொடுக்காமை, துன்புறுத்தல், சீரான பராமரிப்பின்மை, வீட்டில் இருந்து வெளியேற்றல். (பேரன் பேத்தி வீட்டில் விடுதல், அல்லது சிறுவர் இல்லங்களில் சேர்த்தல் அல்லது சொல்லமுடியாத சித்திரவதைகளை செய்து சட்டத்தின் மூலமே பிள்ளைகள் இல்லத்தில் சேர்க்கப்படுகிறார்கள்.) இவ்விடயங்களை கருத்தெடுத்து உங்கள் பெற்றோருடன் கதைத்து, உங்களுக்கு நிச்சயிக்கும் வரனிடமும் கதைத்து இதுபற்றிய நல்லதொரு முடிவை எடுக்கவும். குறிப்பாக நீங்கள் திருமணத்தின் முன் அவருடன் கதைத்து சீரான இணக்கப்பாடொன்றை ஏற்படுத்துவதே சிறந்தது. உங்களுடைய வயது 23 என்றபடியால் இன்றய கால சூழ்நிலையில் கட்டாயம் ஒரு பெண்ணிற்கு துணை முக்கியம். நீங்கள் நல்லவராக இருப்பீர்கள் ஆனால் ஏதோ ஒரு சமூக சக்திகளால் உங்கள் வாழ்வில் பல குறுக்கீடுகள் நிகழும். பல விடயங்கள் உங்களைப் பாதிக்கும் எல்லாவற்றையும் விட உணவு, உடை, உறையுள் என்ற அடிப்படை தேவைகளைப்போல பாலியலும் (தாம்பத்தியமும்) கட்டாயம் தேவையான ஒன்றே. இதனடிப்படையில் உங்கள் பெற்றோரின் முடிவு வரவேற்கக் கூடியதுதான் சகோதரி.

**கேள்வி:-**


ஒளிஅரசியின் நீங்கள் நலமா பகுதி பார்த்தேன். மிகநன்று. நானும் இப்பகுதியில் இணைந்து என்னுடைய சந்தேகத்தினையும் நிவர்த்திக்கவிரும்புகின்றேன். எனது தோழிக்கு திருமணமாகி ஆறு மாதங்களாகின்றது. கணவர் வெளிநாட்டில் உள்ளார். பதிவுத்திருமணம் நடந்து சில நாட்களின் பின் திரும்பிச்சென்றுவிட்டார். திருமணமான புதிதில் மிகநன்றாக கதைத்துக்கொண்டு தான் இருந்தார். இப்போது ஆறுமாதங்கள் கடந்தநிலையில் அவளுடன் கதைப்பது மிகக்குறைவு. கேட்டால் வேலை, அது இதென்று கூறுகின்றாராம். எனது தோழி பயத்துடன் உள்ளாள். எப்போதும் யோசனையுடன் பார்ப்பதற்கே கவலையாக உள்ளது. அவளுக்கு ஆலோசனை தரமுடியுமா?

**பதில்:-**

அம்மணி. தங்களின் தோழியின் நிலை இன்று அனேகருக்கு ஏற்படுகின்றது.. ஊர்க்கோவில் திருவிழக்களில் கற்பூர சட்டி ஏந்தும் பெண்களில் அனேகரும், அலகு குத்தி பால்செம்பு தூக்குபவர்களில் அனேகரிடமும் கேட்டால் அவருக்கு காட் கிடைக்கவேணும், வருகிற வருசம் திருவிழாக்கிடையில அவரிட்ட போகவேணும், இல்லாவிடில் மகளுக்கு இந்த வருசத்துக்க வெளிநாட்டு சம்மந்தம் பொருந்தணும். படிச்சு பட்டத்துக்கு கும்பிடுபவர்களைவிட வெளிநாட்டுக்கு போக கும்பிடுபவர்கள்தான் அனேகம்.

தாங்கள் கேட்ட விடயத்துக்கு ஒரே ஒரு பதில்தான் உள்ளது. ஒன்று அவரிடம் இது பற்றி கேட்பது.. அல்லது அவரது பெற்றோர் இந்நாட்டில் இருந்தால் இது பற்றி தகவலறியலாம். (உண்மையில் வெளிநாட்டில் உள்ளவர்கள்.. 15 மணிநேரம் கூட கொட்டும் பனியிலும், எரிக்கும் வெயிலிலும் உழைக்கவேண்டும். அங்குள்ளவர் அப்படி கஷ்டப்படுவதில்தான் இங்குள்ளவர்கள் வசதியாக வாழ்கிறார்கள். இலங்கைக்கு வந்த செலவு, திருமணச் செலவு என்பவற்றை ஈடு செய்ய மாப்பிள்ளை ஓவர்டைம் வேலை செய்தாலும் செய்யலாம்.) அவரது பெற்றோர் இல்லாவிடில் இத் திருமணத்துக்கு இங்கு பொறுப்பாக உள்ளவரை அவர் நிலை பற்றி கேட்கலாம் (உங்கள் பெற்றோர் ஊடாக.) வெளிநாட்டு நிலைகளை பற்றி இங்கு உறுதியாக எதுவுமே சொல்ல முடியாது.

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**



வளர்மதி முன்பள்ளி
கசிந்தன் கண்சிகா
மட்டுவில்-11.11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒரு முறை பாருங்கள்

# நிசப்தம்

மிகச் சரியான நேரத்தில் சரியான கருத்தோடு ஒரு படம் வந்திருக்கிறது. இன்றைய சமூகத்தில், பெண்குழந்தைகள் வயது வேறுபாடின்றி அனுபவிக்கும் துயரத்தின் வலியை ஆறாத வடுவை அங்குலம் அங்குலமாய் வெட்ட வெளிச்சமாய் எடுத்தியம்பியிருக்கின்றது நிசப்தம்.

அந்த ஒரு காரணத்துக்காகவே நிசப்தம் படத்தின் குறைகளை எல்லாம் மறந்துவிட்டு, பாராட்டுக்களைக் கூறிவிடலாம்.

அஜய் அபிநயா தம்பதிகளுக்கு எட்டு வயதில் ஒரே மகள் சாதன்யா. அஜய்க்கு தனியார் நிறுவனத்தில் வேலை. அபிநயா சொந்தமாக ஒரு கடை நடத்துகிறார். எந்நேரமும் இருவரும் அவரவர் வேலைகளில் பிஸி. மகளைக் கவனிக்கத் தவறுகிறார்கள். ஒரு மழை நாள்.

சாதன்யா குடையுடன் பள்ளிக்குச் சென்று கொண்டிருக்கும்போது, ஒரு இளைஞன் குடைக்குள் இடம் கேட்கிறான். சாதன்யாவும் உதவுவதாகக் கூறி, குடைக்குள் அவனையும் அழைத்துக் கொள்கிறாள். ஆனால் அந்த காம வெறியன், ஒரு மறைவிடத்தில் வைத்து சிறுமி சாதன்யாவை பலாத்காரம் செய்துவிடுகிறான்.

பொலீசுக்கு விஷயம் தெரிய, அவர்கள் சிறுமியை மீட்டு வந்து மருத்துவமனையில் சேர்க்கிறார்கள். அதன் பிறகு அந்த சிறுமிக்கு ஏற்பட்டது என்ன? பெற்றோரின் நிலை... கோர்ட், வழக்கு, மீடியாக்களிடம் அந்த சிறுமி படும் பாடு... குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டார்களா.... என்பதையெல்லாம் மிகவும் உணர்வுப்பூர்வமாகச் சொல்லியிருக்கிறார் மைக்கேல் அருண்.

ஒரு குற்றத்தைப் படமாக்குவது மட்டும் முக்கியமல்ல... அந்தக் குற்றத்துக்குக் காரணம்...குற்றம் நடந்த பிறகு பாதிக்கப்பட்டவர்கள் மீதான உலகின் பார்வை, அணுகுமுறை... இவற்றை இத்தனை தெளிவாக சற்று நிதானம்தான் என்றாலும் சிறப்பாக சொல்லியிருக்கின்றார் மைக்கேல் அருண். இந்தப் படத்தின் நாயகி, மையம் எல்லாமே குழந்தை சாதன்யாதான். இத்தனை சின்ன வயதில் எத்தனை நுட்பமான உணர்வுகளை வெளியிடுகிறாள் அந்தக் குழந்தை. அஜய் அபிநயா இருவருமே சிறப்பாக நடித்துள்ளனர்.

பல காட்சிகள் நிஜத்தின் பிரதிபலிப்புகள்... சில மனதைப் பிசைகின்றன. எட்டு வயது சிறுமியின் உலகம் எத்தனை வண்ணமயமானதாக, சுமைகளற்றதாக இருக்க வேண்டும்... ஆனால் இந்தக் குழந்தை எட்டு வயதில் பாலியல் வல்லுறவுக்கு ஆளாகி, கொடிய சிகிச்சைகளைப் பெற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய துயரம்? தனக்கு நேர்ந்த கொடுமையை தன் தந்தையிடம் அந்தக் குழந்தை எப்படிக் கூறுவாள்? அந்த மகளின் முகத்தை தந்தையால் எப்படி எதிர்கொள்ள முடியும்? இந்தக் கேள்விகளைப் படிக்கும்போதே பதறுகிறதே... காட்சிகளாகப் பார்க்கும் போது? மனதை ரணமாக்கிய காட்சிகள் இவை! தன்னை ஒரு கொடியவன் பாழாக்கி விட்டான்.

உடனே அதை அந்தக் குழந்தை யாருக்குச் சொல்லும்? தாய் தந்தைக்கு. ம்ஹூம்... இந்தக் குழந்தை நேராக பொலிஸிற்கு போன் அடிக்கிறது. காரணம்? ''நீங்கதான் எப்பவும் பிஸியா இருப்பீங்களேம்மா?''

பெற்றோரின் அலட்சியம் எத்தனை பெரிய துயரத்தில் பிள்ளைகளைத் தள்ளிவிடுகிறது பார்த்தீர்களா? குழந்தைக்கு இந்தக் கொடுமை நேர ஒரு முக்கிய காரணம், அந்த இளைஞனின் குடிவெறி.

மதுக்கடைகளை முற்றாக ஒழிக்க இந்த ஒரே காரணம் போதாதா? ஒளிப்பதிவு அருமை. காம வெறியும், குடிவெறியும் நிறைந்த இன்றைய சமூகத்துக்கு இதுபோன்ற படைப்புகள்தான் அவசியத் தேவை. வாழ்த்துகள் மைக்கேல் அருண்!

கோபிகை

## பென்சில் ஓவியம்

வாசகர்களே!
இவ் ஓவியத்தினைப் பார்க்கும் போது உங்கள் எண்ணத்தில் தோன்றும் கருத்துக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். சிறந்த கருத்துக்களுக்கு பணப்பரிசில்கள் வழங்கப்படும்.

நீங்களும் இவ்வாறான ஓவியங்களை வரைந்து அனுப்பினால் பிரசுரிப்போம்.



அளவெட்டி கோபி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கனவுகள் மெய்ப்பட


ஆரம்பக்கல்வி தாய்மொழி மூலமே கொடுக்கப்படல் வேண்டும். இதைப் புரிந்துகொள்ளாது செயற்படுவதனால் எமது பிள்ளைகள் எங்களைவிட்டு விலகிப்போகின்றார்கள். எமது பண்பாட்டு விழுமியங்களை அறிந்து நடைமுறைப்படுத்தும் வாய்ப்புக்கள் அவர்களுக்கு அருகிப்போகின்றன.

மனத்தில் பாரமாக இறங்குகின்றன. பெற்றோர்கள் கஷ்டப்பட்டு தம் பிள்ளைகளை வளர்க்க முற்பட்டும் இவ்வாறுவிரும்பத்தகாத விளைவுகள் வருவது எங்ஙனம்?

சிறுவர்களின் குண இயல்புகள் பெற்றோரின் பங்களிப்பிலும் பிள்ளைகளுடன் அவர்கள் செலவழிக்கும் நேரத்திலும் தங்கியுள்ளது என்பதற்கு மாற்றுக் கருத்து கிடையாது. அத்துடன் பிள்ளைகளுக்கு கொடுக்கப்

# ஆரம்பக்கல்வி தாய் மொழி மூலமே கொடுக்கப்படல் வேண்டும்

மருத்துவர் போ.ஜேசிதரன்



வேறோர் கலாசாரத்தைப் பின்பற்றும் சூழல் அவர்களிடம் திணிக்கப்படுகின்றது. பிள்ளைகளுக்கும் பெற்றோருக்குமான இடைவெளி அதிகரித்துச் செல்கிறது. தாம் விரும்பியபடி நடத்தல், பொறுப்பற்ற போக்கு பெற்றோரின் விருப்பத்துக்கு மதிப்பளியாமை, புரிந்துணர்வு இன்மை, இறுதியில் பெற்றோர் ஆரம்பம் முதல்பட்ட கஷ்டங்களுக்குத்தீர்வு கிடைக்காது அவை கவலைகளாகவே அவர்கள்

படும் ஊக்கமும் வீட்டுச் சூழலும் மிகவும் முக்கியமானவை. வீட்டுச் சூழல் சுதந்திர உணர்வையும் சந்தோசத்தையும் வழங்குதல் வேண்டும். பிள்ளைகளுக்கு முக்கியமாக கொடுக்கவேண்டியது மன அமைதியும் சந்தோசமும் ஆகும். நாம் இவற்றை பிள்ளைகளுக்கு கொடுப்பதற்கு நாம் அவர்களுடன் நேரத்தைச் செலவிடத் தயாராக இருத்தல் வேண்டும். இன்றைய நிலையில் எம் இளம் பெற்றோர்கள் பிள்ளைகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவிடும் நேரத்தை விட அவர்களை மாலை நேர மேலதிக வகுப்பில் சேர்த்து விட்டு, வெறுமனே தெருவில் காத்திருக்கும் நேரமே அதிகமாகும்.

பிள்ளைகளுடன் தம் நேரத்தை பெற்றோர் செலவழித்தல் எனும்போது எவ்வாறு இதனை ஆக்கபூர்வமாகச் செலவழிக்கலாம் எனப் பார்ப்போம். பெற்றோர்கள் வேலைத்தளத்திலிருந்து வீட்டுக்கு வரும்போது மனதை மென்மையாக வைத்துக் கொள்ளல் வேண்டும். வீட்டுக்கு வந்தவுடன் தம் நேரத்தை தொலைக் காட்சியுடனோ கணினியுடனோ கழிக்காது பிள்ளைகளுடன் அன்பாக உறவாடுவதில் சந்தோசத்துடன் கழித்தல் வேண்டும். வந்தவுடனேயே படியுங்கள் படியுங்கள் என்று அவர்களை நச்சரிக்காது அவர்கள் மனம் திறந்து பேசுவதற்கு சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். அவர்கள் சந்தோசமாக அன்றைய நிகழ்வுகளை விவரித்த பின்பு மகிழ்வுடன் அவர்களைப் படிக்க அழைத்துச் செல்லலாம்.



பிள்ளைகள் விடும் தவறுகளை பதறப்படாமல் பக்குவமாக சுட்டிக்காட்டுதல் வேண்டும். பிள்ளைகளின் மனதை வென்றபின்புதான் சுட்டிக்காட்டுதல் சிறப்பாகும். அதற்காக நாம் அவர்களுடன்நிச்சயமாக எம் நேரத்தை செலவழித்தல் வேண்டும். மகிழ்வான இடத்துக்கு அழைத்துச் சென்று அவர்களை மகிழ்வூட்டி சிரிக்கச் செய்து அவர்களுடன் பொறுமையாக உரையாடுதல் வேண்டும். அது அவர்களுக்கு மட்டும் கேட்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். இதுவேசிறந்த முறை அம்மா ஏசியதால் பிள்ளைக்கு கோபம் வந்ததா? அம்மா உங்களை கண்டிப்பது அன்பால்தானே. நீங்கள் இனிமேல் அப்படிச் செய்யக்கூடாது. அது நல்ல பிள்ளைக்கு எங்கட கெட்டிக்காரப் பிள்ளைக்கு அழகல்ல என்ற வாறாக பூமனத்துக்குள் எழுந்த பூகம்பங்களை வருடி ஆற்றுப்படுத்துவதே சிறப்பு புத்திமதி சொல்லும்போது தனிப்பட்ட முறையில் உரிய சந்தர்ப்பத்தில் அவர்கள் உள்ளத்தைத் தொடும்படி பாசத்துடன் கூறுதல் வேண்டும். சிறுவர்களுடன் தம் நேரத்தைக் கழிப்பது பெற்றோருக்கும் சந்தோசமே. அத்துடன் பிள்ளைகளின் நுணுக்கமான வளர்ச்சியையும் திறமைகளையும் அவதானித்துக் கொள்ளவும் உதவுகின்றது. இது அவர்கள் மீது மேலும் பாசம் கொள்ளத்தூண்டுகின்றது. பிள்ளைகளுக்குப்பெற்றோரின் அன்பும் ஆதரவும் கிடைக்கும்போது நல்ல முறையில்தாம் வளர்வதை அவர்கள் உணர்கின்றார்கள். உடலாலும் சரி உள்ளத்தாலும் சரி இது அவர்களின் மகிழ்ச்சியையும் சக்தியையும் அதிகரிக்கும். மாறாக பெற்றோர் பிள்ளைகளுக்குத்தனியாக நேரத்தை ஒதுக்கவில்லை. அவர்களிட மிருந்து அன்பு பாசம் கிடைக்கவில்லை எனில் குழந்தைகளின் உளவளர்ச்சி பாதிப்புறுகிறது. பெற்றோர் மீது மதிப்பு இல்லாது போகிறது. அதன் காரணமாக கீழ்ப்படிய மறுக்கிறார்கள் பெற்றோருக்குக்கட்டுப்பட மறுக்கிறார்கள். அடம் பிடிப்பார்கள் பெற்றோரை விட்டு விலகிச் செல்வார்கள். அவர்களும் பெற்றோரிடம் அன்பு காட்டமாட்டார்கள். சொல்வதை ஏற்றுக்கொள்ளாதவர்களாகவும் மரியாதை கொடுக்காதவர்களாகவும் மாறுகின்றார்கள் பெற்றோர் மீதான வெறுப்பை தம் அழகிய முகத்தை விகாரமாக்கி முறைத்தும் காண்பிப்பார்கள்.

பிள்ளைகள் உடலால் மட்டுமன்றி மனதாலும் வளர்க்கின்றனர் எனும் உண்மையை நாம் உணர்தல் வேண்டும். பிள்ளைகளின் விருப்பு வெறுப்புக்கள் காலத்துக்குக் காலம் மாறுபடும். சில சமயம் பெற்றோருக்கு விருப்பமில்லா செயல்களை பிள்ளைகள் செய்திருந்தால், பெற்றோர் அது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயமாக கலவரமடை யாது அவர்களுடன் அதுபற்றி கதைத்து அவர்களுக்கு தெளி வுபடுத்துதல் வேண்டும் கூடாத செயல்களாக இருப்பின் அவை ஏன் கூடாதவை என்பதை அவர்கள் புரியும் வண்ணம் பாசத்துடன் எடுத்துக் கூறுதல் வேண்டும். எடுத்த எடுப்பிலேயே தண் டிக்கக்கூடாது தண்டிப்பதற்கு முன்பாக பாசத்துடன் கண்டியுங்கள். பிள்ளைகளி டம் குற்றம் கண்டுபிடித்து குற்றம் சொல் வதற்கு பதிலாக அவர்களிடமுள்ள நல்ல இயல்புகளைக் குறிப்பிட்டு கெட்ட இயல் புகளில் உங்களுக்கு விருப்பமில்லை என் பதை அவர்களுக்குத் தெரிவியுங்கள். அந்த இயல்புகள் திருத்தப்பட வேண்டியதன்



அவசியத்தை அவர்களுக்கு அன்புடன் கூறு தல் வேண்டும். இது அவர்களின் பிடிவாதக் குணங்களை இல்லாதுபோக்கும்.

சிறுவர்களுக்கிடையிலான நட்பை அவர் களின் வயதில் வைத்தே பார்த்தல் வேண் டும். பெற்றோர்களின் வயதுக்கேற்ப வைத் துப் பார்ப்பதையோ, கதைப்பதையோ தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

பிள்ளைகள் மீது அக்கறையாக இருப் பது என்பது அவர்களைக் கட்டுப்படுத்து வதோ அல்லது அவர்களின் செயற்பாட்டை இரகசியமாக மறைந்திருந்து கண்காணிப்ப தல்ல. அவர்களுடன்சேர்ந்து அவர்களைப் புரிந்துகொள்வதற்காக செலவழிக்கும் நேரமே பிள்ளைகளுடன் செலவழிக்கும் நேரமாகும். அவர்களின் விருப்பு வெறுப் புணர்ந்து அவர்களின் சந்தோசமே எம் சந்தோசம் என நினைத்தல் வேண்டும்.

எப்போதும் பெற்றோரின் உதவியும் பாதுகாப்பும் தமக்குண்டு என அவர்கள் உணரத்தக்க முறையில் எம் செயற்பாடுகள் அர்ப்பணிப்புடன் அமைதல் வேண்டும். இது அவர்களின் உடல் உள ஆரோக்கிய வளர்ச்சிக்கு உதவுகிறது.

பிள்ளைகளுடன் பிள்ளைகளுக்காக நேரத்தைச் செல வழிப்பது என்பது நாங்கள் அவர்களுக்கு செய்யும் ஒருமறை முகமான முதலீடாகும்.

சிறுவர்களின் மழலைப் பேச்சுக்களை அக்கறையுடன் கேட்டல்,முறுவலித்து சிரித்தல், அவர்களின்கேள்விகளுக்கு சலிக் காது பதிலளித்தல், அவர்கள் செய்யும் சின்னச்சின்ன செயல்க ளைப் பாராட்டி சந்தோ சப்படல், நித்திரைக்குச் செல்லமுன் கதைகள் கூறி அந்தக்கதைகள் சொல் லும் ஒழுக்கநெறிமுறைக ளைமனத்தில் பதியுமாறு சொல்லுதல், பிள்ளைக ளின் கற்பனைத்திறனை ஊக்குவித்தல், அரவ ணைப்புடன் கூடிய அன்பு செலுத்துதல், அவர்கள் தனித்திருப்பதைத் தவிர்த் தல், நல்ல சிந்தனைகளை உருவாக்குதல், அவர்க ளின் தேவை உணர்ந்து நடத்தல் போன்றவை சிறுவர்கள் வளர்ந்த பின் பும் அவர்களின் மனத்தில் சித்திரமாகப் பதிந் திருக்கும். அவற்றை நினைக்கும் போதெல் லாம் அவர்களுக்கு இனிமை தரும். வளர்ந்த பின்பு அவர்கள் தடம் மாறிச் செல்வதைத் தடுக்கும். கண்ணுக்குத் தெரியாத அன்புப் பூட்டுக்களே அவையாகும்.

நாங்கள் சிறுவயதில் காய்ச்சலில் அவஸ் தைப்பட்டபோது, தாயார் எம்முடன் உடனி ருந்து கவனித்தலும் மருந்து தந்து வலிநீக்கி உள்ளத்தை இதமாக்கி சம்பாசித்தலும் இன் றும் மனதினடியில் பக்குவமாய் இருக்கிற தல்லவா? அன்று தொண்டையினுள் கசந்த கசாயத்தை இன்று நினைக்கையில் நினை வுகள் இனிக்கிறது அல்லவா? இந்த இனிமை எங்கள் சந்ததிக்கு கடத்தப்பட வேண்டாமா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வீ.என்.சந்திரகாந்தி
திருமலை





# தேடிச்செல்லுதலும் காத்திருத்தலும்

சந்தர்ப்பத்தை இரண்டு வழிகளில் எதிர் கொள்ளலாம். ஒன்று நாமாகவே சந்தர்ப் பத்தை தேடிச்செல்லுதல் மற்றையது சந்தர்ப் பத்தை எதிர்பார்த்து காத்திருப்பது. சந்தர்ப்பத்தை எவர் ஒருவர் தேடிச்செல்கின்றாரோ அவரே வாழ்க் கையில் வெற்றிவாகை சூடியவராகிறார். அவர் வாழ்க்கையில் அதிகளவான வெற்றிகளுக்கு சொந் தக்காரருமாகின்றார். அதை விடுத்து எவர் ஒருவர் சந்தர்;ப்பத்தை எதிர்பார்த்து காத்திருக்கின்றாரோ அவர் இலகுவில் வெற்றியை சம்பாதிப்பதில்லை. தோல்விகளை தவிர்ப்பவரும் அல்லர். நம்மில் பலர் சந்தர்ப்பத்திற்காக காத்திருந்து காத்திருந்து தான் வாழ்நாளை வீணாக்கி விடுகின்றோம்.

ஒரு உதாரணம் மூலம் இதனை தெளிவாக புரிந்து கொள்ளலாம். இந்நாட்களில் மிகவும் பிரசி த்தமான துடுப்பாட்டத்தை எடுத்துக்கொள்வோம். சில துடுப்பாட்ட் வீரர்கள் பந்து வருவதை எதிர் பார்த்து ஸ்ரம்முடன் துடுப்பை ஒட்ட வைத்துக் கொண்டு இருப்பர். துடுப்பில் பந்து பட்ட பின் னர்தான் மெதுவாக அங்கே இங்கே என்று தட்டி தமது இருப்பை தக்க வைத்துக்கொள்வர். மற்ற வகையினர் துடுப்பை பலமாக பற்றியபடி பந்து வரும் வேகம் திசை என்பவற்றை நேர்த்தியாக கணித்து முன்னே பாய்ந்து சென்று தீரத்துடன் விளையாடுவர். பந்து சிக்ஸர், பவுன்டரி என்று ஒட்டங்களாக குவியும். நாம் வாழ்கையை எதிர்கொள்ள வேண்டிய முறை அதுதான்.

சந்தர்ப்பம் என்பது எம்மை எமது வாழ்க் கையை மேம்படுத்துவதற்கான தருணம் அல்லது வாய்ப்பு ஆகும். உண்மையில் சந்தர்ப்பங்கள் எனப் படுவது ஏணிப்படிகளாகும். நாம் ஏறும் படிகளின் எண்ணிக்கையை பொறுத்து நாம் மேலே மேலே போய்க்கொண்டிருப்போம். இந்த உண்மையை நீங்கள் தெரிந்து கொள்ளும் போது எவ்வளவு சிறுவர்களாக, இளையவர்களாக இருக்கின்றீர் களோ அவ்வளவுக்கு நீங்கள் சிகரமளவிற்கு வளரவும் மகிழ்ச்சியுடன் வாழவும் முடியும். இருந்தாலும் பலர் தமது பிற்காலத்திலும் கூட தகுந்த சந்தர்ப்பங்களை பயன்படுத்திக்கொண்டு உச்சத்தை தொட்டிருக்கின்றார்கள். இறைவன் மனிதனை சோம்பேறியாக இருக்கும் படி படைக் கவில்லை. மனிதன் சுயசிந்தனையுடனும் சுய ஆற் றலுடனும் விருப்பமான வகையில் திட்டமிட்டு வாழும் வகையிலேயே இறைவன் மனிதனை படைத்துள்ளான். இன்னுமேன் காலதாமதம்? சந்தர்ப்பங்களை தேடி வேகமாக எமது வாழ்க் கைப்பயணத்தை ஆரம்பிக்க வேண்டியது தானே.

இருந்தும் நாம் சில விடயங்களை மனதில் கொள்ள வேண்டும். நாம் வாழும் சூழல் பல விளைவுகளை எம் மீது திணித்துக்கொண்டிருக் கின்றது. எம்முடன் தொடர்புபட்ட மக்கள் தமது விருப்பு வெறுப்புக்களை எம் மீது திணிக்க எப்போதும் தயாராக இருக்கின்றார்கள். அரசு பல சட்டதிட்டங்களை எமக்கு சுமையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாத்து வைத்திருக்கின்றது. இவை தவிர கலாச்சாரம், மதம், மரபு என்று பல தடைகள் இருக்கின்றன. இவையாவற்றையும் உடைத்தெறிந்து சென்றால் மட்டுமே சந்தர்ப்பங்களை பயன்படுத்திக்கொள்ள முடியும்.

குடிவரவு குடியகல்வு சட்டத்திற்கு போக்கு காட்ட முடிந்தால் தான் வெளிநாடு சென்று உழைக்க விரும்பும் ஒருவனுக்கு அது சாத்தியமாகின்றது. பல முகவர்கள் கனடா, சுவிஸ், இங்கிலாந்து, பிரான்ஸ், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளின் குடிவரவு குடியகல்வு சட்டங்களை கூட நன்கு தெரிந்து வைத்திருக்கின்றார்கள். காலத்துக்கு காலம் அந் நாடுகள் தமது சட்டங்களில் செய்யும் திருத்தங்களையும் அவதானித்துக்கொண்டிருக்கின்றார்கள். அவ்வவ் நாடுகளில் சட்டங்களில் இருக்கக்கூடிய அல்லது சட்ட திருத்தங்களில் உண்டாக்கக்கூடிய சிறு சிறு தவறுகளைக் கூட தமக்கான சந்தர்ப்பமாக பயன்படுத்திக்கொண்டு ஆயிரக்கணக்கானோரை பிறநாடுகளில் இறக்கி விடுகின்றார்கள்.

அத்துடன் அவர்கள் ஓய்ந்துவிடுவதில்லை. ஒவ்வொரு நாடும் எடுக்கும் எதிர்நடவடிக்கைகளுக்கும் முகம் கொடுக்கும் முறைகளை துல்லியமாக அறிந்துவைத்திருக்கின்றார்கள். அகதி அந்தஸ்து கோரி வழக்காடி வெல்கின்றார்கள். அதன் பின்னர் வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுக்கும் முயற்சியில் கால் பதிக்கின்றார்கள்.




எமது நாட்டிலிருந்து அரசியல் நெருக்கடி, பொருளாதார நெருக்கடி என்றுதான் பலரும் புலம் பெயர்கின்றார்கள். அவர்களில் கற்றவர்களும் கல்லாதவர்களும் இருக்கின்றார்கள். அவர்கள் ஒவ்வொருவருமே சந்தர்ப்பத்தை பயன்படுத்துவதில் வல்லவர்களாக இருக்கின்றார்கள். எமது நாட்டில் பொறியியலாளராக பட்டப்படிப்பை முடித்த நான் அறிந்த ஒரு இளைஞர் தான் ஒரு நிறுவனத்தில் கணக்கு எழுதுவதாக கூறுகிறார். உண்மை அப்படி இல்லாமலும் இருக்கலாம். அதற்கு குறைந்த தொழிலை புரிவதற்கும் தயாரான நிலையில்தான் எம்மவர் பலர் வெளிநாடு செல்கின்றார்கள்.

இனி சந்தர்ப்பம் என்பது வெளிநாடு செல்வதில் மட்டும்தான் தங்கியிருக்கின்றதென்றுமில்லை. வாழ்க்கை பூராகவும் சந்தர்ப்பங்கள் விரவிக்கிடக்கின்றன. ஒரு வேளை நாம்தான் அவற்றை அறியாமல் அல்லது அவற்றைத் தேடிச் செல்லாமல் இருக்கின்றோம் போலும்!

எனது நண்பர் ஒருவர் சிங்கள கிராமம் ஒன்றின் அருகே எல்லையை ஒட்டியதாக வாழ்ந்து வந்தார். அது ஒரு கடற்கரை பிரதேசம். சிங்கள கிராமத்தை சேர்ந்த சிறுவர்கள் மாலையில் கடலுக்கு மீன் பிடிக்க செல்லும் வள்ளங்களில் தொற்றிக்கொள்வார்கள். அதிகாலை மூன்று மணிக்கெல்லாம் திரும்பிவிடுவார்கள். அதன் பின் துயில்கொண்டு நேரத்துடன் எழுந்து பாடசாலை சென்றுவிடுவார்கள். பாடசாலையால் திரும்பி மதிய உணவு எடுத்தபின் நண்பர்கள் கூடி விளையாடுவார்கள். கிராமத்தில் எங்கெங்கு செவ்விளநீர், மாங்காய், வாழைக்குலை, கொய்யா, ஜம்பு ஆகியவை இருக்கின்றன என்பதெல்லாம் அவர்களுக்கு அத்துப்படி. எனது நண்பர் ஒரு பொழுது இல்லாவிட்டால் போதும் அனைத்தும் சூறையாடப்பட்டு விடும். களவு என்பதற்கப்பால் அவர்கள் பசி காரணமாகவும் அப்படி நடந்துகொண்டார்கள். பாருங்கள் சிறு வயது முதலே அவர்கள் எப்படி சந்தர்ப்பத்தை தேடி ஓடிக்கொண்டிருக்கின்றார்கள் என்று. படிப்பிலும் அவர்களிடம் திறமை இருந்தது. அக் கிராமத்தை சேர்ந்த பல இளைஞர்கள் இலகுவாக கம்பஸ் அனுமதி பெற்று சென்றுள்ளார்கள்! சிலர் மருத்துவர்களாகவும் வெளியேறியுள்ளார்கள்.

இந் நாட்களில் அதிக வாய்ப்புக்களை தரும் துறைகளாக சுற்றுலாத்துறை இருக்கின்றது. முடிந்தால் சில சொகுசு வாகனங்களில் முதலீடு செய்தால் போதுமானது. வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் உள்ளூரை சுற்றிப்பார்ப்பதற்கு உந்துருளிகளையும் வாடகைக்கு பெற விரும்புகிறார்கள். கிழக்கு மாகாணத்தில் நிலாவெளி பிரசித்தமான ஒரு சுற்றுலாத்தளம். நிலாவெளி வீதியில் ஒரே வகையான பத்துக்கும்மேற்பட்ட உந்துருளிகளை சுற்றுலா பயணிகள் ஒன்றின் பின் ஒன்றாக ஓட்டிச் செல்வதை பார்ப்பதற்கு சுவாரசியமாக இருக்கும். அவையெல்லாம் பணம் சம்பாதிக்கும் துறைகள் தான்!

இனி சுற்றுலா விடுதிகளில் கபான என்ற சிறிய குடில்களை உல்லாசப்பயணிகள் விரும்புகின்றார்கள். கட்டணமும் குறைவு. வெய்யிலிலிருந்து பாதுகாப்பு . இருவரோ மூவரோ கடலை பார்த்தபடி மது அருந்தியும் விரும்பிய விரும்பிய படி உணவுகளை ஓடர்செய்து பெற்றுக்கொண்டு உல்லாசமாக பொழுதை போக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுபவம் பேசுகின்றது




சந்தர்ப்பத்தை தேடுவோர் நேரே சுற்றுலா விடுதிகளுக்கு சென்று ஏதாவது ஒரு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டியதுதான். பிரதான சமையல்காரன் (chief cook) ஒருவர் ஒரு இலட்சம் ரூபா வரை மாத சம்பளமாக பெறுகின்றார் என்றால் பாருங்கள்.

இனி நாங்கள் தான் காசை வெளியே விட்டெறிந்து பணம் சம்பாதிக்க தயங்குகின்றோம். வெளிநாடுகளில் எல்லாம் தனியார் சிலர் சேர்ந்து பெரிய நிறுவனங்களை ஆரம்பித்து விடுகின்றார்கள். இந்நாட்களில் ஒரு நிறுவனத்தின் அவசியம் என்ன.? தேவையான முதலீடு எவ்வளவு? அவசியமான தொழில் நுட்பங்கள் எவை எவை என்ற விபரங்களை கூகிள் மூலம் இலகுவாக பெற முடியும். சரியான ஆளணியையயும் அமைத்துக்கொண்டால் போதுமானது. கோடிக்கணக்கில் பணம் திரட்ட முடியும்.

சந்தர்ப்பத்தை தேடிச்செல்லுதல் அவசியம் என்பதை உணரவேண்டியது ஒரு பக்கம் இருக்க, சந்தர்ப்பங்களை அடைந்துகொள்வதில் இன்றைய இளம் சமூகம் இழைக்கும் தவறுகளை அவர்களுக்கு உணர்த்த வேண்டிய அவசியம் மறுபக்கம் உள்ளது.

இன்றைய இளைஞர்கள் தவறான சந்தர்ப்பங்களின்பால் ஈர்க்கப்படுவது பெரும் கவலை அளிப்பதாக உள்ளது. மது பாவனை அதிகரித்துள்ளது. போதை வஸ்து அவர்களுக்கு இலகுவில் கிடைக்கின்றது. அதன் நிமித்தம் பாலியல் வன்முறைகளில் ஈடுபடுவதும் சிறைசெல்வதும் சாதாரணமாகிவிட்டது.

யுவதிகள் கூட தவறான பாதையில் செல்கின்றார்கள். அண்மையில் முகநூலில் ஒரு வீடியோ கிளிப் வைரலாக பரவியது. ஆறு இளம் பெண்கள் வட்டமாக நின்றபடி சிகரட் புகையை வட்டம் வட்டமாக ஊதி தள்ளுகின்றார்கள்.


ஒரு சிங்கள தேசிய பாடசாலையில் நூற்றி நாற்பதுக்கு மேற்பட்ட உயர்தர வகுப்பு மாணவிகள் போதை வஸ்துவை பாவித்த நிலையில் தமது கைகளை தாமே வெட்டிக்காயப்படுத்திக்கொண்ட சம்பவம் பெரும் அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியுள்ளது.

யாழில் நீதாய விளக்க நீதிமன்று ஒன்று நடந்தது. குற்றம் சுமத்தப்பட்டவர்கள் அனைவரும் எப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தை தேடிச் சென்று சிக்கலில் மாட்டிக்கொண்டார்கள் என்று பாருங்கள்!

இனி வாள், கோடரி, கிறிஸ்கத்தி போன்ற கூரிய ஆயுதங்களுடன் யாழில் வாலிபர்கள் அலைந்து திரிகின்றார்கள். இவர்கள் எல்லாம் எப்படிப்பட்ட சந்தர்ப்பத்தை தேடிக்கொண்டிருக்கின்றார்கள் என்பது நீங்கள் அறியாததல்ல!

இந்த கட்டுரையை நான் வரைந்து கொண்டிருக்கும் பொழுது மண்டைதீவுக்கு அப்பால் படகு கவிழ்ந்து ஆறு மாணவர்கள் இறந்து விட்டதாக செய்தி வெளியாகி கொண்டிருக்கின்றது

எமது விழுமியங்கள் பாரம்பரியம், கலாச்சாரம், கல்வி, இவற்றையெல்லாம் இளைய




சமுதாயத்துக்கு உரிய முறையில் புகட்டியிருந்தால் இப்படியெல்லாம் நேருமா? இதற்கெல்லாம் பொறுப்பு வகிக்க வேண்டியவர்கள் மாதா, பிதா, குரு, தெய்வம் அன்றி வேறொருவரும் இல்லை.

இளைஞர்களே! யுவதிகளே! கர்ப்பத்தில் உங்களை பத்துமாதம் சுமந்த மாதாவை அவளது சொல்லை மதித்து போற்ற கற்றுக்கொள்ளுங்கள். வியர்வை சிந்தி உழைத்து உணவு போட்டு தோளில் சுமந்து உங்களை ஆளாக்கிய பிதாவை நேசித்து பணிந்து கொள்ளுங்கள்.

இன்று பாடசாலைகள்தான் குருவின் பணியை நிறைவேற்றுகின்றன. உறவினர்களின் கலியாண வீடு, சாமத்திய வீடு, பிறந்தநாள் விழா, மரண வீடு என்று சாட்டுக்கள் கூறி ஒரு நாளாயினும் பாடசாலைக்கு செல்லாமல் லீவு போடாதீர்கள். நீங்கள் கெட்டு அழிந்தால் உங்கள் உறவினர் எவரும் உங்களை காப்பாற்ற முன்வரமாட்டார்கள். உங்கள் எதிர்காலத்துக்கான சிறந்த சந்தர்ப்பம் பாடசாலை தான்! அதை தவறவிடாதீர்கள்.

படைத்தல், காத்தல், அழித்தல், அருளல் யாவற்றுக்கும் காரண கர்த்தாவாக ஒரு சக்தி இருப்பது அவசியமல்லவா? அதுவே தெய்வம்! சயம குரவர்களும், நாயன்மார்களும் கண்டறிந்து பயன்படுத்திய சந்தர்ப்பத்தை நாம் தவறவிடலாமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்ஸ்பேட் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவபீட மாணவி பாரதி. விடுமுறைக்காக தாய்வழிப் பேத்தியாரின் வீட்டிற்கு வந்திருந்தாள். சில்லெனப் பொழிந்த மெல்லிய தூறலில் குடை பிடித்தபடி பாட்டி பார்வதியுடன் நடந்து கொண்டிருந்தாள். ஆங்காங்கே பச்சை இலையில் சிவப்பும் மஞ்சளுமாய் கொடியோடிக் கிடந்தன அழகான பூக்கள்.

# கார்த்திகைப்பூக்கள்

பாரதி : அழகழகா சிவப்பும் மஞ்சளுமா பூத்திருக்குதே, அது என்ன பூ பாட்டி?

பாட்டி : அதுவா, அது கார்த்திகைப்பூ.

பாரதி : கார்த்திகைப்பூவா? என்ன இது, ஒரு மாதத்தின் பெயரை பூவுக்கு வைச்சிருக்கு.

பாட்டி : கார்த்திகை மாதத்தில பூக்கிறதால கார்த்திகைப்பூ எண்டு வைச்சிருக்கினம் எங்கட மூத்தவர்கள்.

பாரதி : சிவப்பும் மஞ்சளும் இணையான நிறங்களா இருக்கு, என்ன பாட்டி?

பாட்டி : சிவப்பும் மஞ்சளும் வெறும் நிறங்கள் மட்டுமில்லை. அது ஒரு இனத்தின் அடையாளம்.

பாரதி : வறுமையின் நிறம் சிவப்பு எண்டு யாரோ சொல்லி கேள்விப்பட்டிருக்கிறன்.

பாட்டி : வீரத்தின் நிறமும் சிவப்பு தான்.

பாரதி : என்ன பாட்டி சொல்லுறியள், எனக்கு எதுவுமே விளங்கயில்ல.

பாட்டி : நீங்கள் வெளிநாட்டில பிறந்து வளந்தனீங்கள், உங்களுக்கு ஒண்டும் விளங்காது.

பாரதி : நாங்கள் வெளிநாட்டில பிறந்து வளர்ந்தாலும் எங்கட மொழி, பண்பாடு, கலாசாரம் எல்லாத்திலையும் இறுக்கமான பிணைப்போட இருக்கவேணுமெண்டு அம்மாவும் அப்பாவும் சொல்லிச்சொல்லி வளர்த்திருக்கினம். நான் எப்பிடி தமிழ் கதைக்கிறன் எண்டு பாத்தியள் தானே, இப்ப சொல்லுங்கோ, கார்த்திகைப் பூவுக்கு என்ன விசேடம்?

பாட்டி : இது கார்த்திகையில மட்டும் பூக்கிறது ஏனெண்டால் வல்லவர்களின் தியாகங்களை அர்ச்சிப்பதற்காக. இந்தப் பூக்கள் வெறும் பூக்கள் மட்டுமில்லை, விடிவெள்ளிகளின் நினைவுச் சின்னம். வானப்பூக்களாய் மின்னுகின்றவர்களை எம்முன்னே ஒளிர்விக்கும் நிதர்சனம். காலக்காத்திருப்புகளில் கதை சொல்லும் ஓர் உன்னத அடையாளம்.

பாரதி : பாட்டி, மஞ்சளும் சிவப்பும் மறவர்களின் நிறமா?

பாட்டி : ஓமோம், நீ கெட்டிக்காரி, உன்ர அம்மா மாதிரியே.

பாரதி : நான் ஒரு பூவை பிடுங்கவா பாட்டி?

பாட்டி : பிடுங்கு, ஆனா கசக்கி போடாத, ஏனெண்டா உன்ர மாமாவும் இதில ஒரு பூவாத்தான் பூத்திருப்பான்.

பாரதி : இல்ல பாட்டி, நான் பிடுங்கயில்ல, இந்த பூக்கள் பிடுங்குவதற்கானதல்ல, பூஜிப்பதற்கானது.

பாட்டி : சரி வா, கையெடுத்து கும்பிட்டிட்டு கடந்து போவம்.

அமைதியாய் நடந்தனர் பாட்டியும் பேத்தியும்.

கோபிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெண் ஆளுமைகளை அடையாளப் படுத்தும் ஒளிஅரசியின் நட்சத்திர இல்லத்தரசி பகுதியை அலங்கரிக்கும் இம்மாத ஆளுமை சமூக சேவகியும், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தான நிறைவேற்று அதிகாரியுமான திருமதி. மிதிலா ஸ்ரீ பத்மநாதன்.



நேர்கண்டவர்
கிருஷாந்தி

# சேலையும் வேலையும்

**அறிமுகமாக உங்களைப் பற்றிச் சொல்லுங்கள்?**

எனது பெயர் மிதிலைச்செல்வி ஸ்ரீபத்ம நாதன். மிதிலா ஸ்ரீபத்மநாதன் என அறியப் பட்டவள். நான் பிறந்தது, வளர்ந்தது, படித்தது எல்லாமே யாழ்ப்பாணத்தில். எனது ஆரம்பக்கல்வியை உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலத்திலும், உயர் கல்வியை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியிலும், பட்டப்படிப்புக் கல்வியை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திலும் கற்றேன். நான் ஒரு வர்த்தகப் பட்டதாரி. தற்போது கொழும்பில் கடமையாற்றி வருகிறேன். நிறைவேற்று அதிகாரியாக இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தில் 25 வருடங்களாகத் தொழில் புரிகின்றேன்.

**உங்கள் வாழ்க்கைப் பயணத்தில் சமூக முன்மாதிரியான செயற் திறனுக்கு காரண மாக இருந்தவர்கள் யார்? அவ்வாறான சம்பவம் எது?**

பொதுவாக ஒருவரின் ஆளுமை என்பது அவர்களைச் சுற்றியுள்ள மூவரின் ஆளுமை கள் பிரதிபலிக்கும் என ஆய்வுகள் கூறுகின் றன. என்னைப் பொறுத்தமட்டில் என் தந்தை, என் ஆசான், என் கணவர் என மூவரையுமே சொல்லுவேன்.

எனது தந்தை அமரர் திரு.க.கணபதிப் பிள்ளை ஆசிரியரும் செல்வி.நா.வேலுப் பிள்ளை ஆசிரியையும் எனது ஆளுமையில் பெரும்தாக்கத்தினைஏற்படுத்தியவர்களாவர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக அக்கறை கொண்ட இவர்கள் இருவரும் தங்கள் வாழ்வில் பொது நன்மைக்கே முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். எல்லோராலும் விரும்பப்படும் குணங்கள் நிறையப் பெற்றவர்கள். எனது ஆசிரியை அடிக்கடி கூறும் வார்த்தை முடியாது என்பது அகராதியிலே இல்லை என்பதைத்தான்.

ஒரு சம்பவத்தைக் கூறலாம் என நினைக்கிறேன். அதாவது, நான் திருகோணமலையில் கடமையாற்றிய காலம் ஓர் இறுக்கமான சூழலாகும். அதாவது, இந்திய அமைதி காக்கும் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே யுத்தம் ஆரம்பித்த காலமது. நாங்கள் எல்லோரும் அகதிகளாக கும்புறுப்பிட்டி எனும் இடத்திலே தங்கியிருந்தோம். எங்களுக்கு வழங்கப்பட்ட கோதுமை மாவினை ரொட்டியாக்கி பாதையோரத்தில் நின்று மக்களுக்கு வழங்கிக் கொண்டிருந்தோம். அந்தச் சமயம் கோதுமை மாவில் சிறிதளவை எடுத்து நாளைய தேவக்கென வைத்துவிட்டோம். ரொட்டி மா பற்றாக்குறையாகிப் போனதால் இது பற்றி ஆசிரியை எங்களிடம் விசாரித்தார். நானும் எனது நண்பியும் நாளைய தேவைக்கென எடுத்து வைத்துள்ளோம் என்ற விடயத்தைக் கூறினோம். அந்த நேரத்தில் ஆசிரியை கூறிய அந்த வார்த்தைகளே என் வாழ்க்கை முழுதும் பாடமாக அமைந்தது என்பேன். நாளை நாம் உயிருடன் இருப்போமா என்பது கேள்விக் குறியாக இருக்கும்போது மக்களை ஏன் பட்டினி போட வேண்டும்? அந்த மாவினை எடுத்து வரும்படி கூறினார். இந்த வார்த்தைதான், நாளை என்பதை விட இன்றைய மக்களின் பசித் தேவையே முக்கியம் என்பதை உணர்த்தியது. தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம் என்ற பாரதியின் பரந்த மனம் பற்றிய சிந்தனை எனக்குள்ளும் உயர்ந்து நின்றது.

## சேலை ஒரு சோலை

**பெண்களின் அழகுக்கலை தொடர்பில் சேலை விற்பனை முயற்சியில் நீங்கள் கையாண்ட உத்திகள் எவை? பெண்கள் மத்தியில் அவை எத்தகைய மதிப்பினைப் பெற்றுத்தந்துள்ளன?**

ஆள்பாதி, ஆடைபாதி என்பதற்கிணங்க இரண்டு காரணங்களுக்காகவே இதை நான் ஆரம்பித்தேன். ஒன்று பெண்கள் நேர்த்தியாக ஆடை அணிய வேண்டும். அடுத்தது பெண்கள் சொந்தக்காலில் நிற்க கற்றுக்கொள்ளவேண்டும். இவை இரண்டும் பெண்களுக்குத் தன்னம்பிக்கையை அளிக்கக்கூடியவை ஆகும். சேலை பெண்களுக்கு அழகு மட்டுமல்ல, அதுவொரு கௌரவமும் ஆகும். நான் அமெரிக்கா, கனடா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளுக்குச் சென்ற போதும் அங்கெல்லாம் சேலைதான் அணிந்தேன். நம்மவர்களால் மட்டுமன்றி அந்த நாட்டு வெள்ளையர்களாலும் நான் பாராட்டுப்பெற்றேன். உதாரணமாக ஒரு விடயத்தைக் கூறலாம் என நினைக்கிறேன். அமெரிக்காவில் பெப்சி நிறுவனத்தின் Financial control இந்தியப் பெண்மணி இந்திரா நூயி என்பவர் பல்வேறு நேர்முகத் தேர்வுக்குச் சென்றும் அவர் தேர்வு செய்யப்படவில்லை. பின் அவர் தனது ஆலோசகரிடம் ஆலோசனை கேட்ட போது, உங்களுக்கு வசதியையும் தன்னம்பிக்கையையும் ஊட்டக்கூடிய ஆடையை அணிந்து செல்லுங்கள் என்று கூறினாராம். அதன்படி அவர் சேலை அணிந்து நேர்முகத் தேர்வுக்குச் சென்றார். அந்த முறை அவருக்கு வெற்றி கிடைத்தது. எங்கள் பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் மதிக்கின்ற நான் சேலை உடுப்பதில் முன்மாதிரியாக இருக்க விரும்புகிறேன். அண்மைய காலங்களில் இலங்கை வருகின்ற வெள்ளை இனப் பெண்கள் பலர், சேலை உடுத்து இந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவதை யாவரும் காணலாம்.

**2. ஒரு மனிதனின் தியானம், ஆளுமை அபிவிருத்தி என்பன தொடர்பில் நீங்கள் ஆற்றிய பணிகள் எவை? அவை தொடர்பாக இன்று நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் எவை?**

ஆளுமை என்பது ஒவ்வொருவரும் வளர்த்துக்கொள்ள வேண்டிய ஒன்றாகும். ஆளுமை உடையவர்கள் எந்தப் பிரச்சினையையும், எந்தச் சூழலிலும் சிறப்பாகக் கையாளக்கூடியவர்களாக இருப்பார். தனிப்பட்ட பிரச்சினையானாலும் சரி குடும்பப் பிரச்சினையானாலும் சரி அலுவலகப் பிரச்சினையானாலும் சரி சமூகப் பிரச்சினையானாலும் சரி ஆளுமை உள்ளவர்கள் சிறப்பான முறையிலே அந்தப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பிரச்சினைக்கான தீர்வினைக் கண்டுகொள்வர். அவ்வாறானவர்களை உருவாக்க வேண்டும் என்பதே எனது நோக்கமாகும். யுரேகா ஆளுமை அபிவிருத்தி நிறுவனம் ஒன்றினை 2002 ஆம் ஆண்டிலிருந்து நடாத்தி வருகின்றேன். பயிற்சிப் பட்டறைகள் பலவற்றை, உள் நாட்டிலுள்ள பயிற்சியாளர்களையும் இந்தியாவில் உள்ள பயிற்சியாளர்களையும் தருவித்து நடாத்தி வருகின்றேன். அனேகமாக நிறுவனங்கள் தமது ஊழியர்களுக்கு மட்டுமே பயிற்சி அளிக்கின்றன. சமூகத்திலுள்ள எல்லோரும் சிறந்த ஆளுமை உள்ளவர்க்கமாக வரவேண்டும் என்பதற்காக எல்லோரும் பயிற்சியில் பங்குகொள்ளும் படியாக பயிற்சிகளை வழங்குகின்றேன். படித்தவர்கள், படிக்காதவர்கள், வேலை செய்பவர்கள், வேலை செய்யாதவர்கள் என்ற வேறுபாடு இல்லாமல் ஆளுமையினை யாரும் கற்றுக்கொள்ளலாம்.

## பெண்மையே பெண்ணுக்கு அழகு

**3. பெண்கள் தொடர்பான உங்கள் சமூகப் பணிகளுக்காக நீங்கள் இணைந்து இயங்கும் பொது அமைப்புகள் எவை?**

இலங்கை தமிழ் மாதர் சங்கம், கொழும்பு இந்து மகளிர் மன்றம், கொழும்புக்கிளையின் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் நிர்வாகக் குழு உறுப்பினாக இருந்து வருகிறேன். அத்துடன் பெண்களின் குரல் (Voice of Women) என்ற அமைப்பினை உருவாக்கியுள்ளேன். பெண்கள் தங்கள் சொந்தக் காலிலே நிற்க வேண்டும் என்பதோடு, தங்களுக்கான தன்னம்பிக்கையினை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதுமே இந்த அமைப்பின் முக்கிய நோக்கமாகும்.

**4. 2016 ஆம் ஆண்டு மகளிர் தின நிகழ்வினை தனி ஒருத்தியாக நின்று மிகத் திறம்படச் செய்து சாதனை படைத்த உங்கள் அனுபவங்களையும், வடக்கின் பல பாகங்களில் இருந்து உங்களுக்குக் கிடைத்த பெண்களின் ஒத்துழைப்பினையும் கூறுங்கள்?**

முப்பது வருட யுத்தத்தினால் வடக்கில் பெண்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். யுத்தம் முடிவடைந்து எட்டு வருடங்கள் ஆகியும் அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை. ஒவ்வொருவரும் பொருள்களையோ, உறவுகளின் இழப்புகளையோ, தங்களின் அங்கங்களையோ இழந்தவர்களாகவே காணப்படுகின்றனர். பொருட்களை இழந்தவர்களுக்கு பொருள்களை வழங்கி ஓரளவு ஆறுதல்படுத்த முடியும். உறவுகளை இழந்தவர்களுக்கு எதனை வழங்கி ஆறுதல்படுத்த முடியும்? அவர்களுக்குத் தேவையானது மகிழ்ச்சி ஒன்றே. அவர்களை மகிழ்சிப்படுத்தி வாழ்வில் விருப்பும் தன்னம்பிக்கையும் கொடுக்க வேண்டும் என்பதற்காகவே இந்த அமைப்பினை நடத்த எண்ணினேன். அதன்படியே செயலாற்றினேன். வெற்றி பெற்றேன். இன்றும் செயலாற்றி வருகின்றேன். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா என்று பல தேசங்களில் இருந்தும் பெண்கள் வருகை தந்து சிறப்பாக்கினர். இந் நிகழ்வு எனக்கொரு மன நிறைவினையும், மகிழ்ச்சியினையும் கொடுத்தது என்பேன். இவ்விழாவிற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் அவர்கள் முதன்மை விருந்தினராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிரேஸ்ட பேராசிரியர் திருமதி.வசந்தி அரசரட்ணம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கௌரவம் தந்தனர் என்பது முக்கிய அம்சமாகும்.

**பெண்ணுக்கு என்ன பெருமை என நீங்கள் எண்ணுகின்றீர்கள்?**

பெண்கள் பெண்களாக பெண்மையுடன் இருப்பது அழகும் பெருமையும் என நான் எண்ணுகின்றேன். பெண்மை, மென்மை என்பவற்றுடன் தைரியம், துணிவு, தன்னம்பிக்கை போன்றவையும் உள்ளவளாக இருப்பது ஒரு பெண்ணுக்குப் பெருமை சேர்க்கும் விடயமாகும்.

**6.தற்போதைய சூழ்நிலையில் பெண்களுக்கு மிக அவசியம் என நீங்கள் கருதுவது என்ன?**

பாதுகாப்பு ஆகும். ஏனெனில், பெண்களுக்குத் தற்போது பாதுகாப்பு இல்லை எனக் கருதுகிறேன். அதனால்தான் பாதுகாப்பு வேண்டும் என எண்ணுகிறேன். மகாத்மா காந்தி ஒரு பெண்ணுக்கான பாதுகாப்பு பற்றி பின்வருமாறு கூறியி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ருந்தார். ஒரு பெண் நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு வீதியில் தனியாக நடந்து போக முடியும் காலமே பெண்களுக்கான சுதந்திரம் எனக் கருதுகின்றேன் என்றார். ஆனால், பகல் பன்னிரண்டு மணிக்கே பெண்கள் தனித்துப் போக முடியாத காலமாக மாறி வருகின்றது என்றே எனக்கும் எண்ணத் தோன்றுகின்றது.

ஆனால், எங்கள் தலைவர் இருந்த காலத்தில் பெண்கள் எவரும் சுதந்திரமாகத் தனித்து எங்கும் போய் வரக்கூடிய காலமாக இருந்துள்ளது என்பதை யாரும் மறந்துவிட முடியாது. வல்லமை தாராயோ இந்த நானிலத்தில் பெண்களை நலமுற வாழ வைப்பதற்கு சிவசக்தி என வேண்டுகின்றேன்.

## எச் செயலுக்கும் எதிர் விளைவு உண்டு

**7. இளம் பெண்களுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?**

பெண்கள் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ளல் வேண்டும். தற்போதைய இளம் பெண்களுக்கு தெரிந்திருக்க வேண்டியது, ஒரு நட்பு எவ்வளவு தூரம் போக முடியும்? என்பதும் எந்த இடத்தில் நிறுத்த வேண்டும்? என்பதுமே ஆகும். மற்றும், கல்வியும் பொருளாதாரமும் பெண்களின் இரு கண்கள் என்பேன். அத்தோடு அவர்களின் தன்னம்பிக்கையே அவர்களை உயர்த்தும்.

**8. பொது விடயங்களில் ஈடுபடுவோர் யாவரும் சோதனைகள், வேதனைகள் யாவற்றிற்கும் உள்ளாகுவர் என்பது எழுதப்படாத ஒரு மரபாகும். இது பற்றிய உங்கள் நிலைப்பாடு என்ன? அவ்வாறான பொழுதுகளில் உங்களைத் தேற்றியவை எவை?**

பொது விடயங்களில் ஈடுபடுவோருக்கு மட்டுமல்ல வீட்டிலிருக்கும் பெண்களுக்கும் பல்வேறு நெருக்கடிகளும் அதனால் வேதனைகளும் சோதனைகளும் வரவே செய்யும். நாம் அவற்றை ஆராய்ந்து தவறிருந்தால் அதனைத் திருத்தியும் தவறான விமர்சனம் வரும்போது தட்டிக் கழித்தும் அதற்கான ஆளுமையினை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இச்சந்தர்ப்பத்தில் ஆன்மீகம், தியானம் என்பன சரியாக வழி நடத்தும் என்பது என் நிலைப்பாடாகும். இவை மனதைச் சமநிலையில் வைத்திருக்க உதவும்.

பண மோசடி செய்வது, பொய் சொல்வது மட்டும் குற்றம் கிடையாது. ஒருவரின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்துவதும் இறைவனின் தண்டனைக்குரிய குற்றமாகும். நியூட்டனின் விதியை நம்புகின்றவள் நான். ஒரு செயலுக்கு எதிர் விளைவு நிச்சயம் உண்டு.

**9. உங்கள் குடும்பத்தினர் உங்களுக்கு எவ்வாறான ஒத்துழைப்புகளை வழங்குகின்றனர்?**

எனது கணவர் ஒரு பல் மருத்துவர். இரு புதல்வர்கள் உள்ளனர். ஒருவர் பல்கலைக் கழகத்திலும் மற்றவர் பாடசாலையிலும் கல்வி கற்றுக்கொண்டிருக்கின்றனர். எனது கணவர் ஒரு சாதாரண கணவர் அல்லர். அப்படி ஒருவரைக் கணவராகத் தந்த இறைவனுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மனைவியை அடிமையாக நடாத்தும் ஆண்கள் மத்தியில் தனக்குச் சமமாக என்னை மதிக்கத் தெரிந்தவர். பாராட்டத் தெரிந்தவர்.

தன்னம்பிக்கை ஊட்டி துணிவையும் தந்தவர். திருமணத்தின் பின் ஒரு பெண் முற்றாக மாற்றமடைந்து விடுவாள். ஆனால், இருந்ததை விட ஒரு படி மேலாக என்னை ஆக்கியவர் என் கணவர்தான். நான் உயர்ந்து வரக் காரணமாக இருப்பவர் என் கணவர்தான். எனது மகன்கள் பற்றிக் கூறும் போது, அவர்களிடம் சொன்னேன் உங்களுடைய முன்னேற்றத்திற்கு என்ன உதவி தேவையானாலும் என்னிடம் கேட்க வேண்டும் என்று. அதற்கு அவர்கள் கூறிய பதில், எங்களின் அம்மா என்ற தகுதியை நீங்கள் வளர்த்துக்கொள்ளுங்கள் என்பதாகும்.

**10. நீங்கள் வேலைக்குச் சென்று பல்வேறு செயற்பாடுகளுக்கும் நேரம் ஒதுக்குகின்றீர்கள். இது உங்களால் எவ்வாறு சாத்தியமாகிறது?**

அமெரிக்கா ஜனாதிபதிக்கும் இருபத்தி நான்கு மணித்தியாலம்தான் உண்டு. சாதாரண மனிதனுக்கும் இருபத்தி நான்கு மணித்தியாலம்தான் உண்டு. ஆனால், இந்த இருபத்தி நான்கு மணித்தியாலத்தை வினைத்திறன் உள்ளதாக மாற்றுவது ஒவ்வொருவரது கையிலும்தான் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவுகள் மெய்ப்பட

# இராமபிரானும் அணிலும்



இராமாயணத்தில் இராமபிரான் சீதையை மீட்க இலங்கை செல்ல வேண்டியிருந்தது. எனவே கடலைக் கடந்து இலங்கை செல்வதற்கு இராம பாலம் அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நளன் நீலன் எனும் இரு வானரங்கள் பாலம் அமைக்கும் பணியைக் கவனிக்க ஏனைய வானரங் கள் எல்லாம் பெரிய பெரிய மலைகளைப் பெயர்த்து எடுத்து வந்து அனுமனிடம் கொடுக்க அனுமன் அப் பர்வதங்களில் ஓம் ஸ்ரீ ராம ஜெயம் என எழுதிக் கொடு க்க அவற்றைப் பெற்று நளன் சமுத்தி ரத்தில் இடுகின்றான். இவ்வாறு வான ரங்கள் மலைகளை பெயர்த்து எடுத்து வரும் காட்சியை கம்பர் பின்வருமாறு காட்டுகின்றார்.

**கருவரை காதங்கள் கணக்கு**
**இலாதன இரு கையில் தோள்களில்**
**சென்னி ஏந்தின ஒரு கடல் அடைக்க மற்று**
**ஒழிந்த வேலைகள் வருவன ஆம் என வந்**
**தன வானரம்.**

அதாவது கணக்கில்லாத பல நெடும் தூரம் பரவியுள்ள பல மலைகளையெல் லாம் தம் இரு கைகளிலும் தோள்களிலும் தலையிலும் ஏந்தியனவாக கடலை மறித்து அணை கட்டுவதற்காக வானரப் படை வந் தன எனப் பாடுகின்றார் கம்பர்.

இவ்வாறு இராமருக்காக பாலம் அமைக் கப்படும் செயலை ஓர் அணில் பார்த்துக் கொண்டிருந்தது. தானும் அந்த இணையற்ற இராம சேவையில் ஏதும் பங்களிக்க வேண் டும் என நினைத்தது. ஆனால் பாவம் அந்த அணிலால் தான் மலையைத் தூக்க முடி யாதே. எனவே அவ் அணில் தன்னால் இயன்ற சேவையை செய்ய முயன்றது. உடன் அந்தக் கடல் நீரில் தன் உடலை நனைத்தது. பின் அவ் அங்கிருந்த கடற்கரை மணலில் உருண்டது. அப்போது அதன் உட லில் ஒட்டியிருந்த மணலை அப் பாலத்தில் சென்று உதறியது. இவ்வாறு பல முறை தன் செயலை அவ் அணில் செய்து கொண்டிருந் தது. அப்போது இக் காட்சியைக் கண்ட இராமன் அவ் அணிலை அன்போடு இரா: கையில் எடுத்தான். அதன் பக்தி கண்டு மகிழ்ந்தார். அதன் முதுகில் அன்போடு தட விக் கொடுத்தார். அதுவே பின்நாளில் அணி லின் உடலில் மூன்று கோடுகள் வந்தன எனுப்படுகின்றது. இவ்வாறு இராமபாலம் அமைக்கும் மகத்துவமான பணியில் அணி லும் பங்கு வகித்தது.

இவ்விடத்தில் அந்த அணில் செய்த சேவையை தொண்டரடிப் பொடியாழ்வார் அழகுற தன் திருப்பாசுரத்தில் பாடுகின்றார்.

**குரங்குகள் மலையை தூக்கக் குளித்துத்**
**தாம் புரண்டிட்டு ஓடி தரங்க நீர் அடைக்கல்**
**உற்ற சலமிலா அணிலம் போலேன் ...**

இங்கு ஆழ்வார் இராம சேவை புரிந்த அணிலை சலாமிலா அணில் எனப் பாடுகின் றார். அதன் பொருள் குற்றமில்லாத அணில் அதாவது கபடமில்லாத அணில் என்ப தாகும். அணில் உருவத்தில் சிறியதாக இருந் தாலும் அன்பினால் அது செய்த சேவை மிக உயர்ந்தது எனவே தான் அதனை குற்றமில் லாத உள்ளம் படைத்த அணில் என ஆழ்வார் பாடினார். இராமபிரான் மீது எண்ணற்றவர் பக்தியும் அன்பும் செலுத்தி உள்ளனர். அவற் றில் அவ் அணில் செலுத்திய பக்தி உயர்ந்த தாக விளங்குகின்றது.



கட்டுரையாக்கம்.
இரா.நிஷாந்தன்
ஆசிரியர் கிளி / இ. ம. வி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவுகள் மெய்ப்பட

# தமிழ் மாமணி கலாபூசணம் அல் அஸூமத்




இலக்கியத்துக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பினை நல்கி வரும் மூத்த படைப்பாளிகளை பற்றிய ஓர் ஆவணப்ப திவாகவே நாம் எமது 'ஒளி அரசி' சஞ்சி கையில் 'இலக்கிய முத்து' என்ற பகுதியை ஆரம்பித்துள்ளோம். இலக்கியத்துக்காக தம்மை முழுமையாக அர்ப் பணிக்கும் ஆளுமைமிக்க வர்களைப் பற்றிய இந்தப் பதிவில் இம்மாத 'இலக் கிய முத்தாக' நாம், பன்னூ லாசிரியரும், தமிழ் கவிதை இலக்கணத்தில் பாண்டித் தியம் பெற்றவரும் தமி ழறிஞரும் கவிஞருமான அல் அஸூமத் அவர்களைச் சந்திக்கிறோம். இவரது பல்துறை ஆளுமையைப் பற்றி அறியாதோர் எவரு மிலர். இவரை நாம் இலங் கையின் இலக்கிய முத்து என்று மட்டுமல்ல எங்கள் இலக்கியச் சொத்து என்று கூறிக்கொள்வதில் அக மிக மகிழ்கிறோம். இவ ரது இலக்கிய வாரிசுதான் இப்னு அஸூமத் என்ற மற்றுமொரு கவி ஆளுமை என்றால் அது மிகையாகாது. இனி அல் அஸூமத் அவர்கள் பற்றிய பதிவுகளை நோக்குவோம் கேரளத்தில் நெய்யாற்றங்கரையைச் சேர்ந்த ராமன் நாயர் என்ற பொன்னையர். இலங் கையைச் சேர்ந்த மாரியாயி ஆகியோரின் அன்பு மகனாக மாத்தளை எனும் நகருக்கு அண்மையில் திக்கிரியா எனும் இறப்பர்த் தோட்டத்தில் 1942 நவம்பர் மாதம் 22 ஆம் திகதியன்று பிறந்தவர் தான் அன்று வேலாயுதம் என்ற பெயரைக் கொண்ட இன்றைய அல் அஸூமத் எனும் பல்துறை விற்பன்னர்.



ஆரம்பக்கல்வியை மந்தண்டாவளை ஆட்டுப்பட்டிப்பாடசாலை, நிக்கக்கொட் டுவைத் தோட்டப்பாடசாலை, இறத் தோட்டை அரசினர் தமிழ்க் கலவன் பாட சாலை (1952 வரை யில்) ஆகியவற்றில் கற்றார். பின்னர் மாத் தளை, கந்தசாமி சைவத் தமிழ்ப் பாட சாலையில் (இப்போ தைய தேசிய இந்துக் கல்லூரி) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் (கு.கு.இ.) பரீட்சையில் சித்திய டைந்த இவர் ஆசிரிய ராகவும் , தேயிலைத் தோட்டத்து சூப்பர்வை சராகவும் மட்டுமன்றி ஹோட்டல், விசைச்சு ருளி செய்தல், அச்சுக் கூடம் ஆகியவற்றிலும் தொழில் புரிந்துள்ளார்.

1959 ஆம் ஆண்டு முதல் எழுத்துலகில் நுழைந்த இவர் சிறுகதை, கவிதை, நாவல், கட்டுரை, விமர்சனம், மொழிபெயர்ப்பு ஆகிய பல துறைகளிலும் இலக்கிய முத்தி ரையை பதித்தவர். இவர் எழுதி பத்திரிகை, சஞ்சிகைகளில் பிரசுரமானவை ஏராளம். சிறுகதைகள் 54, நாவல்கள் 3, கவிதைகள் ஆயிரங்கள், குறுங்காவியங்கள் எட்டு, கட் டுரைகள் சுமார் முப்பது, நெடுங்கட்டுரை (கவிதை எழுதுவது எளிதானதா? என்ற பெயரில் 36 அத்தியாயங்கள்) பொன். வேலாயுதம், சுடுகந்தை வேலாயுதம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுடு வேலன், சுவே, வாணியன், மாத்தளையான், எல் அசோமட், அசோமட் டெல்க்கோவ், மொ. அ. அப்துல் அஸீஸ், சாத்தன், அபூ முனாஃப், ராமபுத்திரன், பொன்மாரி, அ. பாவேந்தி ஆகிய பல்வேறு புனை பெயர்களிலும் எழுதிக்குவித்தவர்.

இவரை ஆசிரியராகக்கொண்டு' பூபாளம்' எனும் பெயரில் கவிதைக்கான ஒரு காலாண்டு சஞ்சிகை வெளிவந்தது. 1983 ஜூலைக் கலவரத்தோடு அது நான்கு இதழ்களுடன் நின்றுபோனது. பின்னர் 'பௌர்ணமி' 'மேகம்' எனும் பெயரில் சஞ்சிகைகளை வெளியிட்டார்.

இவரது 'விரக்தி' எனும் சிறுகதை, 1999 இல் இலங்கையில் முதற் பரிசு பெற்று, பின்னர் புதுடெல்லி 'கதா' அமைப்பினால் சிறந்த இலங்கைச் சிறுகதையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு' சார்க்' நாடுகளுக்கிடையிலான சிறுகதை மொழிபெயர்ப்பிற் சேர்த்துக் கொள்ளப்பட்டது. அதற்குரிய சன்மானமாக இந்திய ரூபா 2,000 அளிக்கப்பட்டது. ஆனால் அப்பணம் இதுவரை அவருக்குக் கிடைக்கவில்லை என்பது ஓர் கசப்பான எழுத்துலக அனுபவம் என அல் அஸுமத் குறிப்பிடுகிறார்.

'புலராப் பொழுதுகள்' குறுங்காவியம் என்ற வகையில் வெளிவந்த இந்நெடுங்கவிதை, எழுபதுகளில் வீரகேசரி ஞாயிறு மலரில் வெளிவந்த 'காட்டரசனிட்ட கடின சபதம்' என்ற தனிக்கவிதையின் விரிவாக்கமாகும். கமல் பிரதர்ஸ் பப்ளிகேஷன் 1982. முஸ்லிம் எழுத்தாளர் தேசிய கவுன்ஸிலின் பரிசு பெற்றது. 'மலைக்குயில்' தனிக்கவிதைத் தொகுப்பு. யாவும் மலையகக் கவிதைகள். அவ்வப்போது பத்திரிகை, சஞ்சிகைகளில் வெளிவந்தவை. இத்தொகுப்பின் இறுதிக் கவிதையாக இடம்பெற்றுள்ள நெடுங் கவிதையின் தலைப்பே மலைக்குயில் என்பதாகும். அல் அஸுமத் கவிதைகள் என்ற இந்த நூல் 1987 ஆம் ஆண்டு தமிழ் மன்ற வெளியீடாகும்.

இவரது 'குரல்வழிக்கவிதைகள்' மேடைகள், வானொலி, தொலைக்காட்சிகள் ஆகியவற்றில் ஒலிபரப்பப்பட்டவை. இந்த நூல் 2009 ஆண்டு இலங்கை இலக்கியப் பேரவை விருதும் யாழ் இலக்கிய வட்ட விருதும் பெற்றது. பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்திருந்தபோதிலும் இன்னும் நூலுருப் பெறாமலிருக்கும் தனிக்கவிதைகள், ஆறாறே எனும் பெயரில் ஒரு நூலாக வெளிவர உள்ளது.

'தினகரன்' வாரமஞ்சரியில் தொடராக வெளிவந்த நடைப்பா எனும் நடைச் சித்திரக் கவிதைகளும் ஒரு நூலாக வெளிவரவுள்ளது.

பிஞ்சியம் என்ற பெயரில் தனது பிறப்பு முதல் தான் பாடசாலையிலிருந்து வெளியேறியது வரையிலான சுயசரிதையைத் தனித்தமிழில் ஒரு காவியமாக வடித்திருக்கிறார். சில தமிழ்ச் சொற்களுக்கு புது வடிவம் இதில் கொடுக்கப்பட்டுள்ளது.

முஹம்மது நபிகளாரின் பொன்மொழிகளைக் குறள் வடிவத்தில் அமைத்தும் வருகிறார். இது வரையில் 2200 குறள்கள் எழுதப்பட்டுள்ளன. இன்னும் ஆயிரம் குறள்கள் வரும் என்கிறார்.

'வெள்ளை மரம்' 2001ஆம் ஆண்டு துரைவி பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது. இதற்கு அரச தேசிய சாகித்திய விருதும் சிரித்திரன் சுந்தர் நினைவு விருதும் கிடைத்துள்ளன. இவரது 'ஆயன்னையம்மா தாய் கொடகே' தேசிய சாகித்திய விருது பெற்றது. இவரது வெளியீடான 'அறுவடைக் கனவுகள்' என்ற நாவல் 2010 ஆம் ஆண்டு . தமிழியல் விருது பெற்றது. இது தினகரன் நாளிதழில் தொடராக வெளிவந்தது. பின்னர் நூலாக்கப்பட்டது. மலையகத் தோட்டத்தில் அவருக்கேற்பட்ட அனுபவப்பதிவு இது. பிரான்ஸில் இந்நாவல் ஒரு குழுவினரால் முழு நேர ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. அசுரா என்பவர் இதனை மிக நன்றாக விமர்சனம் செய்திருந்தார். www.malayagam.com என்ற வலைத்தளத்தினூடாக இதனைப் பெற முடியும்.

இவரது மார்க்க வாசம் நாவல் இதுவும் தினகரன் நாளிதழில் தொடராக வெளிவந்த நாவல் . இன்னும் நூலாக்கப்படவில்லை. முஸ்லிம்களின் கொழும்புப் பேச்சுத் தமிழை அடிப்படையாகக் கொண்டது. சுடுகந்தை நாவல். இதுவும் தினகரன் வாரமஞ்சரியில் வெளிவந்ததே. இன்னும் நூலாக்கப்படவில்லை.

பிலால் என்ற மொழிபெயர்ப்பு நூல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கிய முத்து

(ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு) முதற் பதிப்பு: 1988 அல் ஃபாஸி பப்ளிகேஷன்ஸ் (தமிழ்நாடு).

இரண்டாம் பதிப்பு: எவரெஸ்ட் பிரிண்டர்ஸ், தர்கா நகர். 1995.

மூன்றாம் நான்காம் பதிப்புகள்: மெல்லினம் பதிப்பகம், தமிழ்நாடு. 2006, 2010. பி. கே. பாறக்கடவு எழுதிய 'அவள் பெய்யுன்னு' எனும் மலையாள சிறுகதைகள் 92, 'அவள் பெய்கிறாள்' எனும் தலைப்பில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. மிகச் சிறிய சிறுகதைகள். இவற்றுட் சில தினகரனில் வெளியாகியுள்ளன. இந்நூல் 2016 டிசம்பரில் அச்சாக்கப்பட்டது.

**பிறப்பில் தமிழராகவும் வாழ்வில் முஸ்லீமாகவும் வாழ்ந்து இரு கலாசார உணர்வுகளை இலக்கிய உலகிற்கு வழங்கும் இந்த இலக்கியமுத்து இதுவரை பதினைந்து புனைபெயர்களில் எழுதியுள்ளமையையும் 205 000.00 பெறுதியான பரிசில்களைப் பெற்றமையையும் ஒளிஅரசி பாராட்டுகின்றது.**

பல கட்டுரைகளை அவ்வப்போது எழுதியிருப்பினும் அவரது பாரிய முயற்சிகளாக அமைந்துள்ளவை மூன்று பாரிய நூல்களுக்கான முயற்சியே. சென்னை றஹ்மத் அறக்கட்டளை 2012இல் ஒரு போட்டியை அறிவித்திருந்தது. உலகளாவிய நிலையில் இப்போட்டி நடந்தது. எழுதப்படும் பிரதிக்கு இந்தியப் பணத்தில் ஒரு லட்சம் ரூபா பரிசாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. தலைவர் முஹம்மத் எனும் தலைப்பில் அல் அஸுமத் எழுதியிருந்த பிரதிக்கே இப் பரிசு கிடைத்துள்ளது. அந்நூல் றஹ்மத் அறக்கட்டளையால் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் வெளியிட்டது.


இலங்கை ஒலிபரப்புப் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவையில் இலக்கிய மஞ்சரி, இளைஞர் இதயம், கவிதைச்சரம் ஆகிய நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறார். பல கவியரங்குகள், பேட்டிகள் என்பன வற்றிலும் பங்குபற்றியுள்ளார். ரூபவாஹினி, நேத்ரா, ஐ.ரி.என், டான் போன்ற தொலைக்காட்சிகளிலும் பல கவியரங்குகள், பேட்டிகள் என்பவற்றிலும் பங்கெடுத்துள்ளார்.

1992 அரச முஸ்லிம் சமய, கலாச்சார அமைச்சு. 'கவித்தாரகை' நஜ்முஷ் ஷுஅறா எனும் விருதுப் பெயரும் ரூபா 10,000 பண முடிப்புமு இவருக்குக் கிடைத்தது. அவ்வாறே 2002 இல் இலங்கையில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் கௌரவமும் ரூபா 25,000 பண முடிப்பும், 2006. அரச கலாச்சாரத் திணைக்களம். கலாபூசணம் விருதும் ரூபா 10,000 பணமுடிப்பும். 2009. ஸ்ரீலங்கா முஸ்லிம் கலைஞர் முன்னணி. 'இலக்கிய சாகரம்' என்ற பட்டமும், தமிழ்நாடு, காயல்பட்டினத்தில 2011. இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கழகம் நடத்திய 13வது உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் 'தமிழ் மாமணி' விருதும் இவருக்கு கிடைத்தன்

2013ஆம் ஆண்டு 'அறுவடைக் கனவுகள்' இவரது நாவலுக்காக . 'தமிழியல் விருது.' 'வாழ்நாள் சாதனையாளர் விருதும்' ரூபா 15,000 பண முடிப்பும் இவருக்குக் கிடைத்தன.

2014. காத்தான்குடி நவ இலக்கிய மன்றம் இவருக்கு 'இலக்கிய வாரிதி.'என்றும் 2017ஆம் ஆண்டு பெப்ரவரியில் கொழும்புக் கம்பன் கழகம் நடத்திய கம்பன் விழாவில் கவிதைக்கான 'மகரந்தச்சிறகு' விருதும் ரூ.20,000 பொற்கிழியும். இதே ஆண்டில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனமும் கொடகே சகோதரர்களும் இணைந்து வழங்கிய 'மூத்த எழுத்தாளர்களைக் கௌரவிக்கும் விழாவில் விருதும் ரூ. 25,000 பொற்கிழியும். இவருக்குக் கிடைத்தமை இவரின் இலக்கிய ஆளுமைக்கான சான்றுகளாகும்.

இவ்வாறு இலக்கியத்தில் பல்துறை விற்பன்னராக திகழும் மூத்த படைப்பாளியும்,; தமிழறிஞரும், கவிஞருமான கலாபூசணம் அல் அஸுமத் அவர்கள் இலக்கியத்துக்கு மென்மேலும் தொண்டாற்ற வேண்டும் எனவும் அன்னாரின் ஏனைய காத்திரமான படைப்புகளும் நூலுரு பெற வேண்டும் எனவும் 'ஒளி அரசி' சார்பாக நாமும் வாழ்த்துகிறோம்.



**கலாபூசணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மனதில் பட்டதும் சுட்டதும்

# பிரதீபா விருதும் வெறும் பகட்டு பாராட்டும்

அன்புடன் ஒளிஅரசி ஆசிரியருக்கு, நான்கு வருடங்களாக தொடர்சியாக ஒளிஅரசி சஞ்சிகையினை வாங்கி வாசித்துவரும் ஒரு வாசகி நான். இலங்கையில் இவ் வாறு ஒரு சஞ்சிகை அச்சிடப்பட்டு வெளிவருவது மிகவும் பாராட்டுக்குரிய விடயம். இன்று அநேக ஆசிரியர்கள் விருப்புடன் வாசிக்கும் ஒரு சஞ்சிகையாக ஒளிஅரசி மாறிவரும் நிலையில் 'பிரதீபா விருதும் வெறும் பகட்டுப் பாராட்டும்' எனும் தலைப்பில் என் மனதில் பட்ட என் மனதை சுட்ட ஒரு விடயத்தை உங்கள் சஞ்சிகை மூலம் எழுத விரும்புகிறேன், பிரசுரிப்பீர் களா?

ஏணியாகவும் தோணியாகவும் இருந்து தம்மை அர்ப்பணித்து தமது வளர்ச்சியைக் கருத்தில் கொள்ளாது மாணவர்களை உயர்த்திவிட்டு அவர்களின் வளர்ச்சியில் மகிழ்வுகொள்பவர்கள் ஆசிரியர்கள். இவர்களது பணி நிச்சயம் பாராட்டப்படவேண்டியதே. குறிப்பாக ஏனைய நிறு வனங்களை முகாமை செய்வதைவிட பல்கலைக்கழகத்தையும் பாடசாலையையும் முகாமை செய்வதே மிகக்கடினமான பணி என்பது யாவருக்கும் தெரியும்.

ஏனெனில் இரு இடங்களும் கற்றவர்கள் அதிகம் இருக்கும் இடம். அவ்வாறான இடங்க ளில் பணிபுரிவோரை ஊக்கப்படுத்த விரும்பினால் எழுத்துமூல பரீட்சையாக போட்டியாக, செயற்பாட்டு அடைவுமட்ட மதிப்பீட்டின் மூலமாக கணித்து தெரிவு செய்வது சிறப்பானது. ஏனெனில் சிபாரிசு அடிப்படையில் தெரிவுகள் இடம்பெற்றால் முரண்பாடுகள் ஏற்பட்டு பிரச் சினைகள் ஏற்பட வழிவகுக்கும். அந்த அடிப்படையிலேயே ஆசிரியர்களுக்கான அனைத்து பதவி உயர்வுகளும் பாராட்டுகளும் பரீட்சையை அடிப்படையாககொண்டிருந்தது. ஆனால் நல் ஆசிரியர்கள் என சிறப்பு பட்டம் சூட்டி பிரதீபா, பிரபா என்னும் விருது அரசினால் வருடாவ ருடம் விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு விரும்பும் ஆசிரியர்களால் பூர்த்திசெய்யப்பட்டு அதி பரால் சிபாரிசு செய்யப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்களில் தெரிவுசெய்யப்படுவதன் மூலம் வழங்கப்படுகின்றது.

ஆசிரியர்களைப் பொறுத்தவரை இவ்விருதினைப் பெறுவதென்பது கடினமான பணி அல் ல. ஆசிரியத்துவத்துடன் தமது பணியைச் செய்யும் அனைத்து ஆசிரியர்களும் இவ்விருதை இல குவாகப் பெற்றுவிடலாம். இது ஒரு அரசியல் விளையாட்டு எனக்கருதி இவ்விருதுக்கு விண் ணப்பிக்காது சுயநலம் இன்றி கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆசிரியத்துவத்துடன் கற்பிக்கவில்லை எனக்கூறிவிடமுடியுமா? கல்விச் சமூகமும் அதிகாரிகளும் சற்றுச்சிந்திக்கவேண்டும்.

இது இப்படி இருக்க ஒரு ஆசிரியருக்கு இருதடவை வழங்கப்படும் கேளிக்கூத்தும் தற்போது இடம் பெறுகிறது. இவை எல்லாவற்றினையும் விட உரிய அதிபர், ஆசிரியர்க ளுக்கு கொடி பிடிப்பது போன்று மாணவர்களிடமும் பெற்றோர்களிடமும் பணம் அறவிட்டு பத்திரிகைகளில் பிரசுரிப்பது மிகவும் வருந்தத்தக்கவிடயம். மாணவர்கள் மனங்களில் இந்த விருதிற்கு விண்ணப்பிக்காத பல சிறப்பான ஆசிரியர்களைப் பற்றிய குறைவான மதிப்பீடும் தோன்றத்தொடங்கிவிடும். அதிபர் ஆசிரியர்கள் பத்திரிகை விளம்பரங்களுக்காக பகட்டிற்காக செலவுசெய்யும் பணத்தினை வறுமையில் வாடும் ஏழை மாணவர்களின் கல்வி விருத்திக்கு ஒதுக்கீடு செய்யலாமே.

**ஆசிரியர் குறிப்பு :**

இப் பகுதி சில ஆசிரியர்களின் மனதை துன்புறுத்தும் என்பதை நாம் அறிவோம். இருப்பினும் ஊடக தர்மம் எனும் அடிப்படையில் இங்கே பிரசுரிக்க வேண்டியிருந்தது. இந்த வாசகியின் கட்டுரைக்கும் யாராவது மறுதலித்து கருத்துரைக்க விரும்பினால் ஒளிஅரசிக்கு எழுதுங்கள். அதனையும் இவ்வாறே பிரசுரிப்போம். (பெயர்கள் குறிப்பிடப்படமாட்டாது)

திருமதி மதிவதனி வாமதேவன்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கொழும்பு நகரில் இசை நடன கற்றல் செயற்பாடுகளை சிறப்புற முன்னெடுத்துவரும் நடேஸ்வராலயா அக்கடமியின் பதினைந்தாவது ஆண்டு நிறைவை சிறப்பிக்கும் நிகழ்வுகள் அண்மையில் கொழும்பு இராம கிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெற்றன.





அகவை மூவைந்தை எட்டிய இக்கலைக்கூடம் இன்னும் பிரமாண்டமாய் வளர்ந்து தன் சேவைதனை ஆல் போல் விரிக்கவேண்டும் என ஒளி அரசியின் சார்பில் வாழ்த்துகின்றோம். நிகழ்வில் பங்குபற்றிய இரண்டு குழுக்களின் படங்களும் நிகழ்வு பற்றிய சிறுவிரிப்பும் இங்கே தரப்படுகின்றது.



சங்கித தரப் பரீட்சை 1, 11 ஐ நிறைவுசெய்த மாணவிகளின் இசை நிகழ்வு. இந்நிகழ்வை நெறிப்படுத்தி வழங்கியவர் ஆசிரியை தேனுகா கருணாகரன். ராகமாளிகா ராகத்தில், கோவிந்தன் குழலோசை என்னம் பாடலையும் ஹமீர் கல்யாணி ராகத்திலமைந்த கைவீணையை ஏந்தும்..., மலர்கள் பேசும்... என்னும் பாடல்களையும் பாடினர். சிறப்பாக தமது திறனை வெளிப்படுத்திய இம்மாணவிகள் அக்கணங்கள் இசை இன்பத்தினால் மனங்களைக் கட்டிவைத்தனர் என்றால் மிகையல்ல. இவர்களின் திறன்கள் மேலும் வளரவும் இசைஉலகில் தனித்துவமானவர்களாய் மிளிரவும் ஒளிஅரசியின் வாழ்த்துக்கள் இம்மாணவிகளுக்கு.

கிற்றார் என்பது அதிர்கம்பிகள் (strings) கொண்ட ஒரு நரம்பு இசைக்கருவி. இது மிகவும் பிரபலமான இசைக்கருவியாகும். கித்தாரில் உள்ள வெவ்வேறான தடிமன் கொண்ட நரம்புகளை மீட்டுவதன் மூலம் இசை பிறக்கின்றது. நடேஸ்வராலயாவின் கிற்றார் வாத்தியக்குழுவினரின் இசைத்திறனும் அன்றைய நிகழ்வில் சபைக்கு விருந்தளித்தது. ஆசிரியர் அன்ரனி றொஷான் அவர்களால் கற்பிக்கப்பட்டு நிகழ்வு நெறிப்படுத்தப்பட்டது. இவர் 8 வருடங்களாக இங்கு கற்பிக்கின்றார். மனித வலுவின் மூலமாக விரல்களைப் பயன்படுத்தியே இவ்இசைக்கருவி மீட்டப்படுகின்றது. முன்னைய காலங்களில் இதனைக் கற்கும் மாணவர்கள் மிகக்குறைவெனினும் தற்போது கிற்றார் கற்பவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு உயர்ந்துள்ளது. அன்றைய நிகழ்வில் பங்குபற்றிய மாணவர்களிற்கு அதுவே கிற்றார் வாசிப்பிற்கான கன்னிமேடை எனினும் அவர்கள் சிறப்புற கானம் வழங்கியமை பாராட்டிற்குரியதாகும். இவர்களையும் ஒளிஅரசியின் சார்பில் வாழ்த்துகின்றோம்.



கோபிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவுகள் மெய்ப்பட

# உயிரியல் கடிகாரம் தவறாக ஓடலாமா?

8.10 வீட்டுக் கடிகாரத்தில் 8 தான் காட்டுது. சரியான நேரம் வைக்கிறதில்லையா?

அலுவலகம் செல்லும் அப்பா கடிந்து கொண்டார்.

சாப்பிட நேரமில்லை. நான் பார்த்துக்கிறேன் என்று விருட்டென்று வெளியேறினார்.

வீட்டுக் கடிகாரம் தவறாக ஓடுவதைக் கண்டு கோபம் கொண்டவர், தன் உடலின் கடிகாரம் பாதிப்படைந்ததை உணரவில்லை. ஆம், ஒரு வேளை உணவைத் தவிர்ப்பது, அதுவும் காலை உணவைத் தவிர்ப்பது நம் உடலின் அன்றாட நிகழ்வைப் பாதிக்கும் என்று நாம் ஏன் உணர்வதில்லை?




சரியாக ஓடாத கடிகாரத்தால் யாருக்கு என்ன பயன்? உயிரியல் கடிகாரமும் அதே போன்றுதான். எட்டு மணி நேரம் வேலை செய்துவிட்டு நாம் ஓய்வு எடுப்பதாக நினைத்தாலும், உடல் இயங்கிக்கொண்டுதானே இருக்கிறது? நம் உயிரியல் செயற்பாடுகள், உடலியல் மற்றும் மன மாற்றங்கள் உடலின் கடிகாரத்தைப் பொறுத்தே இருக்கின்றன. இதை சிர்க்கேடியன் ரிதம் (Circadian Rhythm) என்று அழைப்பார்கள். இதைச் சீராக இயங்க வைப்பது மூளையில் இருக்கும் மாஸ்டர் கடிகாரங்கள். இவைதாம் உடலின் ஒவ்வொரு பாகத்தையும் ஒன்றோடு ஒன்று தொடர்புகொள்ள வைக்கும் நரம்பு செல்கள். உறங்குவது, எழுவது, உடலின் தட்பவெப்பம், உடல் திரவங்களைச் சரியான நிலையில் வைத்திருத்தல், இதர உடல் செயல்பாடுகள் என எல்லாவற்றையும் இந்த செல்கள்தான் கட்டுப்படுத்துகின்றன.

மனிதர்களைப் பொறுத்தவரை, காலையில் விழித்திருக்க வேண்டும், இரவில் உறங்க வேண்டும். இடையில் சரியான நேரத்தில் உணவுகளை உட்கொள்ள வேண்டும். ஏன் இந்த வரைமுறை? சரியான நேரத்தில் உறக்கம் வரவைக்க உதவும் ஹோர்மோன் தான் மெலடோனின் (Melatonin). இது பெரும்பாலும் நாம் உறங்கும்போது, வெளிச்சமற்ற இரவுகளில் சுரக்கிறது. இரவில் விழித்திருந்தால், தேவையான அளவு மெலடோனின் உருவாகாமல் போய்விடும். இதனால் உறங்க வேண்டிய நேரம் எது, விழித்துக் கொள்ள வேண்டிய நேரம் எது என்று உடல் குழப்பமடையும். காலை நேரத்தில் அலுவலகத்தில் உறக்கம் வருவது, உறக்கமின்மை அல்லது அதீத உறக்கம், பின் ஏற்படும் மோசமான பக்க விளைவுகள் எல்லாமே இதனால்தான்.

அதேபோல் நேரம் தவறி உணவு உட்கொள்வதும், அல்லது தேவையில்லாத நேரத்தில் நொறுக்குத் தீனிகள் உண்பதும் நம் உடலின் கடிகாரத்தைப் பாதிக்கும் செயலே! இவ்வாறு உங்கள் உடலை நீங்களே குழப்பும்போது அனைத்து இயக்கங்களும் பாதிக்கப்படுகின்றன. இதனால் தான், மருத்துவர்கள், நேரத்திற்கு உணவு உட்கொள்ள வேண்டும், காலை உணவைத் தவிர்க்கக் கூடாது, தேவையில்லாத நேரத்தில் உணவு உட்கொள்ளக் கூடாது என அறிவுறுத்துகிறார்கள்.

இந்த உயிரியல் கடிகாரம் செயற்படும் முறையைக் கண்டறிந்த விஞ்ஞானிகளான ஜெஃப்ரி சி.ஹால், மைக்கேல் ரோஸ்பாஸ் மற்றும் மைக்கேல் டபிள்யூ.யங் ஆகியோருக்குத்தான் இந்த ஆண்டுக்கான மருத்துவத்துறை நோபல் பரிசு பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளது.

நன்றி இணையம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

கனவுகள் மெய்ப்பட



# தாலி பெண்ணுக்கு வேலி

லீலா ராமையா
கொழும்பு

மலையகத் தேயிலைத் தோட்டத்தில் தொழில் புரியும் இளம் தம்பதியர் தான் வேலாயுதமும் தாமரையும். சொந்த மாமன் மகளைத் திருமணம் செய்து இந்தத் தேயிலைத் தோட்டத்துக்கு வந்தான் வேலு.

தாமரை கறுப்பழகி. பெரிய விழிகள் துறு துறுவென்றிருக்கும். மலையேறி வெயலிலும் மலையிலும் பனியிலும் வேலை செய்வதனாலோ என்னவோ அவளது உடல் கட்டுக் குடிலையாமல் எடுப்பாக இருந்தது.

எவர் கண்ணையும் உறுத்தும் அவளது இயற்கையழகு. நெற்றியில் பெரிதாக குங்குமப் பொட்டும். தரணியுமாக அவள் வலம் வருவது பார்க்க ஆசையாக இருக்கும்.

வேலு அவள் மீது உயிரையே வைத்திருந்தான் என்பது அந்தத் தோட்டத்துக்கேதெரியும்.

வருடங்கள் இரண்டு கண்டுகொள்ளாமல் ஓடி மறைந்தது.

தாமரையும் ஒரு ஆண் குழந்தைக்குத் தாயானாள்.

அன்று அடாத மழை வேலை முடிந்து மழையில் நனைந்தவாறே வீட்டிற்கு வந்த தாமரை தலையைத் துவட்டிக் கொண்டே பிள்ளைப்பருவத்துக்கு ஓடி அவளது மூன்று வயது மகன் முத்துவை இறுக அணைத்தபடி மீண்டும் வீடு நோக்கி ஓடிவந்தாள்.

தன் பிள்ளைக்கு சோறு ஊட்டிக் கொண்டே தானும் அதிலிருந்து சாப்பிட்டுக் கொண்டே தன் மகனோடு பேசிக்கொண்டிருந்தாள்.

''நீ பெரியவனானதும் நல்லா படிக்கணும் தெரியுமா? அப்பா மாதிரி நீ கூலி வேலை செய்யக்கூடாது. அம்மா உன்னை பெரிய படிப்பு படிக்க வைக்கிறேன் என்ன?''

அந்தக் குழந்தைக்கு அது விளங்கியதோ இல்லையோ தாயைப் பார்த்தபடி சிரித்தது. தாமரை ஆசையோடு தன் மகனை மார்போடு அணைத்துக் கொண்டு அப்படியே தரையில் படுத்தாள்.

மழை விட்டபாடில்லை, இடியும் மின்னலும் பாறைகளில் பட்டுத்தெறித்தது. வெளியில் தலைகாட்ட முடியவில்லை.

ஏழு மணியாகியும் வேலு இன்னும் வீடு திரும்பவில்லை. ஏன்னவோ ஏதோவெனப் பயந்தாள் தாமரை.

பக்கத்து வீட்டிலிருக்கும் ருக்குமணியின் மகனிடம் வேலு இன்னும் வரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சம்போய் தேடிப்பார்த்து வரும்படி கூறி குடையை அவன் கையில் கொடுத்தாள்.

அந் நேரத்தில நாலைந்துபேர் தாமரை அக்கா! வேலுவை பாம்பு கடித்து விட்டது. ஆஸ்பத்திரிக்கு கொண்டு போயாச்சு சீக்கிரம் வாங்க என்றார்கள்.

இச் செய்தியைக் கேட்டு அதிர்ச்சியுடன் அந்த இரவு நேரத்தில் தோட்ட ஆஸ்பத்திரியை நோக்கி ஓடினாள் தாமரை.

டொக்டர் என்னதான் வைத்தியம் பார்த்தும் அது பலனளிக்காது வேலு மரணமானான்.

வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டு ஓவென அழுதாள் தாமரை. உலகமே இருண்டு போய்விட்டதாக உணர்ந்தாள் தாமரை.

குழந்தையும் தானும் தனிமையாக்கப்பட்டோம் என்ற நினைப்பு அவளைக் கதிகலங்க வைத்தது.

வேலு இறந்து ஆறேழு மாதங்களாகிவிட்டன. அந்த நாட்களில் தான் இச்சமூகத்தின் உண்மை நிலை, மனிதர்களின் மனதில் உள்ள குறை, நிறைகள் ஒழுக்கமற்றதன்மை, ஓரப் பார்வை, நமுட்டுச்சிரிப்பு காரணமில்லாமல் சுற்றிச்சுற்றி வருவது, வலுக்கட்டாயமாக உதவிகள் செய்யவருவது இதெல்லாம் கண்டு, அதற்கு ஈடுகொடுக்க முடியாமல் தவித்தாள் அந்த இளம் விதவை.

அரிசி வாங்க கடைக்குப் போனால், அந்தக் கடைக்காரனின் பார்வை தன் மீது ஊர்வதைக் கண்டு அருவருப்பு கொண்டாள்.

உனக்கு என்ன வேணுமின்னாலும் வந்து கேளு, அச்சப்படாதே, சிரித்தபடி கடைக்காரர் சொன்னதைக் கேட்டு கடன் எல்லாம் வேண்டாம். நான் உழைக்கிறேன் அது போதும் என கோபத்தோடு கூறி அவ்விடத்தை விட்டு வேகமாக நடந்தாள்.

அவள் கண்களில் கண்ணீர், அதைத் துடைத்தப்படி வேகமாக நடந்தாள்.

கொழுந்து பிடுங்க போகவில்லையா நேரமாச்சே? சொன்னவன் வேலை வெட்டி ஏதுமில்லாம் ஊர் சுற்றும் மாணிக்கம். அவனை ஏறெடுத்துப் பார்த்த தாமரை அது எனக்குத் தெரியும் உன் வேலையைப் பார் என ஆத்திரத்துடன் கூறி கொழுந்துக் கூடையுடன் நடந்து சென்றாள்.

என்ன உலகமிது புருசனில்லாமல் தனியாக ஒரு பெண்ணுக்கு வாழ முடியாதா? எத்தனையோ ஆண்கள் வெளிநாட்டுலே ஏன் பொண்டாட்டிமார இங்க விட்டுட்டு போயிருக்கிறாங்களே, அவங்கெல்லாம் எப்படி வாழ்றாங்க, எனக்கு மட்டும் ஏன் இப்படி?

நேற்று கூட அந்த சுப்பவைசர் என்னைப் பார்த்த பார்வை சே! காதுகிட்ட வந்து கவலைப்படாதே தேயிலை நிறை கொஞ்சமாயிருந்தாலும் பரவாயில்லை போட்டுத்தாரேன் என்றானே, ஏன்? என்ன எதிர்பார்க்கிறான். வேலு இருக்கும்போது மரியாதை கொடுத்தவர்கள் விதவையெனத் தெரிந்து பரிவு காட்டாமல் அசிங்கமாய் நடக்கிறார்களே சே!

அவளது கைகள் அவளை அறியாமலே அவளது வெறுமையான கழுத்தைத் தடவிக் கொடுக்கிறது.

சுவற்றில் மாட்டியிருந்த கண்ணாடியை கழற்றி எடுத்து சுவரில் சாய்த்தபடி தன் உருவத்தை அதில் பார்த்தாள்.

அவள் முகத்தில் ஒன்றுமே இல்லை. நெற்றி வெறுமையாகவும் கழுத்து வெறுமையாகவும் அவள் கோலத்தைப் பார்த்து அவளுக்கே அழுகை வந்தது.

கொஞசம்கூட இரக்கம் இல்லாத மனிதர்கள் ஏன் இப்படி நடந்துக் கொள்கிறார்கள்? இந்த நிலையில் எப்படி வேலைக்குப் போய் மகனை படிப்பித்து ஆளாக்குவது?

தலைவனா? அவன்! தனியாத்தானே இருக்கிறாய் வீட்டுக்கு வரவா எனக் கேட்கிறானே

இதுக்கு மேலே இங்கிருந்து வேலை செய்ய முடியுமா? பயமாய் இருக்கே, தப்பித்தவறி எவன் கையாவது என்மேலபட்டால் பிணமாக விழுவேன,; அப்போ என் மகன் கதி?

இப்படியாக கலங்கிநிலை குலைந்து போயிருந்தாள் தாமரை.

தாமர இந்தா புள்ளைக்கு இந்த ரொட்டியைக் குடு எனக்கூறிக்கொண்டு உள்ளே வந்தாள் அடுத்த வீட்டுப் பாட்டி.

இதென்னடி கோலம்? ஏன் இப்படி இருக்கிற? பாட்டி ஏதும் புரியாமல் கேட்க.

தாமரை மிகுந்த துக்கத்துடன் வேலைக்கு போக மனமில்லை பாட்டி! இங்க இருக்கவே பயமாயிருக்கு. ஒவ்வொருத்தரும் பார்க்கிற பார்வை அச்சமாயிருக்கு. கொஞ்சம் கூட பரிவ காட்டாம என்னத்தையோ பார்க்கிற மாதிரி என்னைப் பார்க்கிறாங்க, கூச்சமாயிருக்கு, அசிங்கமாய் கேள்வி கேட்கிறாங்க, எல்லாம் தனியா இருக்கிறதால வாற வினை.

பொண்டாட்டிமார தனியா விட்டுட்டு வெளிநாட்டுல வேல செய்யுறாங்களே. அந்த பொம்பளைகளுக்கு பிரச்சினையில்லையே, எனக்கு மட்டும் ஏன் பாட்டி? அழுகிறாள்.

உலகமே இப்படித்தான். வெளிநாட்டுல



Digitized by Noolaham Foundation.

கனவுகள் மெய்ப்பட

வேலை செய்தாலும் அவங்க மனைவிமார் கழுத்துல தாலி இருக்கு, குங்குமப் பொட்டு இருக்கு. அதுதான் பெண்களுக்கு பாதுகாப்பு, யாரும் நெருங்கமாட்டாங்க, ஆனா நீ? இளம வயசு வேற, கழுத்துல தாலி இல்ல, பொட்டில்ல, அதனால தான் இந்த பிரச்சினையே வருது.

என்ன செய்ய உன் விதி இப்படி இருக்கு. தாலிதான் ஒரு பெண்ணுக்கு வேலி. அது கொடுக்கிற பாதுகாப்பு ஒரு பெண்ணுக்கு அச்



சத்தைப் போக்கும். துணிந்து எங்கேயும் போகலாம். அதுமட்டுமல்ல, உதவிக்கு ஆள் வரும். தப்பா எவனும் நடக்க பயப்படுவான். தாலிக்கு எப்போதும் ஒரு மதிப்பு இருக்கு தாமரை, சரி அழாத, வேலைக்குப் போய் சம்பாதிச்சாத் தானே சாப்பிடலாம்

பாட்டி போன பின் ஆழ்ந்த சிந்தனையில் இருந்த தாமரை திடீரென எழுந்து தன, பிள்ளையைத் தூக்கிக் கொண்டு தோட்டத்து ஓப்பீஸ் பக்கமாக நடந்துபோய் துரையைப் பார்த்து ஸகக் அடுத்த டிவிஷன்ல எங்க சொந்தக்காரங்க இருக்கிறார்கள், என் பிள்ளையைப் பார்க்க யாருமில்லை. நானும் வேலை செய்யணும், அங்க எனக்கு உதவி கிடைக்கும். அதனால, எனக்கு துண்டு தாங்க, அங்க போய் வேல செய்யிறேன்.

துரைக்கு தாமரையின் கணவனை நன்றாகத் தெரியும். பாம்பு கடித்து இறந்ததும் சவஅடக்கத்துக்கு இந்த துரைதான் உதவிசெய்தார்.

பேசாமல் தாமரை கேட்டபடி அடுத்த டிவிஷன் துரைக்கு கடிதம் எழுதிக் கொடுத்தார். சந்தோசமாக கடிதத்தை எடுத்துக்கொண்டு ஏதோ விடுதலை கிடைத்த மாதிரி நடந்து சென்றாள் தாமரை.

அவளது பழைய உடுப்புப் பெட்டியில் தேவையானவற்றைவைத்து சாமிபடம் விளக்கு எல்லாம் எடுத்துக்கொண்டு கதவைப் பூட்டி பாட்டியிடம் சாவியைக் கொடுத்துவிட்டுப் புறப்பட்டாள் தாமரை.

வேகமாக வந்த பஸ்ஸில் அடுத்த டிவிஷனுக்கு டிக்கட் எடுத்து ஏறி பின் சீட்டில் அமர்ந்து கொண்டாள்.

கையால் தலையைச் சீர்செய்து கொண்டையை சரிப்படுத்தி, பின் சேலைத் தலைப்பில் இருந்த முடிச்சை அவிழ்த்தாள். அதில் அவளது கணவன் கட்டிய தாலி இருந்தது. மனதில் இறைவனை வேண்டி, கண்களை மூடியபடி தாலியை கழுத்தில் போட்டாள். பின் மடித்து வைத்த வெற்றிலையில் இருந்த குங்குமத்தை எடுத்து பெரிதாக பொட்டு வைத்துக்கொண்டாள்.

அவள் மனதில் திடீரென ஒரு பலம் உதயமானது. சக்தி உருவானது, அச்ச உணர்வு ஓடிப்போனது.

புதிய உயிர் பெற்றது போல் மன அமைதி சந்தோசம் சேர்ந்தே வந்தது போல் உணர்ந்தாள்.

பஸ் நின்றதும் ஒரு புதிய உலகில் கால்வைப்பது போல் மிகுந்த தெம்புடன் இறங்கினாள் தாமரை.

ஒரு கையில் பெட்டியும், மறுகையால் மகனைப் பிடித்தப்படியும் வீறுநடைபோட்டாள் தாமரை.

அவளுக்கு எதிரில் வந்தவர்கள், ஒதுங்கி வழிவிட்டார்கள். அவர்களைப் பார்த்துச் சிரித்தபடி நடந்தாள் தாமரை.


அருகில் ஒரு கடை இருந்தது. அங்கே போய் பணம் கொடுத்து மகனுக்கு ஒரு பிஸ்கட் வாங்கும் போது கடைக்காரர் என்னம்மா வேணும்?

பிஸ்கட் வாங்கிக்கொண்டு, இந்த வழியா போனா தோட்டத்துக்குப் போகலாமா? தாமரை கேட்டதும்.

போகலாம் அம்மா, இப்படியே நடந்து போங்க மிகவும் மரியாதையுடன் கடைக்காரர் பேசுவது கண்டு, ஆச்சரியப்பட்டுப் போனாள் தாமரை. இன்றிலிருந்து எல்லாமே நல்லபடியாக நடக்கும் யோசித்தப்படி தாலியைக் கண்ணில் ஒற்றி கைகளை வீசியபடி ஒய்யாரமாக நடந்தாள் தாமரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மங்கலம்-மங்களம்

வே.முல்லைத்தீபன்

தமிழர் பண்டிகைகளின் போதும், திரு மண நிகழ்வுகளின் போதும் 'மண் கலயத்தை' வைத்து வழிபடுவது சிந்து சம வெளி காலம் தொட்டு இன்றும் தொடரும் மரபு. எனவேதான் நல்ல நிகழ்வுகளின் போது மண்கலம் பெருகட்டும் என்று வாழ்த்தியதே பின்நாளில் மண்+கலம் மங்கலமாகி பிற்கா லத்தில் மங்களமாகியது என்கின்றனர் மொழி யியலாளர்கள்.

'மங்கலம்' எனும் சொல்லு இரு வேறு இடங்களில் இவ்வாறு வருகிறது..

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு (குறள் 60)

இல்வாழ்க்கையில் மங்கலமாக அமைவது மனைவியின் நற்குண நற்செயல்களே ஆகும். அதைப்போல் இல்வாழ்க்கையின் அழகு மிகு அணியாக அமைவது நன் மக்களைப் பெறும் பேறே எனச் சான்றோர் கூறுவர் என்பதே இதன் பொருள்.

முகங்குல் கனைதுயில் எழுந்தோன் முன்னர்
மங்கலம் கூறிய மலிவுரைத் தன்று(கொலு10)

இரவின் கண் நன்கு துயில் கொண்டெ ழுந்த அரசன் முன் மங்கலச் செய்திகளைக் கூறுதல் என்பதே இதன் பொருள்.

மங்கலம் என்பதற்கு அழகு, சுபம், நன்மை, தாலி என்று பொருள். வேதம் ஓதும் அந்தணர்களுக்கு அளிக்கப்பட்ட (இறை யிலி) கிராமங்களை மங்கலம் என கல்வெட் டுகள் கூறுகின்றன.

மங்களம் என்பது இடையிலே வந்திருக் கிறது. இந்த 'ளகரம்' வட மொழியில் கிடை யாது. ஆனால் 'மங்கள்' எனும் சொல்லை வாய்ச்சொல்லாக பயன் கொள்கின்றனர். 'மங் கள் வார்' என்பது செவ்வாய் கிழமை.

ஆங்கிலத்தில் வரும் peopLe, gLo-be எனும் சொற்களில் வரும் 'லகரம்' 'ளகரம்' ஆகியது போல் இம் மங்கலமும் மங்களமாகி இருக்கலாம்.

சொற்களில் நிலைமொழி என்றும் அதைத் தொடர்ந்து வருதலை வருமொழி எனவும் அழைப்போம். (புணரியலில் அதீத விளக்க முண்டு) கவனித்தால்.. மங்கல நாண், மங்கல நீராட்டு, பொங்கும் மங்கலம் எங்கும் தங்குக என்று வருமொழி தமிழானால் (அதாவது மங் கலம் எனும் சொல்லுக்கு பின்வரும் சொல் தமிழானால்) மங்கலம் என்கிறோம்.

மாறாக..

மங்கள மூர்த்தி, மங்களாரம்பம், மங்களா சாஸனம், மங்கள வாரம், மங்கள ஸ்நானம், மங்களகரம், மங்களகீதம் என்று வரும் இடங்களில் ளகரம் பயில்வதைக் காணலாம். லகரம் இடம்பெறாது.

எனது வாசிப்பினூடே, கிடைத்தவற்றை பகர்ந்துள்ளேன்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அன்புக்கும் மரியாதைக்கும் உரிய வாசகர்களே வணக்கம்.

## வலியுடன் எழுதுகிறேன் வாசிப்பீர்களா?

வலியுடன் எழுதுகிறேன் எனும் புதிய ஒரு தொடர் பக்கத்துக்கு நுழைவோம். கடந்த மாதம் ஒளிஅரசியின் ஆசிரியர் பீட உறுப்பினர் ஒருவருக்கு யாழ்பாணத்தின் கிராமப்புற பாடசாலை ஒன்றில் வாசிப்பு விழிப்புணர்வு தொடர்பாக ஏற்பட்ட கசப்பான அனுபவம் ஒன்றை இங்கே பதிவிட விரும்புகிறேன்.

# ஏன் சில ஆசிரியர்கள் இப்படி?

அரசியலோ ஆபாசமோ அற்ற ஒரு அறிவியல் விழிபுணர்வு படைப்பு தான் எமது வெளியீடு என்பது எம்முடன் தொடர்ந்து இணைந்திருக்கும் சகலருக்கும் தெரியும். அருகிவரும் வாசிப்பு பழக்கத்திற்கு புத்துயிர் ஊட்டுவதற்காக குடும்பத்தில் அனைவரும் வெட்கமும் துக்கமும் இன்றி ஒன்றாக வாசிக்க நல்ல ஒரு வெளியீடு தேவை என்பதையும் எமது உள்நாட்டு சாதனையாளர்களை ஊக்கப்படுத்த ஒரு தனி ஊடகம் தேவை என்பதையும் உணர்ந்து எமது பேனாவுக்கு நமே சில விலங்குகளை இட்டு மிகுந்த சிரமத்தின் மத்தியில் பல பொருளாதார நெருக்கடியிலும் இதனை வெளியிட்டு வருகின்றோம் .

ஒரு புத்தகத்தை வெளியிடுவது என்பது ஒரு குழந்தையை பிரசவிப்பது போன்றது என்பதும் அதன் வெளியீட்டில் எவ்வளவு சிக்கல்கள் உள்ளது என்பது ஆசிரியர்களுக்கு தெரியாதது அல்ல.

அதுவும் தமிழ் பேசும் மக்களை சிறு தொகையாக கொண்ட எமது நாட்டில் சஞ்சிகை ஒன்றை வெளியீடுவது என்பது கல்லில் நார் உரிப்பது போன்றது. இருப்பினும் எமது உத்தியோகத்தர்களின் அதீத அர்பணிப்பினாலும் எமது அறிவியலை நோக்கிய வாசகர்களினதும், நல்லுள்ளங்களினதும் ஒத்துழைப்பினாலும் நான்கு வருடமாக மாதாந்தம் தவறமால் வெளியிட்டு வருகின்றோம். இந்நிலையில் இவ்வருடம் ஜனவரி தொடக்கம் **கல்விக்கும் அறிவியலுக்கும் கரம் கொடுப்போம்** என்னும் நல்ல உதவிச்செய்யத்திட்டம் ஒன்றை வறுமைப்பட்ட மாணவர்களை நோக்கி ஒளிஅரசி மூலம் முன்னெடுத்து வருகின்றோம்.

அந்த வகையில் வாசகி ஒருவரின் விண்ணப்பத்திற்கு இணங்க அவரது கபொத சாதாரண தரம் படிக்கும் மாணவனுக்கு பாடசாலை அதிபரின் மேற்பார்வையில் கல்விக்கான உதவித் தொகை ஒன்றை காலை ஆராதனை வேளையின் போது வழங்கி ஒளிஅரசி சஞ்சிகையினையும் அறிமுகம் செய்து வாசிப்பின் மகத்துவம் தொடர்பான ஒரு விழிப்புணர்வு கருத்துரையையும் அதற்கு ஒளிஅரசி எந்தளவுக்கு பொருத்தமானது என்பது தொடர்பான விளக்கமும் எம்மால் வழங்கப்பட்டு சந்தா இணைப்புக்காக 15 புத்தகங்களும் வழங்கப்பட்டு விரும்பும் ஆசிரியர்களை இணைக்குமாறு நூலக ஆசிரியரிடம் அன்புடன் கேட்டு விடைபெற்றிருந்தோம்.

இரண்டு வாரங்கள் கடந்து வழங்கப்பட்ட புத்தங்களின் நிலைப்பாட்டை அறிவதற்காக பல தொலைபேசி அழைப்புக்களை நாம் வழங்கியிருந்தோம். இவ்வாறு காலம் ஓடி மூன்று மாதம் ஆகியது.

எமது உத்தியோகத்தர் மூன்று மாதத்திற்கு பின்பு நேரடியாகச்சென்று நூலக ஆசிரியரைச் சந்தித்தபோது நூலக ஆசிரியர் கூறிய பதில் எமக்கு அதிர்ச்சியாகவும், அதே நேரம் ஆசிரியரது அறியாமை தொடர்பான ஒரு விழிப்புணர்வையும் துக்கத்தையும் தந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புத்தகங்கள் எதுவும் எடுத்து தொடப்படாது புதிதாகவே இருந்தன. ஆசிரியர்கள் விரும்பவில்லை எனவும், மாணவர்களுக்கு தப்பான விடயங்களை இச்சஞ்சிகை வழங்குகின்றது எனவும் சர்வசாதாரணமாக கூறினார். எமது சஞ்சிகைகளில் எழுதப்படும் விடயங்கள் தொடர்பாக நாம் மிகவும் அவதானமாகவே ஆக்கங்களை செவ்வைபார்த்து வருகின்றோம். எமது பேனாக்களுக்கு விலங்கிட்டு உற்பத்தி செலவுக்கு அமைய 75ரூபாயிற்கு வழங்கிவரும் எமக்கு இந்த ஆசிரியரின் பதில் முகத்தில் அடித்தது போலாயிற்று.

''ஏன் ரீச்சர் நன்றாக நீங்கள் வாசித்துவிட்டுத்தான் கதைக்கின்றீர்களா?'' என்றதும் இல்லை ''இது ஆசிரியர்களின் கருத்து'' என மொட்டையாக கூறினார். ''தயவுசெய்து எந்த ஆசிரியர் எனக் கூறினால் அந்த ஆசிரியருடன் கதைத்து குறைபாட்டை நீக்க முடியும் என நாம் கேக்க'' ''அது தேவையில்லை'' என நூலக ஆசிரியர் முகங்சுழித்தார்.

2015 பெப்ரவரி மாதம் வெளியிட்ட எமது சஞ்சிகையில் பிரபல அறிவிப்பாளரான நாவாவின் குடும்பத்தை நேர்காணல் செய்து உண்மைக்காதல் எது? என்னும் முகப்பு அட்டை விழிப்புணர்வுடன் கட்டுரை ஒன்றை தீட்டி அக்கட்டுரை மூலம் ''உன்னை நீ காதலி, உன் தொழிலை காதலி, இவை இரண்டும் சிறக்கப்பெற்றால் உனக்கு ஏற்ற வாழ்க்கைத்துணை தானாக தேடிவரும்'' என்ற அற, அறிவியில் ரீதியான காதல் தொடர்பான மாற்றுப்பார்வை விளக்கம் ஒன்றை வழங்கியிருந்தோம்.

இந்த விடயத்தையே மேலோட்டமாக தலைப்பை மட்டும் வாசித்த ஆசிரியர் ஒருவரின் பூரண வாசிப்பற்ற குற்றச்சாட்டே இதுவாகும். மேலோட்ட வாசிப்பு கூடாது, பூரண வாசிப்பே அவசியமென பாடம் புகட்டும் ஆசிரியரே இவ்வாறு ''படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோவில்'' என நடப்பதால் எமது பிள்ளைகளின் எதிர்காலம் எவ்வாறு இருக்கப்போகின்றது என வியக்க வைக்கின்றது.

வருத்தத்துடன் ஆசிரியர்களின் குறுகிய நடத்தையால் மனமுடைந்த எமது உத்தியோகத்தர் மிகுந்த வருத்தத்துடன் 15 புத்தகங்களையும் மடிப்பு குலையாது எடுத்துக்கொண்டு குறித்த ஆசிரியருக்கு பொறுமையாக நன்றி கூறி விடை பெற்றார்.

சமூகப்பணியில் எத்தனையோ சங்கடங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது, பாடசாலை சார்பாக நூலகம், ஆசிரியர் ஓய்வறை ஆகிய இரண்டுக்குமாவது ஒவ்வொரு பிரதிகளையேனும் எடுத்திருக்கலாம். (ஒரு ஆசிரியர் மாதாந்தம் 2ரூபா பங்களிப்பு செய்திருந்தாலும் இக்காரியம் நன்றே முடிந்திருக்கும்) ஆனால் அது கூட நடக்கவில்லை. இதே நேரம் யாழ்ப்பாணத்தின் பிரபல பாடசாலைகள் 75 க்கு மேற்பட்ட புத்தகங்களை சுயமாகவே எம்மிடம் பெற்று தமது மாணவர்களை அறிவியலை நோக்கி வழிப்படுத்தி வருகின்றனர். இதே போல் ஏனைய பாடசாலைகளும் பாடசாலைகளின் இயலுமைக்கு ஏற்ப 5 தொடக்கம் 15 வரையான புத்தகங்களை பெற்று எமது வாசிப்பு விழிப்புணவர்வு செயற்றிட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

அன்பான ஆசிரியர்களே எதையும் தீர ஆராயாது விமர்சனம் செய்யாதீர்கள். சுயநலன் பெருகி நேரங்கள் வேகமாக நகர்ந்து வரும் இக்காலத்தில் சமூக நலன் நோக்கி செயற்படும் உத்தியோகத்தர்கள் மிகக்குறைவு. சில நேரங்களில் நீங்கள் தெரிவிக்கும் குற்றச்சாட்டுக்கள் உங்களை நாடி வருபவர்களை காயப்படுத்தி அவர்களின் உற்சாகத்தை மந்தப்படுத்தி விடும் என்ற அன்பான கோரிக்கையுடன் இப்பக்கத்தை நிறைவு செய்கின்றேன்.

வலியுடன் எழுதினேன்
வாசித்தீர்களா?
வாசிப்பை நேசிப்பீர்களா?
நேசிப்பை யாசிப்பதற்காக
உங்கள் நேசக்கரங்கள் நீளுமா?

ஆசிரியர்

**வாசித்துப் பார்**
**காலம் உன்னை**
**வாசிக்கும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு / இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி ஆசிரியரான சுபாஷினி பிரணவன் எழுதிய ''குமுறல்'' கவிதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் இடம்பெற்றது. அந்நிகழ்வின் பதிவுகள் சில. குமுறலின் நாயகிக்கு ஒளிஅரசியின் வாழ்த்துக்கள். இவரது படைப்பு பயணம் மேலும் தொடரட்டும்.



ஊடக அனுசரணை





உடுகொடை யஹ்யா அய்யாஷ் எழுதிய ' நீ நிறைந்த நான்' கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த 22/10/2017 அன்று திஹாரிய அங்கவீனர் நிலைய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கலாபூஷணம் தமிழ்த் தென்றல் அலி அக்பர் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு சிரேஷ்ட ஊடகவியலாளரும் பன்னூலாசிரியருமான அஷ்ரப் சிஹாப்தீன் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். நூலின் முதற்பிரதியை அல்ஹாஜ் M A M இக்ராம் அவர்கள் பெற்றுக்கொண்டார். நிகழ்வுக்கு சிறப்பு அதிதிகளாக அல்ஹாஜ் ஸிராஜ் ஸகரிய்யா (C-ML MTD நிறுவனம்) , லேக்ஹவுஸ் தமிழ்ப் பிரிவு ஆலோசகர் கலாபூஷணம் நிலாம் அவர்கள் மற்றும் அல்ஹாஜ் ரூன் அவர்களும் கலந்து கொண்டனர்.

நூல் ஆசிரியர் அறிமுகத்தை தாருஸ் ஸலாம் கல்லூரியின் பிரதி அதிபர் அஸாம் ஆசிரியர் நிகழ்த்தினார்.நூல் விமர்சனத்தை மேமன் கவி அவர்கள் நிகழ்த்தியதோடு நயவுரையை கவிஞர் நாச்சியாதீவு பர்வீன் அவர்கள் நிகழ்த்த வாழ்த்துரைகளை கலாபூஷணம் மு. பஷீர் அவர்களும் கலாபூஷணம் கவிமணி நஜ்முல் ஹுசைன் அவர்களும் நிகழ்த்தினர். கவிவாழ்த்து சந்தக் கவிமணி கிண்ணியா அமீர் அலி அவர்களால் பாடப்பட்டது.

கவிஞர்கள் கலைஞர்கள் புத்திஜீவிகள், அதிபர்கள், ஆசிரியர்கள்,ஊர்மக்கள் என மண்டபம் நிறைந்த ஒரு நிகழ்வாக இந்நிகழ்வு அமைந்திருந்ததென்பது குறிப்பிடத்தக்கதாகும்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நிகழ்வுப் பதிவு








ஊடக அனுசரணை

கொழும்பு மகளிர் இந்து மன்றம் வலுவிழந்தோர் உதவித்திட்டத்திற்காக நடாத்திய விற்பனை கண்காட்சியானது 14.10.2017 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றது. மகளிர் சுயதொழில் விற்பனைக் கூடங்கள் பலவும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. வலுவிழந் தோருக்கான உதவி நிதிக்காக இவ்வாறான ஒரு சிறந்த செயற்றிட்டத்தினை முன்னெடுத்துள்ள மகளிர் இந்து மன்றத்தினரை ஒளிஅரசியின் சார்பில் வாழ்த்துவதுடன் காட்சிப்படுத்தப்பட்டி ருந்த அத்தனை கூடங்களும் அவைபற்றிய விபரங்களும் ஒளிஅரசியில் தொடர்ச்சியாகப்பிரசு ரிக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org